# த்தம்

மு.கருணாநிதி

28038



தென்றல் நூற் பதிப்புக் கழகம்

தென்றல் வெளியீடு க.

# ஒரே முத்தம்.

சரித்திரக் கற்பனை நாடகம்.

★

ஆசிரியர் :

மு. கருணாநிதி.

## தென்றல் நூற்பதிப்புக் கழகம்.

சலகண்டபுரம். : : : சேலம் மாவட்டம்.

[விலை : ரூ. 1-4-0.

பதிப்புரிமை.]

FIRST EDN. JUNE 50.

# "ORAY MUTTHAM."

★

Published by :
THENRAL BOOKS PUBLISHING SOCIETY,
Printed at :
THE SENTHAMIZH PRINTING WORKS,
Jalakantapuram, - (Salem Dist.)

★

இந்நூலின் எல்லா உரிமையும் ஆசிரியருக்கே.
மேடையில் நடத்திக் கொள்ளமட்டும், தேவி
நாடக சபையாருக்கு உரிமை வழங்கப்பட்டது.

## முன்னுரை.

இலங்கையில் நிகழ்ந்த ஒரு சரித்திரத்தின் சிறு சிதறலை அடிப்படையாகக் கொண்டது "ஒரே முத்தம்." இந்நாடகத்தைப்பற்றி இதைத் தவிர நான் எதுவும் கூறுவதற்கில்லை. இந்நாடகத்தை முதலில் அரங்கேற்றிய தேவி நாடக சபையினர்க்கு எனது நன்றி.

நூல் வடிவிலே இதை உங்களிடம் தருபவர் தென்றல் நூற்பதிப்புக் கழகத்தார். கழகத்தின் உரிமையாளர் திரு. ப. கண்ணன் அவர்கட்கு என் மேலும், கொள்கையின் மேலுமுள்ள நீங்காத அன்பு, நூலின் சிறப்புக்குக் காரணமாகும். அவருக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

சேலம்,
25—5—50.

மு. கருணாநிதி.

# பதிப்புரை.

முத்தமிழின் தனிச் சிறப்பெய்திய முதுபெருந் தமிழகத்தில், நாடகம் வெறும் பக்திமார்க்கப் பாடக மாகவும், பகுத்தறிவைப் பரிகசிக்கும் கேலிக் கூத்தாகவும் ஆக்கப்பட்டு, பயனற்றுப் போய்விட்டது.

வடவர் மொழித் தொடர்பும், நாகரிகச் சேர்க்கையும், ஆதிக்க வெறியும், நமக்கிழைத்த மாபெரும் தீங்குகளில் இஃதொன்று. அறிஞர்கள் மனம் புழுங்கினர். கலைஞர்கள் கவலையுற்றனர். எனினும் வழி பிறக்க வில்லை.

நாட்டுக்கு நலிவுதரும் அந்நிலையை மாற்றி, நற்கொள்கை, உயர் நோக்கம், நாடு—இன—மொழிப்பற்று ஆகிய கருத்துக்களைக் கதையிலேற்றி, கதையை மேடையேற்றி, மக்கள் மனதில் உணர்வேற்றிய பெருமை, தன்மான இயக்கப் படையினரையே சாரும். தமிழின் பகைவரும் இதை மறுக்கார்.

அத்தகைய அறிவுப் படையின் தளபதிகளில் ஒருவர் **தோழர். மு. கருணாநிதி.** அவர் எழுதிய நாடகம் இந்த **ஒரே முத்தம்.** சொல்லில் தெளிவு. கருத்தில் வேகம். நடையில் விறுவிறுப்பு ஆகியவை இவரது எழுத்துப் பண்புகள். மதிப்புக்குரியன.

**ஒரே முத்தம்,** ஓர் வரலாற்றுத் துளியின் கற்பனைப் பெருக்கம். கட்டுக்கோப்பான கதையமைப்புள்ள பல்சுவைப் பின்னல்! நடிப்பதற்கு மட்டு மல்லாமல், படிப்பதற்கும் ஏற்றது. புதுமைத் தமிழனுக்கு, மிகப் பெருமையோடு எங்கள் வெளியீடாக இதனைப் படைக்கின்றோம். இந்நூலை வெளியிட வாய்ப்பளித்த ஆசிரியர் **தோழர். மு. கருணாநிதி** அவர்கட்கு எங்கள் நெஞ்சுகந்த நன்றி உரித்தாகுக.

சலகண்டபுரம்,
10—6—1950

**தென்றல் நூற்பதிப்புக் கழகத்தார்.**

# ஒரே முத்தம்.

## நாடக உறுப்பினர்.

| | | |
|---|---|---|
| புத்தன் | .... | .... இன்பபுரி இளவரசன் |
| மகா வீரர் | .... | .... இன்பபுரி மன்னவர் |
| இமயா | .... | முல்லைக்காட்டுப் பிரதிநிதி (இளித்தவாயர்) |
| விபீஷணன் | .... | இமயாவை இயக்குவோன் (கொடியவன்) |
| பொன்னி | .... | .... தீண்டத்தகாதவள் (சமூகக்கொடுமையில்) |
| குமரி | .... | இளவரசனைக் காதலித்தவள் (சொந்தக்காரி) |
| மலையன் | .... | .... பொன்னியின் தந்தை |
| சித்ரா | .... | .... விபீஷணன் துணைவி |
| யாவி தத்தர் | .... | பூந்தோட்டம் அரசப்பிரதிநிதி |
| ரமேலா | .... | .... தோழிப்பெண் |

அமைச்சர், கிழவன், சேனாதிபதி, காலிகள் மற்றும் பலர்

## நகைச்சுவைப்பகுதி.

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்டம் | .... | விபீஷணன் காலிகளில் ஒருவன் |
| சந்தேகம் | .... | .... குடியானவன் |
| சமயோசிதம் | .... | சந்தேகத்தின் துணைவி |
| கருப்பன் | .... | .... குடியானவன் |

# ஒரே முத்தம்.

**காட்சி 1.** இன்பபுரித் தெரு.

(இளவரசர் புத்தர் பிறந்த நாள் கொண்டாட்டம். ஊர்வலம் வருகிறது. மக்கள் புத்தனைக்காண ஆவலாக ஓடி வருதல்)

"இளைய அரசர் வாழ்க!"

"எங்கே இளவரசர்?"

(என்று கூவிக்கொண்டு வரும் மக்கள், மகிழ்ச்சிப் பெருக்கால் சீமான்கள்மேல் மோதிவிட, அவர்கள் வெறுப்பும் இறுமாப்பும் கொள்கின்றனர்)

**ஒரு சீமான் :-** அறிவு கெட்டவர்கள். அடித்து விரட்டுங்கள்!

(ஒரு கிழவனின் மண்டையில் பலத்த அடிவிழ, அவன் அலறுகிறன்)

**புத்தன் :-** நிறுத்துங்கள்! இது என்ன அக்கிரமம்?

**சீமான் :-** நான்தான் விரட்டச் சொன்னேன். வெறி நாய்கள் மாதிரி வந்து விழுகிறார்கள்.

**புத்தன் :-** அதற்காக நாமும் அப்படி மாறிவிடுவதா? அதுவும் மகிழ்ச்சிகரமான இந்த நாளில்!

**சீமான் :-** சதாரண பிரஜை, சமஸ்தானச் சீமான்களின் மேல்...........

**புத்தன் :-** சாதாரணப் பிரஜை! அந்தப் பிரஜையின் ரத்த வியர்வைதான் பிரபுக்களின் மாளிகை, பிரபுக்களின் மகிழ்ச்சி, பிரபுக்களின் வாழ்வு! என்னைப் பார்க்க ஆவலுடன் ஓடிவரும் இந்தப் பாட்டாளிக்கு இதுதானா பரிசு? (என்று கிழவனிடம் நெருங்கி பரிவோடு) பெரியவரே! வருந்தாதீர். அறியாமல் நடந்து விட்டது. இதை வைத்துக் கொள்ளும். (முத்துமாலை யளித்தல்)

**கும்பலில் ஒருவன் :-** (கிழவனிடம்) அடிச்சாலும் அடிச்சாங்க, அந்த முகூர்த்தமா உனக்கு அதிர்ஷ்டம் அடிச்சுது தாத்தா!

**கிழவன் :-** புண்ணியவான்! என்ன எரக்கம், என்ன தயவு, என்ன கருணை, நீடுழி வாழணும்!

(ஊர்வலம் மீண்டும் வாத்தியங்களுடனே நகர்கின்றது)

**காட்சி 2.** விழா மண்டபம்.

(அரசர் மகாவீரர், அமைச்சர், யாளிதத்தர், மற்றும் சேனதிபதி குடிமக்களும். பெண்கள் பகுதியில் குமரி, ரமேலா மற்றும் பலரும். நடனம் நடைபெறுகிறது. முடிந்ததும்.)

**அமைச்சர் :-** வணக்கம். அன்புடையீர்! இளவரசர் புத்தரின் பிறந்த தினமாகிய இந்தப் புனிதமான விழாவில், இன்பபுரி மக்களின் சார்பாகப் பல்லாண்டு கூறுகிறேன்.

(சபையில் வாழ்த்தொலி கிளம்புகிறது)

"இளவரசர் வாழ்க!"

**யாளி தத்தர் :-** (எழுந்து) பூந்தோட்டத்தின் ராஜப்பிரதிநிதி என்ற முறையிலே இளவரசருக்கு இந்தப்பரிசை வழங்குகிறேன். சமத்துவத்தைக் குறிக்கும் இந்தப் பரிசு, எதிர்கால இன்பபுரி பற்றிய என் கனவு! சக்கரவர்த்தி மகாவீரருக்குப் பிறகு மகுடம் சூடப்போகும் இளவரசரின் காலத்தில் என் கனவு பலித்துவிடும் என்று நம்புகிறேன். இந்தப் பிறந்த தினத்திலே நாமும் நம் நாட்டின் மேன்மைக்குப் பாடுபடுவதாகப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்வோம். வாழ்க இளவரசர்!

(பாட்டாளி, பணக்காரன், சமங்குறிக்கும் "தராசு" பரிசு தருதல். மற்றும் சோலை மாவட்டம், மயில்பண்ணை, பசுநாடு ஆகியவற்றின் பிரதிநிதிகள் பரிசு வழங்குதல்)

**புத்தன் :-** அன்புள்ளவர்களே! உங்கள் ஆர்வத்திற்கு என் நன்றி. நண்பர் யாளிதத்தர் குறிப்பிட்டது போல், இது என்

பிறந்த நாள் மட்டுமல்ல; இன்பபுரியின் இன்ப வாழ்வுக்காகப் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள ஆண்டுதோறும் நடைபெறும்விழா. இந்நாட்டின் வருங்காலம் யாளிதத்தருக்குக் கனவு. எனக்கு என் வாழ்வின் லட்சியம். உயர்ந்த லட்சியம். உன்னதமான லட்சியம்! என் உயிரோடு உயிராக உறைந்து கிடப்பது இந்நாட்டு மக்களின் இன்ப வாழ்வு. பேதமற்றப் பெருவாழ்வு. சீமான் ஏழை என்னும் நிலை ஒழிந்த சிங்கார வாழ்வு. இதுவே என் மூச்சு. என் இதய கீதம். இந்த லட்சயத்தில் வெற்றிபெற எதையும் தியாகம் செய்வேன். வேண்டுமானுல் இன்பபுரியின் மகுடத்தைக்கூட! **(கை தட்டலும், வாழ்த்தொலியும்.)** வருங்கால இன்பபுரி சாம்ராஜ்யத்தில், ஏழை, பணக்காரன் இருக்கமாட்டான். கீழ் சாதிக்காரன், மேல் சாதிக்காரன் இருக்க மாட்டான். ஆண்டான், அடிமை இருக்க மாட்டான். மனிதன்தான் இருப்பான்.

**(மீண்டும் வாழ்த்தொலி கிளம்புகிறது. கூட்டம் கலைகிறது. விழா முடிந்து எல்லோரும் செல்கின்றனர். குமரியும், தோழி ரமேலாவும் மட்டும் மிஞ்சுகிருர்கள். பரிசுகளையே கவனித்த குமரியின் முகக்கோணலை ரமேலா கவனிக்கிருள்.)**

**ரமேலா :-** என்னம்மா, விம்முகிருய்? நீ ஒன்றும் பரிசளிக்கவில்லை என்றுதானே? இளவரசர் உன்னையே பரிசாக ஏற்றுக் கொள்வார், கவலைப்படாதே.

**குமரி :-** ரமேலா! என் உயிரோடு உயிராக உறைந்து கிடப்பது இந்நாட்டு மக்களின் இன்பவாழ்வு. பேதமற்றப் பெருவாழ்வு. சீமான், ஏழை என்னும் நிலையொழிந்த சிங்கார வாழ்வு.

**ரமேலா :-** ஓ! அதோடு குமரியையும் சேர்த்துக் கொள்ளவில்லை, அதுதானே?

**குமரி :-** **(கோபமாக)** ரமேலா!

**ரமேலா :-** குமரீ! கூட்டத்தில் சொல்லும் விஷயமா அது? ஒரு காலம் வரும். அப்போது மஞ்சத்தில் கொஞ்சலோடு சொல்லுவார். அப்போது இந்நாடு, மக்கள், சீமான், ஏழை எல்லாம் வாயில் வராது. **(புத்தன் போல் நடித்துக்கொண்டு.)** என் உயிரோடு

உயிராக உறைந்து கிடப்பது குமரி என்ற குயில்! அவள் அழகு! அவள் மஞ்சம்.

குமரி :- ரமேலா! பேசாமலிருக்க மாட்டாய்?

(குமரி புத்தனின் படத்தில் மெய்மறந்திருக்கிருள்.)

ரமேலா :- ஓ! இளவரசரோடு பேசுகிருயா? அது படம்.

குமரி :- இந்தப் படத்திற்கு மட்டும் பேசும் சக்தி இருந்தால்.........!

ரமேலா :- இங்கிருந்து என்னை விரட்டி அடிப்பாய்.

(குமரி பெருமூச்சோடு நகர்கிருள்)

ரமேலா :- இப்படி வாடுகிருயே. ஒரு வார்த்தை அவரிடம் கூறி விடேன். உன் அத்தான் தானே?

குமரி :- மறுத்து விட்டால்?

ரமேலா :- மறுப்பது மனோரஞ்சித மலரையா?

குமரி :- ரமேலா! இளவரசர் எண்ண மெல்லாம்............

(என்று ரமேலாவைப் பார்க்கிருள் ஆசையோடு)

## காட்சி 3. மாளிகையில் ஒரு புறம்.

(அமைச்சர் அரசர் மகாவீரர்)

அமைச் :- இளவரசரின் எண்ணமெல்லாம் இன்பபுரியின் எதிர்காலத்தைப் பற்றியது. நாட்டை இன்ப லோகமாக சிருஷ்டிப்பதே அவரது லட்சியம். அந்தப்பாதையில் யார் குறுக்கிட்டாலும் பொருட்படுத்த மாட்டார்.

மகாவீரர் :- அதுதான் சுத்தவீரனின் பண்பு. அமைச்சரே!

இனி நான் சாகமாட்டேன். என் மைந்தனின் புகழ் ஜீவித்திருக்கும் வரையில் என் பெயரும் ஜீவித்திருக்கும்.

(புத்தன் வருகிறன்.)

**புத்தன் :-** அப்பா!

**மகாவீ:-** புத்தா! இந்த ஆண்டு பிறந்தநாள் பரிசாக (புத்தன் சுற்று முற்றும் பார்க்கிறன்) ஒரு வேலை தரப்போகிறேன்.

**புத்தன் :-** ஆணை.

**மகாவீரர் --** முல்லைக்காட்டில் நமது ராஜப் பிரதிநிதியைத் தெரியுமல்லவா?

**புத்தன் :-** ஆம். இமயா. அவர் இன்று விழாவுக்குக் கூட வரவில்லை.

**மகாவீரர் :-** வர மாட்டான் வக்கிர மூளைக்காரன். உனக்கு விபீஷணனைக்கூடத் தெரிந்திருக்குமே.

**புத்தன் :-** நன்ருகத் தெரியும். இமயாவின் ஆலோசனை மந்திரி.

**மகாவீரர் :-** இருவரும் சேர்ந்து கொண்டு முல்லைக்காட்டில் கொடுங்கோல் நடத்து கிறர்களாம்.

**புத்தன் :-** கொடுங்கோல்! நம் வம்ச வரலாற்றிலேயே இல்லாத வார்த்தை. (ரமேலாவும், குமரியும், அந்தப்பக்கம் வந்தவர்கள் நின்று கவனிக்கிருர்கள்.)

**மகாவீரர் :-** அதற்காகத்தான் உன்னை அழைத்தேன். நீ உடனே முல்லைக்காடு சென்று, அந்த அரசியலைத் திருத்தி யமைக்க வேண்டும். கொடுங்கோல் வளரக் கூடாது.

**புத்தன் :-** ஆணை.

**மகாவீரர் :-** அவர்கள் செய்யும் அநியாயங்கள். அளவிட

முடியாதாம். ஆதாரங்களோடு அகப்பட்டு விட்டால் ஆயுள் தண்டனை தான் அவர்கட்குச் சன்மானம்!

**அமைச்சர் :-** ஆதாரம்!........ அப்படியானல் இளவரசர் மறைமுகமாக இருந்து கண்டுபிடிக்க வேண்டும்:

**மகாவீரர் :-** ஆம். அப்படித்தான் செய்ய வேண்டும்.

**அமைச்சர் :-** முல்லைக்காடெங்கும் மூர்க்கர்கள் உலாவுகிறார்களாம். அவர்களைக் கூண்டோடு அழிக்க வேண்டும்

**மகாவீரர் :-** எல்லோரும் இமயாவின் ஆட்கள் தாளும். எதற்கும் முதலில் ஆதாரங்கள் தேடுவது அவசியம். இளவரசன் துப்பறிவதுதான் சிறந்த வழி.

**அமைச்சர் :-** ஆபத்தானவேலை. அவருக்குத்துணையாக யாரையாவது அனுப்பினல்?

**மகாவீரர் :-** உண்மை. யாரை அனுப்புவது?

"நான் போகிறேன்" (என்று கூறியபடி குமரி அருகே வருகிருள்)

**புத்தன் :-** இல்லை. யாரும் தேவையில்லை. நானே செல்கிறேன்.

**குமரி :-** இளவரசர் யோசிக்காமல் கூறுகிருர் மாமா!

**மகாவீரர் :-** ஆம்! இமயாவைப்பற்றி வந்திருக்கும் செய்திகள் அதி பயங்கரமானவை!

**புத்தன் :-** வேண்டுமானல் சிலவீரர்களோடு செல்கிறேன்.

**மகா :-** வீரர்களும் வேண்டியதுதான். அதோடு.......

**குமரி :-** வீரம், போருக்கு முக்யமானது. ஆனல் சிங்கத்தையும் நரி ஏமாற்றிவிடும்.

**புத்தன் :-** அதற்காக?

குமரி :- நாமும் நரிகளாய் மாறி நடிக்க வேண்டும்.

புத்தன் :- நடிப்பதா பிரமாதம்?

குமரி :- அதில் ஆண்களைவிடப் பெண்கள் திறமைசாலிகள். சதிகாரர்களைப் பிடிக்க பெண்களின் சாகசம் நல்ல வலை.

மகாவீரர் :- உண்மை! உண்மை! புத்தா! பகைவரின் நெஞ்சில் நுழையக்கூட பெண்களுக்குப் பயிற்சி உண்டு. அதிலும் குமரி உன் நலத்தையே நாடுபவள்.

குமரி :- மாமா! நான் அவரோடு போகலாமல்லவா?

மகாவீரர் :- நீ இளவரசனுடனேயே இருக்கத்தானே நான் ஆசைப்படுகிறேன்.

புத்தன் :- கொடுமையாளரின் குகைக்குள் நுழையவேண்டும். அதற்குக் குமரி ஏற்றவளல்ல.

மகா :- குமரியைக் கோழையாக நினைக்கிறாய் புத்தா!

குமரி :- அப்படி யில்லை மாமா! பெண் வர்க்கத்தையே பேதைகளாக நினைக்கிறார். மாமா! அவர் என்னை அழைத்துச் செல்ல வேண்டாம். நான் தனியே செல்ல எனக்கு அனுமதி கொடுங்கள்.

புத்த :- வேண்டாம், வேண்டாம். என்னுடனேயே வரட்டும்.

மகா :- புத்தா! ஜாக்ரதை! குமரியை அழைத்துச் செல்கிறாய். விபீஷணன் இமயா வெறியாட்டங்கள், மது மங்கை இரண்டுந்தானம்.

(புத்தன் வணங்கிச் செல்ல)

மகா :- புத்தா! ஆதார மில்லாமல் யாரையும் அவஸ்தைப் படுத்தாதே!

புத்தன் :- தந்தையே! நீதியின்மேல் ஆணை! நேர்மை தவறி நடக்க மாட்டேன்.

மகா :- வாழ்க !......... வெல்க !

(எல்லோரும் செல்லல். குமரியை ஜாடையாகப் பார்த்து ரமேலா சிரித்தல். குமரியின் ஆனந்த கீதம்,)

## காட்சி 4. இமயாவின் மாளிகை.

(மதுவருந்தும் காட்சி—இரு பெண்களின் சில நிமிட நடனம்)

விபீஷ :- மது, மங்கை இரண்டுந்தான் கவலை தீர்க்கும் மருந்துகள்.

இமயா :- ஆமாம். மருந்துகள்! கடலெல்லாம் மதுவாகி விட்டால்.........

விபீஷ :- மணல்களை யெல்லாம் மங்கைகளாக்கி மதுக் கடலில் ஜலக்கிரீடை செய்யலாம் !

இமயா :- மாளிகை முழுதும் மாதர்கள். மாதர்கள் கையிலே மதுக்குடங்கள் . விபீஷணரே ! அந்த இடம் !.........?

விபீஷ :- அசல் இந்திர லோகந்தான் ! மதுக்கோப்பைகள். அதைப் பிடித்திருக்கும் மலர்க்கரங்கள். அடா டா டா ! இன்பம் ! இன்பம் ! இன்பம் !!

இமயா :- இன்பம் ! இன்பம் ! இன்பம் ! மதுவை அந்த மாதர்களின் வாயில் ஊற்றி, அதை உறிஞ்சிக் குடித்தால்?

விபீஷ :- மலரில் வழியும் தேனை வண்டு குடிப்பது போல் மனோகரமாயிருக்கும்.

இமயா :- பேஷ் ! விபீஷணரே ! கவிஞனைப் போல் பேசுகிறீர்.

விபீஷ :- (மதுவைக் காட்டி) எல்லாம் இந்த மகேஸ்வரியின் அருள்.

இமய :- ஆஹா! அருளே அருள்!

(ஒரு பெண்ணின் சிலையை உற்று நோக்க அது மகாவீரர் போலத் தெரியவே)

இமய :- மகாராஜா! மகாவீரர் நம்மையே பார்க்கிறார். மடையர்.

விபீஷ :- (சிரித்தபடி) மண்ணாங்கட்டி ராஜா!

(சிலையை உதைக்கவே அது விழுகிறது.)

இமய :- நன்றாகச் சொன்னீர். இந்தச் சிலை இருக்குமிடத்தில் என் சிலையல்லவா இருக்க வேண்டும்!

விபீஷ :- இங்கென்ன? இமயாவை இன்பபுரியின் ரத்ன சிம்மாசனத்தில் இருக்க வைக்கிறேன்.

இமயா :- இருக்க வைப்பீர். ரத்னசிம்மாசனம்! அதனருகே பொன் குடத்தில் புதிய மது. வைரக் கிண்ணத்தால் அதை மொண்டு என் வாயில் ஊற்றும் வனிதாமணிகள், விபீஷணரே! விரைவில் அந்தப் பதவி வரவேண்டும்.

விபீஷ :- வந்தே தீரும்.

இமய :- வந்தே தீரும்.

விபீஷ :- வலையை வீசி விட்டேன். விரைவில் சதிவேலைகள் முடிந்து விடும். பாக்கி யிருப்பது படையெடுப்பு. இன்பபுரிக் கோட்டையின் முற்றுகை! மன்னன் ஓட்டம்! நமது ஆட்சியின் ஆரம்பம்

இமய :- புத்தனை மறந்து விட்டீர்.

விபீஷ :- அவன் கன்றுக்குட்டி, என்னைக்கண்டாலே கலங்கி விடுவான்.

இமய :- கலங்கிவிடுவான் கோழை! விபீஷணரே! படையெடுப்ப தென்றால் நானும் வரவேண்டுமோ?

விபிஷ :- வேண்டாம், வேண்டாம்!

இமய :- வேண்டியதில்லை. அற்ப விஷயத்திற்கு நான் வேறு.

விபிஷ :- இமயா! நீர் பாதுகாப்பிலிருக்கலாம்.

இமய :- பாதுகாப்பென்ன! ஒரு பத்தாயிரம் வீரர்களோடு ஒரு குகைக்குள் இருந்தால் போகிறது. எனக்கொன்றும் பயமில்லை.

விபிஷ :- நீர்தான் அஞ்சா நெஞ்சம் படைத்த வீர சிங்கமென்று நாடெல்லாம் சொல்கிறார்களே.

இமய :- ஆ! அப்படியா சொல்கிறார்கள். (நெஞ்சைத் தடவிக் கொண்டு)

விபிஷ :- ஆமாம்.

இமய :- உம். படைதிரட்ட நிறையப்பணம் வேண்டுமே?

விபிஷ :- பணவசூல் நடந்துக்கொண்டுதானிருக்கிறது. போரை முன்னிட்டு நம் பொக்கிஷத்தைப் பாதி நிரப்பிவிட்டேன். (மதுவைக் கோப்பையில் ஊற்றுகிறான்.) எங்கு பார்த்தாலும் நம் ஆட்கள் வரி வசூல் செய்கிறார்கள்.

இமய :- வரியா?

விபீஷ :- ஆம்! பிறந்தால் வரி, வாழ்ந்தால் வரி! இறந்தாலும் வரி! ஒரே வரி மயம்.

இமய :- வரி! மகாராஜாவுக்குத் தெரிந்தால் மகா ஆபத்தாயிற்றே.

விபிஷ :- பைத்யம்! உளறுதீர்! மகாராஜாவின் ஆணிவேரையே பிடுங்க அருமையான திட்டம் போட்டிருக்கிறேன்.

இமய :- குடி ஜனங்கள் சக்ரவர்த்தியிடம் முறையிட்டால்?

விபிஷ :- குடி ஜனங்கள். குடலைப் பிடுங்கி விடுவேன், வாயைத் திறக்கவே மாட்டார்கள்.

இமய :- என்னமோ, எனக்கு பயமாயிருக்கிறது.

விபிஷ :- உஸ், பேசாதீர்! முல்லைக்காட்டின் சாதாரண ராஜப்பிரதிநிதி.........இன்பபுரியின் மகுடம். இதில் எது வேண்டும்?

(இரண்டு மதுக்கோப்பைகளை தனித் தனி சுட்டிக்காட்டுகிறான்)

இமய :- மகுடம்! மகுடம்! இன்பபுரி மகுடம்!

விபிஷ :- மகுடம்!

இமய :- மகுடம்!

விபிஷ :- மது!

இமய :- மது!

விபிஷ :- மங்கை!

இமய :- மங்கை!

விபிஷ :- வேண்டுமானால் எதிர்த்துப் பேசாதீர்

இமய :- பேசவில்லை.

(இரண்டு மதுக் கோப்பைகளையும் ஆளுக்கொன்றாக எடுத்துச் சுவைக்கின்றார்கள்)

## காட்சி 5. முல்லைக்காட்டு நகரத் தெரு.

(விபீஷணன் ஆட்கள் ஒரு வாலிபனைக் கட்டி இழுத்து வருகிறார்கள். (திரை). "எதிர்த்துப் பேசாதே" என்ற அதிகாரக் குரலுடன் ஆரம்பமாகிறது.)

"எதிர்த்துப் பேசாதே"

ஒருவன் :- ராஜப் பிரதிநிதி இமயாவின் உத்தரவு. எடு வரியை! (மீண்டும் அடித்தல்)

வாலி :- கடவுளே! இந்த மிருக ஆட்சிக்கு முடிவு கிடையாதா?

முரடன் :- ஹ ஹ ஹ! கடவுள் பக்தர் அவதிப்படுகிறார் வந்து காப்பாற்றப்பா!

(வாலிபன் மனைவி ஓடிவந்து கணவன் மேல் விழுகிறாள் அந்த அடிகளை அவள் வாங்குகிறாள். பிறகு அவள் வீராவேசங் கொண்டு)

மனைவி :- இந்தா! உன் வரி. அவரை உயிரோடவாது விடு.

(தன் தாலியைக் கழற்றிக் கொடுக்கிறாள்)

வாலி :- தாலி. நான் கட்டிய தாலி! ஆ! அக்ரம ஆட்சியே! உனக்கு அழிவு கிடையாதா?

முரடன் :- இல்லையப்பா இல்லை! இமயாவின் ஆட்சி சிரஞ்சீவி வரம் பெற்றது.

வாலி :- மகாவீரச் சக்ரவர்த்தியின் சாம்ராஜ்யத்திலா இந்த மகா பாதகங்கள்? இதைக்கேட்பாரில்லையா? இந்த ஏழையின் கூச்சல் உன் காதில் விழவில்லையா?

முரடன் :- கடவுள் செவிடப்பா செவிடு. (பயங்கரச் சிரிப்பு.)

(ஒரு பாகவதர் காலக்ஷேபம்)

பாக :- வாழை கமுகு முதலிய மரங்கள் வான் நோக்கி நிற்க, வண்ண மலர்களை வரிசை வரிசையாகத் தோரணங் கட்டி, கனிகளைக் குலை குலையாகவும் கொத்துக் கொத்தாகவும் தொங்க விட்டு, அலங்கரித்த பந்தலில் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் அமர்ந்து யாகம் வளர்த்து, ஆடுகளை வெட்டி, அக்கினி குண்டத்

தில் குடம் குடமாக நெய்யைக் கொட்டிப் பொசுக்கித் தின்று சோமரச பானங்களைச்சாப்பிட்டு அதி விமரிசையாக ஆர்வமோடு மந்திர கோஷம் முழங்கும்போது, இரக்க மற்ற அரக்கர் கூட்டம் திடீரெனப் புகுந்து. (விபீஷணன் ஆட்கள் திடீரெனப் பிரவேசித்தல். ஆர்ப்பாட்டம், அல்லல், ரகளை, கொள்ளை. வீடுகள் கொளுத்தப்பட்டு குழந்தை குட்டிகள் ஓட்டம். தொட்டிலில் கிடந்த பிள்ளையைத் தூக்கி எரிந்து கொல்லுதல்)

முரடன் :- வரி கொடுக்காத நாய்களுக்கு வீடு ஏன்? கொளுத்தி எரியுங்கள்!

(ஆணவத்தின் கோர தாண்டவம்)

## காட்சி 6. முல்லைக்காட்டில் ஒரு முக்யமான வீடு.

(புத்தன், குமரி, சில வீரர்கள். குமரி, தெரு நடனக்காரி வேடத்தில் இருக்கிருள். வீரர்கள் அவள் சொந்தக்காரர் போல் இருக்கிருர்கள். புத்தன் சாதாரண உடையில் காணப்படுதல்)

புத்தன் :- பத்திரம்! பவளமலைச்சாரலுக்கு வந்து சேருங்கள். நானும் இரவு அங்கு வந்து விடுகிறேன்.

குமரி :- எதிரிகள் கையில் சிக்கிவிடாமல்.

புத்தன் :- எல்லாம் தெரியும், நீங்கள் ஜாக்ரதை!

குமரி :- ஒருவேளை அரண்மனைக்குள் நுழையவேண்டி யிருந்தால்?

புத்தன் :- தந்திரம் அதிகம் வேண்டும். முடிந்த வரையில் முயற்சித்துப்பார், நான் வருகிறேன்.

(புத்தன் போய் விடுகிருன். ஒருவன் மிருதங்கம் அடிக்கத் துவங்குகிருன்.)

மற்ற :- எல்லாரும் வாங்க! ஆடப் பேராருங்க, ஆடப்போருங்க. (கூட்டம் சேர்கிறது. குமரி தெருக்கூத்து போல ஆடுகிருள். இன்னெருவனும் ஆடுகிருன். குதிரைகளின் குளம்படிச் சத்தம் கேட்கிறது. விபீஷணன் காலிக்கோஷ்டி என்பது தெரிகிறது மக்களுக்கு.)

ஒருவன் :- ராஜாங்கத்து காலிகள்!

மற்ற :- விபீஷணன் ஆட்கள்.

ஒருவன் :- சரி இந்தக் குட்டியை சனியன் பிடிச்சுது!

மற்ற :- (கோபமாய்) என்னப்பா! வர்ரானுங்க பார்த்துக்கிட்டுறிக்கிறீங்க.

இன்னெ :- ஏன்? என்ன செய்ய?

மற்ற :- வாங்க, ஓடிப்போய்விடுவோம்.

(காலிகள் வந்து தூர நின்றுநடனத்தை ரசித்தல்)

1-வது கா :- மயில்மாதிரி ஆடுகிருள்.

2-வது கா :- புழுவைப்போல நெளிகிருள்.

3-வது கா :- கச்சிதமானமுகம், கட்டுக்கோப்பான திரேகம்.

1-வது கா :- இந்த ரம்பையை நம்ம எஜமானிடம் கொண்டு போனல்?

2-வது கா :- உயிரை விட்டுடுவார்.

1-வது கா :- நமக்குச் சரியான பரிசுகிடைக்கும்.

2-வது கா :- சரி. நம்ப வலேயிலே ஒருமான் விழுந்தது வாங்க. வாங்க.

1-வது கா :- (அருகேவந்து) நீஆடினயே அதற்குப் பெயர்?

குமரி :- நாட்டியம்.

**1-வது கா :-** உம், கேலிசெய்யவும் தெரியுமா ?

**குமரி :-** கொஞ்சம் தெரியும்.

**1-வது கா :-** உன் நாட்டியக் கலையின் கௌரவத்தையே கெடுத்துக் கொள்கிருய். இந்த அபூர்வ நாட்டியத்தை இப்படித் தெருவிலா ஆடுவது ?

**குமரி :-** ஏழைகள் ! வேறெங்கேசாமி அரண்மனையிலா ஆட முடியும் ?

**1-வது கா :-** பொம்பளை மனம் வைத்தால், அரண்மனை மட்டு மல்ல, அரசர் தலைமேலும் ஆடலாம்.

**2-வது கா :-** பரமசிவன் தலையிலே கங்காதேவி ஆடுகிற மாதிரி.

**குமரி :-** அதற்கெல்லாம் அதிர்ஷ்டம் வேணுங்கசாமி.

**1-வது கா ::** அதிர்ஷ்டம் உன் மாதிரிப்பெண்களுக்குத்தானே முதலில் அடிக்கும். இதோபார், நீ இந்த மாதிரி கந்தலுங் கிழிசலு மா உடுத்தி, சங்குமணிகளை மாட்டிக் கொண்டிருப்பதை என்னல் சகிக்க முடியவில்லை ! உன் உடம்பெல்லாம் ரத்னமாலைகள் போட்டுப்பார்க்க வேண்டும்.

**குமரி :-** ஆசை இருக்கு. ஆனு ஆள் என்னுட்டந்தான் இருக் கிங்க.

**1-வது கா :-** **(குமரியை அருகே கூப்பிட்டு மெதுவாக.)** எங்கள் எஜமான் விபீஷணர் உன்னைக் கண்டால், கடித்துத்தின்று விடு வார்.

**குமரி :-** ஆ ! ராக்ஷஸன் போல இருக்கு.

**1-வது கா :-** இல்லை. உன் அழகிலும் ஆட்டத்திலும் அப்ப டியே மயங்கி அள்ளி அள்ளிக் கொடுப்பார்.

**குமரி :-** நிஜமாகவா !

**1-வது கா :-** அவர் ஆஸ்தியா செலவாகுத? இன்பபுரி சாம்ராஜ்யத்துப்பணம். அதற்கு ராஜப்பிரதிநிதி இமயாவிடம் இரும்புப்பெட்டி. விபீஷணரிடம் திறவுகோல். அவர் இஷ்டம் போல் செலவு. இன்பச் செலவு. அதிலும் உனக்குப் பொன்னபிஷேகம் செய்யச் சொல்கிறேன். போதுமா ?

**குமரி :-** அப்படியானல் நீங்களெல்லாம் யார் ?

**1-வது கா :-** நாங்கள் வரி வசூலிக்கும் உத்யோகஸ்தர்கள் வழியில் உன்னைப்போல யாராவது அகப்பட்டால் எஜமானுக்குப் பரிசாகத்தருவது வழக்கம்.

**குமரி :-** பெண்கள் வரமறுத்தால்...?

**1வது கா :-** குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை தான் ! ஆனல் நாங்கள் சொல்வதைக் கேட்டு விட்டால் கண்ணை இமை காப்பதுபோல் காப்பாற்றி விபீஷணரிடம் விடுவோம்.

**குமரி --** நீங்கள் ரொம்ப நல்லவங்க.

**1-வது கா :- (2-வது காலியைக்காட்டி)** ஆமாம் ! இவன் கூட அப்படித்தான் சொன்னன்.

**2-வது கா :-** சரி புறப்படு.

**குமரி :-** இருங்கள். எங்க சொந்தக்காரங்க இருக்கிறங்க. சொல்லிவிட்டு வர்ரேன்.

**(வேறிடத்தில்-குமரி வீரர்கள்)**

**குமரி :- (தணிந்தகுரலில்)** நல்ல சந்தர்ப்பம். நரியை அதன் வளையிலேயே சந்தித்து நசுக்கி விடலாம்.

**ஒருவீ :-** விபீஷணன் சண்டாளன் ! ஏதாவது சதி செய்து விட்டால் ?

**குமரி :-** தந்திரமாகத் தப்பித்துக் கொள்வேன். இளவரசர் வந்ததும் இதைச் சொல்லுங்கள். நாளை காலையில் நான் திரும்பாவிட்டால் அது ஆபத்தின் அறிகுறி.

**(காலிகளோடு புறப்படுகிருள் குமரி)**

## காட்சி 7. இமயா மது மண்டபம்

**(இமயாவும் விபிஷணரும்)**

**விபிஷ :-** அடுத்த மாதம் படையெடுப்பு. மகாவீரருக்குச் சிறை. புத்தன் சித்ரவதை. இன்பபுரியில் நமது ஆட்சி!

**இமயா :-** இன்பபுரிக் கோட்டைக்குள் நுழைவது.........

**விபிஷ :-** சுலபம். சுலபம்! குதிருக்குள் எலி இருப்பதுபோல கோட்டைக்குள் நமது ஆளை வைத்திருக்கிறேன். கோட்டையை முற்றுகையிடும் வழிகளை இன்று குறித்தனுப்பி விட்டான். இனிமேல் என்ன?

**இமயா :-** ஒன்றுமில்லை;

**விபிஷ :-** வெற்றி நமக்குத்தான். சந்தேகமில்லை:

**இமய :-** ஆமாம். சந்தேகமில்லை. வெற்றி நமக்குத்தான்;

**விபிஷ :-** இன்பபுரியில் நமது ஆட்சி எப்படி இருக்கும்?

**இமய :-** எப்படி இருக்கும்;

**விபிஷ :-** அழியாத ஏகாதிபத்யமாக இருக்கும்.

**இமய :-** ஆமாம்! அப்படித்தானிருக்கும். ஆனல் விபிஷணரே! பிரஜைகள் புரட்சி செய்தால்?

**விபிஷ :-** செய்ய விடமாட்டேன்.

**இமய** :- விடமாட்டீர்! அடக்கு முறைச் சட்டத்தைப் போட்டு.........

**விபீஷ** :- அல்ல அல்ல! ஆயுதம் வேறு இருக்கிறது.

**இமய** :- இருக்கும், இருக்கும், வைத்திருப்பீர்.

**விபீஷ** :- மக்களைப் பல ஜாதிகளாக இன்னும் பிரித்துக் கொண்டே போகவேண்டும்.

**இமய** :- ஆமாம். பிரித்துக் கொண்டே போகவேண்டும்.

**விபீஷ** :- அதுவும் கடவுள் பெயரால் செய்யவேண்டும்.

**இமய** :- ஆமாம்! கடவுள் பேரால் செய்யவேண்டும்.

**விபீஷ** :- அவர்களுக்குள் புகைச்சல் ஏற்பட்டால் தான், புரட்சி ஏற்படாது. நாம் வாழலாம்.

**இமய** :- புத்தன் அவர்களை ஒன்று சேர்த்துவிட்டால்.

**விபீஷ** :- கனவு. கனவு! கள்ளையும் சாராயத்தையும் கலக்க எண்ணுகிறன் மூடன்.

**இமய** :- மூடன்!

**விபீஷ** :- பிறகு நாட்டில் அவர்களுக் குள்ளேயே புரட்சி. அரசன் அதை அடக்க ஆரம்பிப்பான். நாம் சுலபமாக உள்ளே நுழைந்துவிடலாம்.

**இமய** :- அப்படியானல் அடுத்த மாதம் நான் சக்கரவர்த்தி!

**விபீஷ** :- சந்தேகமா! முதலில் துரோக வேலையில் வெற்றி பெற வேண்டும். பிறகு சிம்மாசனம் தானே வரும்.

**இமய** :- தானே வரும்!

**விபீஷ** :- இந்தக் கொள்கைக்குப் பெயர்தான்.........

இமய :- விபீஷணர் சொல்கை!

விபீஷ :- இமயா! பழைய விபீஷணர் கொள்கையே இது தான்!

இமய :- நல்ல கொள்கை, நாட்டுக்குத் தேவையான கொள்கை.

(குமரி வருகையை 1 வது காலி விபிஷணனிடம் கூறுதல்)

இமய :- என்ன ரகசியம்?

விபிஷ :- ஒன்றுமில்லே, தனிப்பட்ட விஷயம்.

இமய :- ராஜப் பிரதிநிதி இமயாவுக்குத் தெரியாத ரகசியமா?

விபிஷ :- இமயாவுக்கு வேண்டியது இன்பபுரியின் மகுடம்.

இமய :- ஆமாம்! மகுடம்!

விபிஷ :- மகுடம்! மங்கை! வேண்டுமானல் பேசாதீர்.

இமய :- பேசவில்லே.

(இமயா வாயில் கைவைத்து பொத்திக்கொள்கிருன்.)

காட்சி 8. முல்லேக்காட்டுப் பகுதி

(ஒரு கிராமாந்திர சுற்றுப்புறத்தில் பொன்னியும் அவள் தோழிகளும் கண்ணமுச்சு ஆடிக்கொண்டிருக்கிருர்கள். பல பல விளேயாட்டுகள் பாடலுடன். காலிகள் ஒரு புற மிருந்து இதைக் காண்கிருர்கள்)

1-வது கா :- ஏய்! இந்தக் குயிலுக்குக் குறி வையுங்கள்.

2-வது கா :- விபீஷணருக்கு விருப்பமான பட்சி,.

**1-வது கா :-** பறந்து விடப்போகிருள்.

**(பொன்னியின் அருகே நெருங்க, பொன்னி கோஷ்டி வேறு பக்கம் திரும்ப எத்தனிக்க)**

**1-வது கா :-** நில்லுங்கள் !

**பொன் :-** யார் நீங்கள் ?

**1-வது கா :-** நாங்கள் வேடர்கள்.

**2-வது கா :-** வேட்டை யாடுவதில் வெகு சமர்த்தர்கள்.

**3-வது கா :-** ஆமாம். எங்கள் குறிக்கு எந்த மானும் தப்பிய தில்லை,

**பொன் :-** இங்கு வந்த விஷயம் ?

**1-வது கா:-** எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான்

**பொன் :-** நன்மையா ?

**2-வது கா :-** ஆமாம், நீங்கள் சகல சௌபாக்கியங்களோடு. சகல சம்பத்தோடு, சகல செல்வாக்கோடு, சகல சல்லாபங் களும் பெற்று வாழ நாங்கள் ஆசைப்படுகிரோம்.

**பொன் :-** வளர்த்த வேண்டாம். சீக்கிரம்.

**1-வது கா :-** மிடுக்காகப் பேசினலும் மிக அழகாக இருக் கிறது.

**3-வது கா :-** விபீஷணரும் இதைத்தான் ரசிப்பார்,

**ஒரு தோழி :-** **(ஆத்திரமாக)** நிறுத்து உன் கிண்டலை ! இவள் கிராமத் தலைவரின் மகள். பொன்னி ! வா போவோம்.

**1-வது கா :-** பொன்னி, ஹ ஹ ஹ ! போக விட எண்ண மில்லை.

(பொன்னி முதலியோர் நகரவே)

**1-வது கா :-** *நாங்கள் ராஜாங்க அதிகாரிகள். முல்லைக் காட்டில் நாங்கள் வைத்தது தான் சட்டம்.*

**2-வது கா :-** *மயிலே, மயிலே என்றால் இறகு போடாது.*

**1-வது கா :-** *உம், அடுத்தது பலாத்காரம்.*

(''பலாத்காரம்'' ஆண் பெண் போராட்டம் நடைபெறுகிறது- பொன்னியைக் காலிகள் கைப்பற்றி விடுகிறார்கள். பெண்கள் ஓட்டம். திடீரென அங்கு தோன்றிய புத்தன் காலிகளை எதிர்க்கிறான். நீண்ட எதிர்ப்புக்குப் பின் காலிகள் ஓட்டம். பொன்னி தப்புகிறாள். புத்தன் பொன்னியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறான்.)

**பொன் :-** *காடிக் கூட்டத்திலிருந்து காப்பாற்றினீர்கள்.*

**புத்த :-** *கடமையைச் செய்தேன்.*

**பொன் :-** *மறக்க முடியாத உதவி.*

**புத்த :-** *மலர் வனத்தில் மாட்டு மந்தை நுழைந்தது. அதை மனிதத் தன்மை தடுத்தது.*

**பொன் :-** *மனமார்ந்த என் நன்றி, ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

(மலையன் பொன்னியின் தந்தை, பொன்னியைத் தேடிக் கொண்டு வருதல்)

**மலையன் :-** *பொன்னி ! பொன்னி ! பொன்னி!*

(ஓடி வருகிறான்)

**பொன் :-** *அப்பா ?*

**மலைய :-** *இங்கு என்ன நடந்தது ?*

**பொன்னி :-** மந்திரி விபீஷணன்.........

**மலையன் :-** ஆ! விபீஷணனா?

**புத்தன் :-** ஆமாம். விபீஷண வண்டுக்குக் காமதாகம்! தேன் மலர் தேடுவதற்காகச் சில பூச்சி வண்டுகள் பறந்து வந்தன.

**மலையன் :-** என்ன என்ன? வண்டாவது நண்டாவது! ஏம்மா, இவரு யாரு?

**பொன் :-** அப்பா! இவர், என்னை இம்சிக்கும்போது.........

**மலையன் :-** ஆ! இம்சித்தானா? சாது போலிருக்கானே? சண்டாளன்!

(பொன்னி தடுக்க, கேளாது புத்தன் மேல் பாய்கிருன்)

"பொன்னி! விடு என்னை"

**பொன்னி :-** அவசரப் படாதீர்கள், இவரில்லை. அந்தப்பேடிகள் ஓடிவிட்டார்கள்.

**மலையன் :-** இப்பொழுது சொன்னியே இம்சித்தான்னு.

**பொன் :-** அவர்கள் என்னை இம்சிக்கும்போது இவர் காப்பாற்றினர் என்றேனப்பா!

**மலையன் :-** ஓ! அப்படியா? வணக்கங்க! என் மவளை மலைப்பாம்பு வாயிலேருந்து மீட்டிங்க. ஐயோ, நீங்க இல்லேன்னு இந்நேரம் என் குடும்பமே நாஸ்தியாகி விடும். தெரியாமெ ஏதோ சொல்லி விட்டேன்.

**புத்த :-** பரவாயில்லை. இந்த மாதிரி பாக்யம் கிடைக்க வேண்டுமே!

**மலையன் :-** உம், தெய்வந்தான் கண்பார்த்திருக்கு.

**பொன் :-** ஆமப்பா! இவர்கூட தெய்வலோகத்தி லிருந்து

**புத்தன் :-** அப்படித்தான் பொன்னி. உன்னைக்கூட அந்த பார்த்திருக்கிறேன். இல்லை. இல்லை. உன் ஜாடையாக ஒரு பெண்.

(பொன்னி, புத்தன், பார்வையில் காதல் வெளிப்படுதல் கண்ட மலையன்)

**மலையன் :-** பொன்னி! பெரிய எடத்துப் பிள்ளையாண்டான். அவரோட நம்ப இவ்வளவு நாழி நிக்கறதே பாபம். வா போகலாம்

**புத்த :-** வேடிக்கை.

**மலைய :-** வேடிக்கை யில்லை, நாங்கள்ளாம் தீண்டத் தகாத வர்கள்!

**புத்த :-** தீண்டத் தகாதவர்கள்! தூய உள்ளம் படைத்த நீங்களில்லை. தங்கள் வயிறு நிறைவதற்காக உங்களை ஜாதி வாரி யாகப் பிரித்தாளும் வஞ்சகர்கள் தீண்டத் தகாதவர்கள்! நாய் களுக்கு அளிக்கும் உரிமைகூட நாட்டு மக்களுக்கு அளிக்க மறுக் கும் நஞ்சுக் கொள்கையினர் தீண்டத் தகாதவர்கள்! எந்த மனித னுடைய உழைப்பைத் தங்கள் வாழ்விற்குத் தேவையாகக் கொள் கிறார்களோ, அதே மனிதனை ஜாதியின் பேரால் அடிமையாக்கி வைத்திருக்கும் சதிகாரர்கள் தீண்டத் தகாதவர்கள்!

**மலைய :-** என்னமோ, பெரியவங்க சொல்லி யிருக்காங்க.

**புத்த :-** பெரியவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். "சாதி இரண்டொழிய வேறில்லை" என்ற சன்மார்க்க போதனை! "ஒன்றே குலமும் ஒருவனே தேவனு" மென்ற கீதம்.

**பொன்னி :-** ஆம் அப்பா! அப்படித்தான் சொல்லி யிருக் கிறார்கள்.

**மலைய :-** உம். பொன்னி! அவர் வாடை உனக்கும் அடிச் சுட்டுதா? அவர் மேல்சாதிக்காரர் எதுவும் பேசுவார். நீ பேச லாமா?

தான் வந்திருக்கவேண்டும்.

பொன்னி :- ஏன் ? என்னைப் போலத்தான் அவரும் இருக்கிருர்.

புத்த :- ஆம் ! உன்னைப் போலவே நான். உன் உள்ளத்தைப் போலவே என் உள்ளம். ஜாதி வேறுபாட்டால் இவை மாருது.

பொன்னி :- ஜாதிக் கொடுமை, எத்தனையோ ஒன்றுபட்ட உள்ளங்களைத் துண்டித்திருக்கிறதே.

(எங்கோ கவனித்திருந்த)

மலைய :- என்ன ? என்ன ?

பொன்னி :- கதைகளில் படித்திருக்கிறேன், ஜாதியை எதிர்த்து உயிரையே தியாகம் செய்தவர்கள் எத்தனையோ பேர். அதைச் சொல்லுகிறேன் அப்பா.

புத்த :- ஆமாம், நானுங்கூட படித்திருக்கிறேன்,,

பொன்னி :- படிப்பது சுலபம். ஆனல் அதன்படி நடப்பது கஷ்டம்.

புத்தன் :- நான் அந்த தியாகிகளின் பாதையில் கால் வைத்துப் பல நாட்களாகின்றன.

(மலையன் அவசரமாக)

மலைய :- உம், பொன்னி ! புறப்படு (புத்தனிடம்) நாங்க வருகிறோம். உங்க உதவிக்கு மறுபடியும்.........

புத்த :- வேண்டாம். நினைவிருந்தால் போதும். பொன்னி ! வருகிறேன்.

(பிரிய முடியாத பிரிவு)

## காட்சி 9. விபீஷணன் அறை.

(குமரி நிற்கிருள். விபீஷணன் படுக்கையில் சாய்ந்தபடி)

விபீஷ :- பெயர் என்ன சொன்ணுய்?

குமரி :- மின்னல்.

விபீஷ :- பொருத்தம், பொருத்தம்! கண்ணின் ஒளியில் மின்னல், கன்னத்தின் விளிம்பில் மின்னல், இடுப்பின் ஒவ்வொரு அசைவிலும் மின்னல், வண்ணுத்திப் பூச்சியே! உன்னை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது.

(மதுவைக் கையில் கொடுத்து)

குமரி :- இதை அருந்துங்கள். வார்த்தைகள் உங்களை அறியாமலே வந்து விழும்.

விபீஷ :- ஆமாம், நீ ஏன் இன்னும் கல்யாணம் செய்து கொள்ள வில்லை?

குமரி :- எனக்குக் கல்யாணம் ஆகாதுங்க.

விபீஷ :- ஏங்க?

குமரி :- ஒரு சபதம் வந்து குறுக்கே நிற்குதுங்க;

விபீஷ :- சபதமா! அதென்ன சங்கடம்?

குமரி :- கல்யாணம் பண்ணிகிட்டா ஒருராஜாவைக் கல்யாணம் பண்ணிக்கிறது. இல்லேன்னு கன்னியாகவே இருந்துட்றது.

விபீஷ :- அப்படியானல் உன் சபதம் பலித்து விட்டது.

குமரி :- நிஜமாகவா?

விபீஷ :- நிஜம், நிஜம்!

**குமரி** :- (**மதுவை ஊற்றிக்கொடுத்து**) உம், நிதானித்துச் சொல்லுங்க.

**விபீஷ** :- இன்று நான் முல்லேக்காட்டு ராஜப்பிரதிநிதி இமயா வின் பிரதம மந்திரி! அடுத்த மாதம் இன்பபுரி சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி.

**குமரி** :- நல்ல......... அதிர் வேட்டு! நீங்களாவது அரசராவது, ஆகவாவது; விளையாடுறீங்க.

**விபீஷ** :- விளையாடுகிறேன். இன்பபுரியின் மகாராணியோடா விளையாடுவேன்? இதைக் கேள், மகாராஜா மகாவீரர் ஆட்சி மக்கி விட்டது. இன்பபுரியின் மகுடம் இனி விபீஷணன் பரம்பரைக்கு.

**குமரி** :- கனவா இருந்தாலும் அழகா இருக்குங்க!

**விபீஷ** :- நீ நம்ப மாட்டாய். சக்ரவர்த்தி விபீஷணரோடு சரியாசனத்தில் வீற்றிருக்கப் போகிறாய்! அதுவரையில் நம்ப மாட்டாய்.

**குமரி** :- நாகலோகம் போவதாக தவளை சொன்னால் நம்ப முடியுமா? (**மதுவை மீண்டும் தருதல்**)

**விபீஷ** :- விபீஷணன் தவளையல்ல கருடன், கருடன்! நாகலோகம் போவான். நாகராஜனையும் கொல்வான் (**நெருங்கி**) மின்னல்! வா!

**குமரி** :- (**ஒதுங்கி**) மகாவீரர் இளிச்சவாயரா? அவரு சேனைக்கு ஜவாப்பு சொல்ல முடியுமா? கோட்டைக்குள் நுழையத்தான் ஆகுமா? ஊஹூம்!

**விபீஷ** நம்பமாட்டாயா என்னை?

**குமரி** :- ஊஹூம்! பொய்யெல்லாம் சொல்றீங்க. என் சபதத்தைக் கெடுக்க பாக்கிறீங்க.

**விபீஷ** :- நான் சொல்வது பொய்! சரி, இந்தக் கடிதங்கள்

சொல்வது பொய்தானு? பார்! (எடுத்துக் காட்டுகிருன்) மாணிக்கக் கோட்டை தளபதி மாதவனுடைய கடிதம் இது. இன்ப புரிக்கு எதிராக என்னேடு சேர்ந்துள்ள மாபெரும் வீரன். இதோ பார், சித்திரக்கோட்டை சிற்றரசன் சிங்கநகன் கடிதம். அந்தச் சிங்கம் என்ன எழுதி யிருக்கிருன் தெரியுமா? பத்தாயிரம் வீரர் களுக்குப் பயிற்சி அளிக்கிருனும்; இன்பபுரிக் கோட்டைக்குள் பிரவேசிக்க நேரம், வழி, எல்லாம் தயார்!

குமரி :- கோட்டைக்குள்ளா? ஊஹூம்.

விபிஷ :- பைத்யம், பைத்யம்! இதோ எல்லப்பன் என்ற எலி, கோட்டைக்குள்ளே இருந்தே இதை அனுப்பியுள்ளான். இன்னும் சந்தேகமா? இந்தப் பாதையில் சென்ருல் கோட்டை தவிடு பொடி! ஹ ஹ ஹா!

குமரி :- நான் அதிர்ஷ்டக்காரி தான்.

விபிஷ :- (நெருங்கி) இன்பபுரியின் இராணி, மின்னல்! மின்னல்!

குமரி :- ஒரு வேளை உங்க இமயா அரசராக வந்துவிட்டால்?

விபிஷ :- முடியாது, முடியாது. இமயா என் கைப்பொம்மை, காரியம் சாதிக்க ஒரு கருவியாக உபயோகிக்கிறேன். என் வெற்றிக்குப் பிறகு அவன் கருவேப்பிலே. நாட்டாசையைக் கிளப்பிவிட்டேன். நாக்கைத் தட்டிக்கொண்டிருக்கிருன் மடையன்! மன்னன் பதவிக்கு இவனு லாயக்கு? மண்டூகம். மின்னல்! நான் அரசனுன அன்றைக்கே, அப்பொழுதே, இமயாவின் தலே உருண்டுவிடும்.

குமரி :- நீங்கள் மகா மேதாவி. (மது தருகிருள்)

விபிஷ :- இல்லாவிட்டால் மன்னனுக முடியுமா? (நெருங்குதல்)

குமரி :- சரி! என் சபதம் நிறைவேறிற்று. நாளேக்கே திருமண நாள் குறித்துவிடுங்கள்.

விபீஷ :- நாள், நட்சத்திரம், பிறகு இருக்கட்டும். மின்னல்! இந்த இரவு வீணாகி விடுவதா?

குமரி :- ஏ. அப்பா! கல்யாணம் ஆகிறதுக்கு முன்னே ஒரு புருஷனைத் தொடுறது எங்க ஜாதி வழக்கப்படி பாபம்.

விபீஷ :- நீ தொட வேண்டாம். நான் தொடுகிறேன். (வெறியோடு நெருங்க, குமரி நடனமாடுவதுபோல் சுற்றிச் சுற்றி ஆடிக்கொண்டு மதுவை ஊற்றி ஊற்றிக் கொடுக்கிறாள். விபீஷணன் காம வெறியில் நிலைதடுமாறி அவளை பலாத்காரமாய் கட்டி அணைக்கிறான். குமரி கத்தி விடுகிறாள். சித்ரா ஓடி வருகிறாள். அப்பொழுது விபீஷணன் மற்றொரு கோப்பை மதுவை மொண்டு குடிக்கிறான். சித்ரா குமரியின் மேலுடையை வாங்கி அணிந்துகொண்டு விளக்கையும் சிறிது அடக்குகிறாள். அதற்குள் குமரி பறந்துவிடுகிறாள். குமரி ஓடும்போது சதிக்கடிதங்களை எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறாள். சித்ராவை குமரி என்று நினைத்த)

விபீஷ :- பைத்யக்காரி! இன்னுமா வெட்கம்?

சித்ரா :- தொடுறீங்களே கூச்சமா இருக்கு.

விபீஷ :- ஹ ஹ ஹா! மின்னல்! இதோ நான் இடி, வா! காதல்மழை பொழிவோம். வரமாட்டாய்? இன்பபுரியின் மகாராஜா அழைக்கிறேன்.

சித்ரா :- மகாராஜா! என்னை ஏமாற்றத்தானே பார்க்கிறீர்கள்?

விபீஷ :- ஏமாற்றுவதா?

சித்ரா :- ஆமாம், உங்கள் மனைவி இருக்கும்போது.......

விபீஷ :- (சிரித்து) மனைவியா? எனக்கா? பைத்யம். நான் பிரம்மச்சாரி!

சித்ரா :- ஊம், பொய்.

விபீஷ:- கடவுள் மேல் ஆணை! நான் முதல் முதல் பார்த்தது,

முதல் முதல் காதல் கொண்ட கட்டழகி நீ ஒருத்திதான். நீதான் என் மனைவி. நீதான் இன்பபுரியின் ராணி;

(சித்ராவைத் தழுவல்)

**சித்ரா :-** கைவிட மாட்டீர்களே ?

**விபீஷ :-** உனக்காக உயிரை விடுவேன்.

**சித்ரா :-** அதற்கு அடையாளமாக ஏதாவது ?

**விபீஷ :-** இந்தா, காதலின் அடையாளமாக இந்தக் கணையாழியை அணிந்துகொள்.

(சித்ரா விளக்கை நிறுத்துகிறாள்.)

**காட்சி 10.** பவளமலைச்சாரல்.

(புத்தன் சிந்தனையோடு கூடாரத்தில் இருக்கிறான். வீரர்கள் அவனோடு இருக்கிறார்கள்.)

**ஒரு வீரன் :-** இன்னும் காணவில்லை.

**2- வீரன் :-** ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருந்தால் ?

**3- வீரன் :-** காலையில் திரும்பாவிட்டால், அது ஆபத்தின் அறிகுறி என்று சொல்லிவிட்டுப் போனார்களே !

**1- வீரன் :-** இளவரசே ! நாம் உடனே புறப்பட்டுத் தேட வேண்டும்.

**புத்த :-** ஆ ! பொன்னி.........யைத்தானே ?

**திகைத்த 1-வது வீ :-** நம் விஷயம் பேசுகிறேன். இளவரசே ! குமரிதேவியைக் காப்பாற்றியாக வேண்டும்.

**புத்தன் :-** (தெளிந்து) ஆமாம், தாமதிக்கக் கூடாது. நம்மை எதிர் பார்த்துக் குமரி தத்தளிப்பாள்,

(ஒரு வீரன் வருகிறான்)

**புத்தன் :-** ஏதாவது புதுச்செய்திகள் ?

**வந்த வீ :-** இமயாவின் ஆட்கள் ஒரு கிராமத்தையே எரித்து விட்டனர்.

**புத்தன் :-** ஆ!

**வ. வீரன் :-** மக்கள் உயிரோடு வெந்து போனார்கள்.

**புத்த :-** காரணம் ?

**வ. வீரன் :-** வரி கொடுக்கவில்லை.

**புத்தன் :-** வரி கொடுக்வில்லை! வீரர்களே! இனி அந்த வஞ்சகரை வாழ விட உத்தேசமில்லை. அதிகார பலிபீடத்தில் அப்பாவி மக்களின் ரத்தம் வழிந்தோடுவதை இனியும் அனுமதிக்க எண்ணமில்லை. இன்பபுரி சாம்ராஜ்யத்தில் கொடுமை! இப்பொழுதே கிளம்புங்கள். அந்த இரக்கமற்றவருக்கு விலங்கு மாட்டுங்கள்.

**1- வீரன் :-** கைது செய்வதானால், ஆதாரங்கள் வேண்டுமே இளவரசே.

**புத்த :-** ஆம்! அக்கிரமக்காரர்கள் ஆடும் அகோர ஆட்டங்களைக் கண்ணால் கண்டும், அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த ஆதாரங்கள் அகப்படவில்லை!

**குமரி :-** (வந்துகொண்டே) ஏனில்லை ? இதோ இருக்கிறது.

**புத்த :-** குமரி! ஆபத்து எதுவும் ஏற்படவில்லையே ?

**குமரி :-** பூனையின் முன்னே கிளி, ஆபத்தில்லாமல் இருக்குமா ?

**புத்த :-** சிக்கிக்கொண்டாயா ?

குமரி :- சிக்கிக்கொண்டேன் , சித்ரா விடுவித்து விட்டாள்.

புத்த :- சித்ராவா?

குமரி :- ஆம். புயல் காற்றைப் புருஷனுகப் பெற்றிருக்கும் தென்றல். இரவு அவள் இல்லாவிட்டால் நான் தற்கொலே செய்து கொள்ள வேண்டியதுதான். விபீஷணன் வலேயில் நான் மாட்டிக்கொண்டேன் என்பதைச் சித்ரா தெரிந்து கொண்டாள். நான் அங்கு போனது முதல் என்னிடம் வாஞ்சையாகத்தான் இருந்தாள். அந்தக் கொடியவனுக்கு அவளும் உடந்தையென நான் முதலில் நினைத்தேன். அவன் பேசிய பாகு மொழியில் பாஷாணங் கலந்திருக்குமோ என்ற பலத்த சந்தேகம் எனக்கு. ஆனல் நேற்றிரவு விபீஷணனின் விஷப் பற்களுக்கிடையே அகப்பட்டுக் கொண்ட என்னே வெகு தந்திரமாக விடுவித்தாள் !

புத்த :- அதிருக்கட்டும். நீ போன காரியம்?

குமரி :- வெற்றிதான் இளவரசே! இது மாதவன் எழுதிய கடிதம். (விபீஷணன் காலிகள் இருவர் இதைக் கவனிக்கின்றனர்)

புத்த :- (படித்துவிட்டு) மாதவன் — மனசாட்சியை அடகு வைக்கும் மனித மிருகம். மகாராஜாவின் சோற்றைத் தின்று அவருக்கே துரோகம் நினைக்கிருன்.

குமரி :- இது சிங்கநகன் கடிதம்.

புத்த :- சண்டமாருத நடையில் எழுதியிருக்கிருன், இந்தப் புலிகள் புத்தன் இருப்பதை மறந்துவிட்டார்கள்.

1-வது வீர :- இளவரசே! அமோகமான ஆதாரங்கள்.

புத்த :- ஆம்! குமரிக்குச் சரியான பரிசு தரவேண்டும்.

குமரி :- பரிசு வேண்டி நான் பணிபுரியவில்லே.

(தனியிடத்தில் காலிகள் ரகசியமாக)

1-வது கா :- இளவரசன் புத்தன்!

2-வது கா :- ஆமாம்! அந்தத் தெருநடனக்காரி யார்?

1-வது கா :- எல்லாம் வேஷம். இதை உடனே விபீஷணரிடம் தெரிவிக்கவேண்டும்.

(இங்கே)

புத்த :- சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அவர்களைக் கைது செய்யவேண்டும். ஆதாரங்களுக்காக அலைந்தோம். அகப்பட்டு விட்டன. இனி அந்த விஷமக்காரர்களை விட்டு வைக்கக் கூடாது. நாளை காலையில் நமது வேலையை முடிக்க வேண்டும். நாட்டுக்கும் சமூகத்துக்கும் கேடு செய்யும் இந்த நாகசர்ப்பங்களின் நச்சுப் பற்களைப்பிடுங்கி எறியவேண்டும்! தேசத்துரோகிகள், சமூகத் துரோகிகள். நாசகாலர்கள். அவர்களைச் சுட்டெரிக்க வேண்டும்! விட்டு வைப்பது விவேகமல்ல! வீரர்களே!

வீரர்கள் :- ஒழிப்போம் துரோகத்தை!

(அனைவரும் கோஷிக்கின்றனர்)

காட்சி 11. விபீஷணன் தனி அறை.

(விபீஷணன் "ஹ! ஹ! ஹா!" என்ற உரத்த குரலில் சிரித்த படி திரை ஆரம்பம். சித்ரா கோபமாக நிற்கிருள்.)

விபீஷ :- சித்ரா!......... வா.

சித்ரா :- போதும், சித்ராவின் வாழ்வைச் சிதைத்தது.

விபீஷ :- சினம் பொல்லாது. பஞ்சமா பாதகங்களில் அது ஒன்று.

சித்ரா :- பஞ்சமா பாதகம்! அநியாயத்திற்கும், அக்ரமத்திற்கும், ஆசை மகனைப் பிறந்த நீங்கள், பஞ்சமா பாதகத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

விபிஷ :- என்ன ! அநியாயமாவது அக்ரமமாவது. அப்படி என்றால் ?

சித்ரா :- பசப்பாதீர்கள் ! பச்சைக் குழந்தைகளின் பரிதாப மரணத்துக்குக் காரணமாய் இருந்துவிட்டுப் பசப்பாதீர்கள்! பாட்டாளிகளின் குடும்பங்களைப் பரிதவிக்க விட்டு விட்டுப் பசப்பாதீர்கள்! பருவ மங்கைகளின் பரிசுத்த வாழ்வைப் பாழ்படுத்தி விட்டுப் பசப்பாதீர்கள் !

விபிஷ :- அட ஆண்டவனே.

சித்ரா :- ஆண்டவன் கேட்பதா யிருந்தால் உலகத்தில் கொடுமையே முளைக்காதே. ஆண்டவன் குருடன்—அல்லது செவிடன்—அல்லது ஊமையாக இருக்க வேண்டும்.

விபிஷ :- உம்......! ஒவ்வொன்றாகச் சொல்லு ! எண்ணிப் பார்க்கிறேன்.

சித்ரா :- எண்ணிப் பாருங்கள். உங்கள் காம வெறிக்கு ஆளாகி வாழ்விழந்த கன்னிப் பெண்கள் எத்தனைபேர் ? எண்ணிப் பாருங்கள்.

விபிஷ :- கற்பழித்தேனா ? இராமனைப்போல் ஏகபத்தினி விரதனாகிய நானா ?

சித்ரா :- இராமனென்ன ? கற்பைக் காப்பாற்றுவதில் நீங்கள் இந்திரனுக்கு அண்ணனாயிற்றே. தெரியும்.

விபீஷ :- பெண்கள் அகல்யாவா யிருந்தால் ஆண்களும் இந்திரனாக இருக்க வேண்டியதுதானே.........

சித்ரா :- கதை கிடக்கட்டும், உங்கள் காம சேஷ்டைகள் எவ்வளவு கொடுமைகளை சிருஷ்டிக்கின்றன. யோசித்துப்பாருங்கள்.

விபீஷ :- என்ன சித்ரா ! விளங்காத பாஷைகளை அள்ளி வீசுகிறாய். காமசேஷ்டையாவது. கொடுமையாவது, நானாவது

செய்யவாவது. நான் ஏக சம்சாரக்கொள்கையில் சாக்ஷாத் பரந்தாமன்.

**சித்ரா :-** பரந்தாமன் கொள்கையை கோபிகா ஸ்திரீகளிடமல்லவா கேட்கவேண்டும்.

**விபீஷ :-** சித்ரா! நீ என்னதான் சொல்லுகிறுய்? உன் கணவன் விபீஷணன் காமாந்தகாரன், காதகன், கடையன், இதுதானே உன் தீர்ப்பு?

**சித்ரா :-** தீர்ப்பு, இந்த மோதிரத்தைக் கேளுங்கள் சொல்லும்.

**விபீஷ :-** (**திகைத்து**) இந்த மோதிரம். (**விரல்களைத் தடவித் தேடுகிருன்**)

**சித்ரா :-** தெரு நடனக்காரிக்குப்போட்டீர்களே, அந்த திவ்ய மோதிரம்.

**(விபீஷணன் ஸ்தம்பித்து நின்றதும். இரவு நினைவுகள் சில உருண்டோடுதல், மயக்கந் தெளிந்தவனுய்.)**

**விபீஷ :-** ஏமாற்றம்! எங்கே அவள்?

**சித்ரா :-** அவள் அப்பொழுதே பறந்துவிட்டாள்.

**விபீஷ :-** இருகள்ளிகளும் என்னைச்சதி செய்திருக்கிருர்கள்.

**(சித்ரா கலக்கம். விபீஷணன் ஆத்திரம். பயங்கரமான அமைதி நிலவுகிறது. இரு காலிகள் வருதல்.)**

**1-வது கா :-** எஜமான்! நம்மிடமிருந்த சதிக் கடிதங்கள் புத்தனிடம் சிக்கி விட்டன.

**விபீஷ :-** புத்தனு? என்ன உளறுகிருய்?

**2-வது கா :-** ஆம்! இளவரசர் மாறுவேடத்தில் துப்பறிகிருர். தெரு நடனக்காரி வேடத்தில் ஒரு பெண் கடிதங்களை அபகரித்திருக்கிருள். (**விபீஷணன் மனதில் புயல்.**)

**விபிஷ :-** சித்ரா! சரியான துரோகம் செய்துவிட்டாய். உம். சிங்கத்தின் குகைக்குள்ளேயே சதி நடந்துவிட்டது. சதியை நடத்தியவள் உன் மனைவி. எதிரியின் கையாள். பத்தினி போல் வேஷம் போட்ட பாசாங்குக்காரி.

**சித்ரா :-** வீண் பழி.

**விபிஷ :-** விஷத்தடாகமே! பேசாதே! விபசாரிகூடத் தன் கணவனை இப்படிக்காட்டிக் கொடுக்கமாட்டாள். என் வாழ்வுக்குத்துணை என்று வந்த வஞ்சகீ! என் வாழ்வையே இருளாக்கி விட்டாய் துரோகி!

**சித்ரா :-** துரோகி! நான் துரோகியா?

**விபிஷ :-** யாரைக் கேட்கிறாய்? உன் கழுத்தில் பிரகாசிக்கும் அந்தத்தாலியைக் கேள், முகத்தில் பூசியிருக்கிறாயே! அந்த மஞ்சளைக்கேள். நெற்றியில் பொறித்திருக்கிறாயே அந்தப் பொட்டைக்கேள். யாரைக் கேட்டாலும் ஒரே பதில், கணவனைக்காட்டிக் கொடுத்தவள்! துரோகி!

**சித்ரா :-** சுவாமி! நான் காட்டிக் கொடுக்கவில்லை.

**விபிஷ :-** கடிதங்களை மட்டும் எடுத்துக் கொடுத்தாய் சித்ரா! நீ இந்த வேலை செய்ததைவிட விஷத்தை என் உணவில் கலந்திருக்கலாம். நான் தூங்கும்போது என் தலையை துண்டித்திருக்கலாம். அல்லது அன்பாக உன்னோடு கொஞ்சும்போது என் நெஞ்சை நெறித்திருக்கலாம்.

**சித்ரா :-** சுவாமி! எனக்கு ஒன்றுமே தெரியாது.

**விபிஷ :-** தெரியாது. தெருப்பாடகி போல இரவெல்லாம் என்னோடு நடித்திருக்கிறாயே, இதுகூடத்தெரியாதா?

**சித்ரா :-** நடித்தது உண்மை, ஆனால்........

**விபிஷ :-** கடிதங்களைக் கைப்பற்றவில்லை. கைகாரி!

சித்ரா :- அவள் களவாடியிருக்கலாம். நான் கவலிக்க வில்லை.

விபீஷ :- இரவு, என் ஆசையில் குறுக்கிட்டு அதை அரும்பிலேயே அழித்தாய். தங்க வீணையை மீட்டும் போது அதன் தந்திகளை அறுத்து விட்டாய். அவளைத் தப்பி ஓடச் செய்தாய்.

-சித்ரா :- உங்கள் காம வெறியில், களங்கமற்ற ஒரு மலர், கருகிவிடாமல் காப்பாற்ற நினைத்தேன்.

விபீஷ :- ஆம். மலரைக் காப்பாற்றினாய். மணவாளனைக் காட்டிக்கொடுத்தாய். வேறு பெண்ணை விரும்பினேன் என்பதற்காகத்தானே இந்த விபரீதங்கள் ?

சித்ரா :- சுவாமி !......(அழுதல்)

விபீஷ :- பழங்காலப் பத்தினிகளின் பண்புகளைப் படித்துப் பார். ரோகம் பிடித்த கணவனின் மோகம் தணிப்பதற்காக அவனைத் தாசி வீட்டுக்குத் தூக்கி சென்ற நளாயினி எங்கே ! நாக சர்ப்பத்திலும் கொடிய நீ எங்கே !

சித்ரா :- மன்னித்து விடுங்கள்.

விபீஷ :- மன்னிப்பதென்ன, மகுடத்தைக் கைப்பற்ற சதி செய்ததாக நாளை என்மேல் வழக்கு. மரண தண்டனை அதற்குத் தீர்ப்பு.

சித்ரா :- (அழுகை.)

விபீஷ :- ஏன் அழுகிறாய் ? என்னை உயிரோடு காணவேண்டுமானால் கடிதங்களை மீண்டும் கைப்பற்ற வேண்டும்.

சித்ரா :- அப்படியானால்.........

விபீஷ :- இனி ஆலோசிக்கவே நேரமில்லை. இளவரசன் கையில் சிக்கியிருக்கிற ஒவ்வொரு எழுத்தும் என்னைக் குற்றவாளியாக்கும் சக்தி வாய்ந்தவை. உம்...... உன் சாகசம் என்னைச்

சாய்க்கும் பலிபீடம் என்பதை நான் உணரவே முடியவில்லை.

சித்ரா :- நெஞ்சில் வேலால் குத்தவேண்டாம். உங்கள் கையாலேயே என்னைக் கொன்று விடுங்கள்.

விபீஷ :- நீ ஏன் சாகிருய்? நான் தூக்கு மேடையில் நிற்பதைப் பார்த்துப் பரவசமடைய அவசரப்பட்ட நீ ஏன் சாகிருய்? சதி செய்த குற்றத்திற்காக, என் சதைத் துணுக்குகளை நாய் நரிகளுக்கு விருந்தாகப் போடப்போவதைப் பார்த்துச் சந்தோஷமடைய எண்ணிய நீ ஏன் சாகிருய்? புருஷன் தொலைந்தால் புத்தன் மடியில் புது ஆனந்தம் காணலாமெனக்கனவு கண்டு கொண்டிருக்கும் நீ ஏன் சாகிருய்?

(சித்ரா காதைப் பொத்திக்கொண்டு அழுகிருள்.)

விபீஷ :- பாசாங்கு! வெறும் பாசாங்கு! உண்மையாகவே என் வார்த்தையில் உனக்கு நல்லெண்ணமிருந்தால், கடிதங்களை மீண்டும் என் கையில் கொண்டு வந்து கொடு பார்ப்போம்.

சித்ரா :- என்னுல் முடியுமா?

விபீஷ :- முடியும். காலன் வாயிலிருந்து கணவனை மீட்ட சாவித்திரியின் தியாகத்தை நினைத்துப்பார். முடியும். ஏன்? இரவு தெரு நடனக்காரியை விடுவிக்கக் கையாண்டிருக்கிருயே சாகசம், அதை நினைத்துப்பார் முடியும். உன் சக்தியும் புரியும்.

சித்ரா :- இதோ போகிறேன். கடிதங்களோடு திரும்புவேன். இல்லையேல் பதித் துரோகத்திற்குப் பரிகாரம் தேடிக்கொள்வேன்.

(சித்ரா செல்லல்.)

விபீஷ :- (தனக்குள்.) நளாயினி — சாவித்திரி! நல்ல சமயத்தில் நினைப்பு வந்த நல்ல கதைகள்! இல்லாவிட்டால் இவள் போவாளா? பெண்களை ஏமாற்றப் பொருத்தமான கதைகள்! ஆனுல்............

(சிந்தனையில் ஆழ்கிருன்.)

## காட்சி 12.

ஆற்றோரம்.

(மாலை நேரம். குமரி பாடிக்கொண்டிருக்கிருள். சித்ரா பல் லக்கில் வருகிருள். இருவரும் சந்தித்து விடுகிருர்கள்.)

சித்ரா :- மின்னல்!

குமரி :- அம்மா! எங்கே இந்நேரத்தில்?

சித்ரா :- அடுத்த கிராமத்தில் தாயார் வீடு, அழைத்திருக் கிருர்கள், அதற்காகப் புறப்பட்டேன். பாதையில் இருட்டி விட்டது.

குமரி :- புலி அதிகம் அம்மா!

சித்ரா :- ஆமாம். என்ன செய்வது?

குமரி :- அம்மா, காலையில் போகலாம்.

சித்ரா :- நானும் அதைத்தான் நினைத்தேன். ஆனல் தங்கு வது?

குமரி :- எங்கள் ஜாகை கிட்டத்தான் இருக்கம்மா. அங்கே தங்கலாம். ஒரு வேளை ஏழைக்குடிசை உங்களுக்குப் பிடிக்காது.

சித்ரா :- அதெல்லாம் பார்த்தால் காரியம் நடக்குமா?

குமரி :- நல்ல வேளை, நான் பார்த்தேன். இல்லா விட்டால் காட்டுப் பாதையில் போய் கஷ்டப்பட வேண்டும்.

சித்ரா :- ஆமாம். என் நல்ல காலந்தான் உன்னைப் பார்த் தேன்.

குமரி :- அதெல்லாம்—கடவுளே காட்டி விடுவாரம்மா. அன் னைக்குக் கடல் மாதிரி என் மனசு கொந்தளிக்கும் போது காப் பாத்தினீங்களே. நீங்கள் செய்த உதவியை மறக்கமாட்டேன்.

சித்ரா :- இப்போது நீ செய்வதுதான் பெரிய உதவி. நீ தென்படாவிட்டால் எங்கெங்கே திண்டாட வேண்டும் தெரியுமா ?

குமரி :- சரி. புறப்படுங்கள் அம்மா. அதுதான் எங்கள் முகாம்.

(பல்லக்குப் புறப்படவே திரை மாறுகிறது. முகாம் உள் புறம். புத்தனுக்கும் மற்றவர்களுக்கும் சித்ராவை அறிமுகப்படுத்திக் கொண்டே குமரி முதலியோர் வருதல்.)

குமரி :- இந்தப் புண்ணியவதிதான் என்னைக் காப்பாத்தினுங்க.

புத்த :- விபீஷண எஜமானுடைய சம்சாரமாக்கும். வணக்கமுங்க.

(சித்ராவிடம் புத்தனைக்காட்டி.)

குமரி :- இவரு எனக்கு மச்சான் முறைங்க !

(புத்தன் முகத்தில் மாறுபாடு.)

சித்ரா :- பார்த்தாலே புரிகிறது !

(பழங்கள் முதலிய ஆகாரங்களைக் கொடுத்துக்கொண்டே)

குமரி :- ஏழை வீட்டுச் சர்ப்பாடு.

சித்ரா :- நான் சாப்பாட்டை உத்தேசித்து வரவில்லை. உங்கள் அன்பு இருந்தால் போதும்.

(சாப்பிட்டானதும் உள்ளே சித்ராவுக்குப் படுக்கையை விரித்துக் கொண்டே.)

குமரி :- செருப்புக் கோழியை மயில் கல்யாணம் பண்ணிக்கிட்ட மாதிரி, நீங்கபோயி அவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டீங்கம்மா !

சித்ரா :- என்ன செய்வது? என் தலையில் கடவுள் அப்படி எழுதி விட்டான்,

(சித்ரா படுக்கிருள். வெளியே புத்தனும் வீரர்களும்.)

1-வது வீர :- எனக்கென்னமோ சந்தேகமாயிருக்கிறது.

(குமரி வருகிருள்.)

குமரி :- சந்தேகத்திற்கே அவசியமில்லை.

புத்த :- வெடிமருந்துச் சாலையில் நெருப்புக்கு இடந்தருவது தவறு.

குமரி :- நீரை நெருப்பு என்கிறீர்கள் (சித்ரா படுக்கையை விட்டு எழுந்து கேட்டல்)

புத்த :- நீர்—நெருப்பு, இரண்டுமே வெடிமருந்துக்கு விரோதிகள் தான்.

1-வது வீ :- என்ன இருந்தாலும் விபீஷணன் மனைவிதானே?

குமரி :- விபீஷணன் விஷப்பொய்கை. சித்ரா அன்பு ஊற்று.

(உள்ளே தனக்குள்.)

சித்ரா :- இவள் நம்பிக்கையில் கல்லைப்போடுவதா? பாவம்! மாசற்ற மல்லிகை மலர்.

விபீஷணன் குரலும் நிழலும்:-

"ஆம். மலரைக் காப்பாற்றினய். மணவாளனைக் காட்டிக் கொடுத்தாய்."

சித்ரா :- இல்லை. என் அன்பரைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்.'

(வெளியில்)

புத்த :- உம், பாம்பின் மனைவி பாம்பு தான்.

குமரி :- அப்படி யிருந்தால் என்னைக் காப்பாற்றி யிருக்க மாட்டாள். நீங்கள் நம்புங்கள் இளவரசே!

(உள்ளே)

சித்ரா :- களங்கமற்ற இந்த உள்ளத்தை எப்படி ஏமாற்று வது? முடியாது. அன்பா! என்னை மன்னித்து விடுங்கள்!

விபீஷணன் குரலும் நிழலும் :-

"மன்னிப்பதென்ன? மகுடத்தைக் கைப் பற்றச் சதி செய்ததாக நானே வழக்கு. மரண தண்டனை அதற்குத் தீர்ப்பு"

சித்ரா :- பயங்கரமான தீர்ப்பு! அன்பா! நீங்களில்லாமல் சித்ராவுக்கு வாழ்வு ஒரு கேடா?

(வெளியே)

குமரி :- சித்ரா, குழந்தை மனம் படைத்தவள். கபடம் இன்ன தென்றே தெரியாது. அவனை நீங்கள் நம்ப வேண்டும்.

(உள்ளே)

சித்ரா :- குழந்தை மனம். எனக்கா அவளுக்கா? சூது தெரியாத பெண். இவளிடமா சூழ்ச்சியை ஆரம்பிப்பது?

(தேடித் தேடிப் பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுத் தவள் மீண்டும் வைக்கிறாள்) விபீஷணன் குரலும் நிழலும் :-

"என்னை உயிரோடு காண வேண்டுமானால், கடி தங்களை மீண்டும் கைப்பற்றியாக வேண்டும்"

(கடிதங்களை எடுத்து ஒளித்துப் பெட்டியில் வெற்றுக் கடிதச் சுருள்களை வைத்து விட்டு, பெட்டியை முன்போல் மூடி விடு கிறாள். படுக்கையில் படுத்துத் தூங்குவது போல் பாசாங்கு செய்கிறாள். புத்தன் குமரி முதலியோர் உள் வந்து படுக் கிறார்கள்.)

## காட்சி 13. தெருவில்.

(விபீஷணன் காலிகள் இருவர் குடிவெறியில் மோதிக் கொண்டு நடத்தல்)

**1-வது கா :-** ஏய்! இன்னிக்கு அகப்பட வில்லேன்னு அய்யா ரொம்பக் கோபிப்பாரு.

**2-வது கா :.** ஏண்டா! பொம்பளே அகப்படறதுன்னு சாமான்யமா? அதிலும் மூக்கு முழி எல்லாம் உருண்டு திரண்டு சுத்தமா ஆளு அழகியா, செந்தாமரைப் பூவுமாதிரி வேணும்னு என்னடா செய்யறது?

**1-வது கா :-** தினம். தினம் புதுசு புடிக்கிறதுன்னு முடியுதா? இந்த வம்புக்கு நாம்பளே ஒரு பொம்பளே ஆயிடலாம் போல இருக்கு!

**2-வது கா :-** என்னடா முட்டாள். ஆம்பளே பொம்பளேயாக முடியுமா? போதையில் உளர்றுன்.

**1-வது கா :-** போடா! சாக்ஷாத் மகாவிஷ்ணுவே பொம்பளேயா ஆனரு. பரமசிவனும் அவருமா ஒரு பிள்ளேயும் பெத்தாங்க.

**2-வது கா :-** அவுங்கள்ளாம் கடவுளுடா? பொம்பளேயாவும் மாறுவாங்க. புள்ளேயும் பெறுவாங்க!

(கடவுள்கள் விஷ்ணு நாரதர் பெண்களாய் மாறிப்பிள்ளே பெற்ற கதையை 1-வது காலி பாட 2-வது காலி பின்பாட்டுப் பாட கும்மாள மடித்துக் கொண்டே செல்லல்)

**2-வது கா :-** ஏய்! அதோ அந்தக் குடிசையில் விளக்குத் தெரியுது!

**1-வது கா :-** அது ஒரு விபசாரக் கடையாடா?

2 வது கா :- அப்ப சரி, நம்ப விபீஷணருக்கு சரக்கு வாங்க லாம். உம், வா!

(போகிறார்கள்)

## காட்சி 14. புத்தன் முகாம்.

(வெளிச்சம். சூரிய உதயமாகிவிட்டது. சித்ரா எழுந்து பயணப் படுகிறாள். சூரிய உதயத்தைக் குறித்து ஒரு துறவி பாடிக் கொண்டு போகிறான். சித்ரா பயணப் படுவதற்கு முன், குமரியும் புத்தனும் பெட்டியைத் திறந்து பார்க்க, அதில் சித்ரா வைத்திருந்த கடிதச் சுருள்களைத் தாங்கள் சேகரித்த உண்மை ஆதாரம் என்று எண்ணி மூடி விடுகிறார்கள். சித்ரா விடை பெற்றுச் செல்லும் காட்சி மௌனமாகவே நடை பெறுகிறது)

புத்த :- வீரர்களே! சித்ரா தாயார் வீட்டுக்குச் சென்று விட்டாள். விபீஷணன் இமயா இருவரும் தனியேதான் இருப்பார் கள். சித்ரா இருந்தால் அவள் கணவனைக்கைது செய்ய மனம் கூசும். அவர்களைக் கைது செய்ய இதுதான் நல்ல சந்தர்ப்பம்.

குமரி :- ஆம். ஆதாரங்களை நாம் அபகரித்திருக்கிற செய்தி தெரிந்தால், விபீஷணன் வேறு சூழ்ச்சியில் இறங்கி விடுவான்.

புத்த :- அதற்குள் அந்தக் குள்ளநரிகளைக் கூண்டில் நிறுத்தி விட வேண்டும். புறப்படுங்கள்.

(புறப்படுகின்றனர்.)

## காட்சி 15. விபீஷணன் மண்டபம்.

(சித்ரா இருக்கிறாள்)

விபீஷ :- வீரன் மனைவி வெறுங் கையோடா திரும்புவாள்? வேங்கையின் பத்தினி வெள்ளாடாக இருக்க முடியுமா?

சித்ரா :- அப்படித்தான் சொன்னார்கள்.

விபீஷ :- யார் என்ன சொன்னார்கள் ?

சித்ரா :- பாம்பின் மனைவி பாம்புதான் என்று, இளவரசர் சொன்னார்.

விபீஷ :- இளவரசன்! இந்தப் பாம்பின் குணந்தெரியாத பாலகன். பாம்பைப் பிடிக்க வந்தவன் படும் பாட்டைப்பார்.

சித்ரா :- நான் என் வார்த்தையைக் காப்பாற்றி விட்டேனல்லவா ?

விபீஷ :- வார்த்தையை மட்டுமா ? என் வாழ்வு, வாழ்வின் லட்சியம், எல்லாவற்றையும் காப்பாற்றி விட்டாய்.

சித்ரா :- அன்பா !

விபீஷ :- சித்ரா ! ஏன் தயக்கம் ? என்ன கேட்கிறாய் ?

சித்ரா :- சில கேள்விகள். பதில் வேண்டும்.

விபீஷ :- பரிக்ஷை வைத்திருக்கிறாயா ? கேள்.

சித்ரா :- இந்திரன் அயோக்யனாம் ! அதற்குக்காரணம் ?

விபீஷ :- காம வெறி என்பார்கள்.

சித்ரா :- இராவணன் தம்பியின் பெயர் ?

விபீஷ :- கும்பகர்ணன்.

சித்ரா :- அவனுக்கு இளையவன் ?

விபீஷ :- விபீஷணன் !

சித்ரா :- அவனைச் சிலர் வெறுக்கிறார்களே, காரணம் ?

விபீஷ :- அண்ணனைக் காட்டிக் கொடுத்தானாம்.

சித்ரா :- இல்லை. அதைவிட மேலான, அருமையான நாட்டைக் காட்டிக் கொடுத்தாலும்.

விபீஷ :- சித்ரா ! பீடிகை பலமாக இருக்கிறதே !

சித்ரா :- அன்பா ! உங்கள் வாழ்வில் வளைவு ஏற்பட்டால் என் வாழ்வு வாடி விடுமல்லவா ?

விபீஷ :- நல்ல கேள்வி. நல்ல பதில். சித்ரா ! சொல்ல வந்ததைச் சுருக்க மாகச் சொல்.

சித்ரா :- இனிமேலாவது.........

விபீஷ :- மேலாவது, கீழாவது ?

சித்ரா :- துரோகம் பாபமல்லவா ?

விபீஷ :- உம்......வேதாந்த விசாரணை, பிறகு.

சித்ரா :- பயங்கரமான இந்தச் சதி வேலை நமக்கே ஆபத்தாக முடிந்து விட்டால் ?

விபீஷ :- சதிவேலை—சித்ரா ! சிம்மாசனத்திற்காகப் படையெடுப்பதும்—ஆளும் அரசனை மாளச் செய்வதும் சதியல்ல. சரியான ராஜ தந்திரம். நான் செய்வது சதி என்ருல் சந்நியாசிகளாகத் திரிந்த பாண்டவர்கள் கௌரவர் நாட்டைக் கைப்பற்றியதற்கு என்ன பெயர் ?

சித்ரா :- அது அவர்களுக்குச் சொந்தமான நாடு.

வி :- சூதில் தோற்ற பிறகு சொந்தங் கொண்டாடுவது சரியான சூதாட்டம். சித்ரா ! உன் வாதப்படியே பார்த்தாலும் இந்த நாடும் எல்லோருக்கும் சொந்தம். எல்லோரும் இந்நாட்டு மன்னர். மகாவீரனுக்கு மட்டும் மகாராஜா பட்டம் ஏன் ?

சித்ரா :- நீங்கள் விரும்புவதும் அந்த மகாராஜா பட்டந் தானே ?

வி :- சித்ரா! பேசாமலிரு. அரசியல் விஷயங்களில் உனக்கு அனுபவம் போதாது.

சித்ரா :- நீங்கள் தவறி நடந்தால் நான் சொல்லக் கூடாதோ?

வி :- கூடாது. திரௌபதையைப் பார். அவளையே பந்தயமாக வைத்துச் சூதாடினார்கள். அதில் தோற்ருல், தான் துரியோதனனுக்கு அடிமையாக வேண்டும் என்பது தெரிந்தும் சும்மா இருந்தாள்.

சித்ரா :- கதை வேண்டாம். நான் சொல்வதைக் கேளுங்கள்.

வி :- பேசாதே! அடுத்த மாதம் நீ இன்பபுரியின் மகாராணி. நான் மகாராஜா?

"இமயா பராக்"

(என்று சேவகன் சொல்ல, சித்ரா போய்விடுகிருள்)

இம :- விபீஷணரே! ஒரு புதுமையான பெண் வந்திருக்கிருள். அடடா! அவள் என்னென்ன வித்தை செய்கிருள்.

வி :- அது யார் அவள்?

இம :- நல்ல அழகு. நல்ல முகம். நல்ல உடல்!

வி :- எங்கே அவள்?

இம :- அவள் பேச்சு வீணையின் ஓசை. அவள் பார்வை குளிர்ந்த நீரோடை?

வி :- இப்பொழுது எங்கே இருக்கிருள்?

இம :- அவள் நடக்கும் போது அசல் மயிலின் சாயல்தான்.

வி :- அடக்கர்மமே! அவள் எங்கே இருந்து தொலைக்கிருள்?

இம :- இன்னென்று சொல்ல மறந்து விட்டேன். மிக முக்யமான விஷயம்.

வி :- என்ன அது?

இம :- நடனமாடிக் கொண்டே மதுவைக் கோப்பையில் மொண்டு மொண்டுத் தருகிருள் அந்த மங்கையர்க்கரசி.

வி :- இமயா! இனிப் பொறுக்க முடியாது. அவளைக் காண வேண்டும். ஒரே வார்த்தையில் பதில். எங்கே அவள்?

இம :- இதோ வருவாள். (சேவகனிடம்) ஏய்! அழைத்து வா அவளை. (சேவகன் போக ஆரம்பிப்பதற்குள் இளவரசர் புத்தனும் வீரர்களும் குமரியும் பிரவேசிக்கிருர்கள்)

இம :- (திகைத்து) இளவரசே! அமருங்கள், அமருங்கள்.

வி :- அமருங்கள் (உபசரிக்கிருர்கள்)

இம :- இளவரசே! என்ன திடீர் விஜயம்?

புத்த :- உங்களை, அரண்மனை விருந்துக்கு அழைக்க வந்தேன்?

இம :- விருந்தா? (ஆசையுடன்)

புத்த :- ஆம். உங்கள் ஆட்சி முறையைப் பாராட்டுவதற்காக ஏற்பாடு செய்துள்ள விருந்து.

இம :- அதற்கு இளவரசா வரவேண்டும்? ஓலை அனுப்பினல் ஓடி வருகிறேன்.

புத்த :- ராஜப் பிரதிநிதி இமயாவை அப்படி அலட்சியமாகவா அழைப்பது?

இம :- உம்...... ஆஹா! என் பாக்யமே பாக்யம்.

புத்த :- நீரே தேடிக் கொண்ட பாக்யம். கையை நீட்டும்.

(சிப்பாயை ஜாடை காட்ட, விலங்கு கண்ட இமயா)

இம :- ஆ! என்ன?

வி :- இளவரசர் விளையாடுகிருர்!

புத்த :- ஆமாம். இதுகூட உம்முடைய விளையாட்டுப் பொம்மைதான்! மாட்டுங்கள், அவருக்கும் நடக்கட்டும். உங்கள் இருவரையும் கைது செய்திருக்கிறேன்.

விபீஷ :- இருவரையுமா?

இம :- இருவரையுமா? விபீஷணர் மட்டுந்தான் குற்றவாளி.

வி :- (இமயாவை முறைத்து விட்டு.) இளவரசே! இதென்ன நாடகம்?

புத்த :- நாடக மல்ல நடிகரே! இது விபீஷண புராணம், சிறைப் படலம்.

வி :- கேலி வேண்டாம். கேள்விக்குப் பதில்.

புத்த :- பதில்! உங்கள் பயங்கர ஆட்சியில் படுகொலைக்கு ஆளான பாட்டாளிகளின் பிணங்கள் சொல்லும்! பால் கொடுக்கும் தாய் மாண்டு கிடக்க, பக்கத்தில் அழுது அழுது பிராணனை விட்ட பச்சைக் குழந்தைகளின் பரிதாப முகங்கள் சொல்லும்! பதவி மோகம் தலைக்கேறி ஊராள யோக்யதையற்ற நீங்கள், பாராளத் திட்டம் போட்டு அதற்கெனக் குவித்திருக்கும் சதிக் கடிதங்கள் சொல்லும்!

வி :- நல்ல நல்ல கற்பனைகள். நாட்டில் நடக்காத கற்பனைகள். இளவரசே! வீண் பழிகளை வாரி இறைக்காதீர். ஆண்டவனுக் கடுக்காத அக்கிரம வார்த்தைகளை அள்ளி வீசாதீர்.

புத்த :- ஆண்டவன் — உன் அக்ரமத்துக்கு அந்தத் திரையைப் போடாதே! கிழிந்து போன திரை. அப்பாவி இமயாவுக்கு ஆசை காட்டி அரசியல் பொம்மலாட்டம் ஆட்டியது போதும்.

இம :- இளவரசே! எல்லாம் இவர் ஏற்பாடுதான். எனக்கொன்றும் தெரியாது.

வி :- உஸ்...... கோழையே! பேசாதீர்.

இம :- பேசவில்லை.

வி :- பச்சைக் குழந்தைகளாம், பாட்டாளிகளாம், பரிதாபமாம், சதியாம், வேலையாம்! புதுப்புது வேட்டுகள் இந்த நிரபராதிகளிடத்தில்.

புத்த :- நிரபராதிகள்! பசுவை ருசி பார்த்த வேங்கை, ரத்த நாக்கோடு வேதாந்தம் பேசுகிறது! விபீஷணரே! வரி கொடுக்காதவரை வாழவிடாதே என்று ஆணையிட்ட நீர் நிரபராதி?

வி :- குற்றவாளி என்பதற்கு என்ன ஆதாரம்?

புத்த :- ஆதாரமா? அதை விசாரணை மண்டபத்தில் அளிக்கிறேன். உம்...... கொண்டு போங்கள்!

(வீரர்கள் இழுத்துச் செல்லல்)

புத்த :- (குமரியிடம்) குமரி! நீங்கள் முன்னே செல்லுங்கள், நான் பிறகு வருகிறேன்.

குமரி :- தனியாகவா?

புத்த :- ஆமாம். (போகின்றனர்)

## காட்சி 15 A. பொன்னியும் புத்தனும் முன்பு சந்தித்த அதே இடம்.

(பொன்னியைத் தேடிக்கொண்டு புத்தன் வருகிறான். புத்தன் நினைவில் பொன்னியும் வருகிறாள். ஒருவரை யொருவர் கவனிக்க வில்லை. பொன்னி முதல் நாள் புத்தன் நின்ற இடத்தில் நின்று பெருமூச்சு விடுகிறாள். எதிர்பாராமல் இருவரும் பார்த்துத் தங்கள் செய்கைக்கு நாணமடைகிறார்கள்.)

புத்த :- பொன்னீ!

பொன்னி :- எங்கே இவ்வளவு தூரம் ?

புத்த :- இல்லை. ஒரு கனவு. அதில் கலங்கி ஓடி வந்தேன்.

பொன் :- கனவா ?

புத்த :- ஆம். உன்னை மீண்டும், அந்தக் குண்டர்கள் தூக்கிச் செல்வது போலவும், நீ என்னை, அழைப்பது போலவும் பயங்கரமான காட்சி !

பொன் :- அய்யோ ! கனவு பலித்து விட்டது. அதோ மறுபடியும் அவர்கள் !

புத்த :- (பதறி.) எங்கே ?

பொ :- அதோ மறைந்து மறைந்து வருகிறார்கள். (புதரைக் காட்டுகிறாள். புத்தன் புதரிடம் ஓடுகிறான். பொன்னி அவனை ஏமாற்றியதற்காகச் சிரிக்கிறாள். ஏமாற்ற மடைந்து அங்கிருந்தபடியே)

புத் :- பொன்னி ! உன் விளையாட்டு வினையாகி விட்டது. இதோ ஈட்டியால் என் மார்பைக் குறி வைக்கிறான். அசைந்தால் கொன்று விடுவதாக ஜாடை காட்டுகிறான்.

பொ :- ஆ ! ஓடி வாருங்கள் (தவிக்கிறாள்.)

புத் :- ஓடுவதா ? பொன்னி ! மார்பில் ஈட்டி தாங்கி மடிவேன், புறமுதுகு காட்ட மாட்டேன்—(புதரை நோக்கி) உம்...... குத்து, ஏன் பயமுறுத்துகிறாய் ? உன் ஈட்டி என் இருதயத்தைப் பிளக்கும், அவ்வளவுதானே ! உம்...... விட்டெறி. வீரனாகச் சாகிறேன். (திடுக்கிட்ட பொன்னி, அய்யோ என அலறி ஓடிவந்து புத்தனைப் பிடித்துக் கொள்ளவே, புத்தன் இடி இடியெனச் சிரிக்கிறான்.)

புத் :- ஒரு பொய், மூன்று பொய்யாக முளைத்து விட்டது !

பொ :- முதல் பொய் எது ?

புத் :- நான் கனவு கண்டேனே அது !

பொ :- உங்கள் வார்த்தைகள் எல்லாமே இப்படித்தானு?

புத் :- விளையாட்டு வேளையில் மட்டும். பொன்னி! உண்மையாகவே அவர்கள் என்னை ஈட்டியால் குத்தி யிருந்தால்.........?

பொ :- அந்த ஈட்டியில் இரத்தம் காய்வதற்குள், அது என் மார்பில் பாய்ந்து விடும்!

புத் :- நான் சாவதில் உனக்கேன் பொன்னி கவலை?

பொ :- என்னை அவர்கள் தூக்கிச் செல்வதில் உங்களுக்கேன் கவலை?

புத் :- கண்ணை இமைகள் காப்பது இயற்கை.

பொ :- இமையில் பாயும் ஈட்டி, கண்ணில் பாய்வதும் இயற்கை!

புத் :- பொன்னி!.........

(காதல் கீதம்)

புத் :- பொன்னி! நம்மை யாரும் எப்பொழுதும் பிரிக்க முடியாதல்லவா?

பொ :- முடியும். நம்மைப் பிரிப்பதற்கு ஒரு பயங்கரமான கருவி இருக்கிறது.

புத் :- கருவியா?

பொன் :- ஆம். அது என் உயிரையே உலகத்திலிருந்து பிரித்து விடும்.

புத் :- எது பொன்னி! அவ்வளவு பயங்கரமான கருவி?

பொ :- உங்கள் மறதி.

புத் :- மறதி. மாநிலத்தில் பகல் வர மறுத்து விட்டால், மாவீரன் வாளை எடுத்துப் போக மறந்து விட்டால், மல்லிகை மணம் வீச மறந்து விட்டால், பொன்னியைப் புத்தன் மறந்து விடுவான்!

பொ :- அன்பா ! என்னைப் பிரியவே மாட்டீர்களே ?

புத் :- பிரிவதா ! மணியை விட்டு ஒலி பிரியுமா? ஆனால் இப்பொழுது மட்டும் ஒரு அவசர வேலை.

பொ :- ஆரம்பித்து விட்டீர்களே !

புத் :- இல்லை. போனதும் திரும்பி விடுவேன்.

பொ :- அப்படி என்ன அவசரம் ?

புத் :- அரசாங்க சமாச்சாரம்.

பொ :- அரசாங்கமா ! நீங்கள்.........?

புத் :- அரச குமாரன்.

பொ :- அரச குமாரர் ! (தனக்குள்) ஆபத்தான காதல். ஆழந் தெரியாது கால் வைத்து விட்டேன். அரச குமாரர்.........

புத் :- (கலங்கி) பொன்னி ! அரசகுமாரன் என்றால் ஏன் அவ்வளவு அருவருப்பு ?

பொ :- இல்லை. என் காதல், காலைப் பனிபோல் கலைந்து விடுமோ என்று கலங்குகிறேன்.

புத் :- அரசகுமாரன் என்றால் அவனுக்குக் காதலிக்கத் தெரியாது. இது அம்மையார் அபிப்ராயம், அவ்வளவு தானே ?

பொ :- காதலிக்கிற அளவுக்குக் கைவிடவும் தெரியும்.

புத் :- அப்படிக் கதைகள் கேட்டிருப்பாய் பொன்னி ! கால வெள்ளம் கரை புரண்டு வந்தாலும், நம் காதல் அணையைக் கரைக்க முடியாது.

பொ :- அணையில் அந்தஸ்து என்னும் பிளவு ஏற்பட்டால்?

புத் :- தியாகத்தால் அடைத்து விடலாம். காதலுக்காகச்

செய்யும் தியாகத்தில் காதலர் வேண்டுமானல் சாவார்கள். காதல் சாகாது. பொன்னி ! நாம் வீணையும் நாதமும்.

பொ :- அன்பெனும் தந்தி அறுந்து விடாதே அன்பா ?

புத் :- தடாகத்து நீரும், அதன் தெளிந்த அமைதியும் போல வாழலாம்.

பொ :- காலம் அதில் கல்லை வீசி விடாதே கண்ணாளா ?

புத் :- இந்தா, இந்தக் கணையாழி நம் காதலின் அறி குறி. மலைகள் உருண்டு வந்து எதிர்த்தாலும் நிலை குலையாது நம் காதல். என் மகுடத்தின் மேல் ஆணை. **(கணையாழியை விரலில் மாட்டுகிருன்)**

பொ :- சகுந்தலை கதையாகி விடாதே ?

புத் :- நான் என்ன துஷ்யந்தனைப் போல குருடனா ? அல்லது துரோகியா ? கணையாழி காணமற் போனாலும் நீ என் காதலிதான். நான் வருகிறேன், பொன்னி !

**(பொன்னியின் சோக நிலையில் புத்தன் பிரிகிருன்)**

## காட்சி 16. விசாரணை மண்டபம்.

**(குற்றவாளிக் கூண்டில் இமயாவும் விபீஷணனும்)**

விபீஷ :- அளவுக்கு மீறி வசூல் செய்ததாக ஒரு குற்றம். அப்பாவி மக்களைப்படுகொலை செய்ததாக ஒரு குற்றம். அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக ஒரு குற்றம். மூன்று குற்றங்களுக்கும் நான் பொறுப்பாளி அல்ல.

புத்த :- ஆம். இதுவரையில் உமது கொடுக்கை நறுக்காமலிருந்த நாங்கள் பொறுப்பாளிகள் ?

மகாவீரர் :- இமயா சொல்லட்டும். இந்த அக்ரமங்கள் நடந்தது உண்மைதானே ?

இமயா :- இதையெல்லாம் அக்கிரமம் என்று இவர் (விபீஷணை க் காட்டி) சொல்ல வில்லை மகாராஜா !

விபீஷ :- ஆம். அதர்மம் என்று சொன்னேன்.

இமயா :- இல்லை ராஜ தந்திரம் என்று சொன்னீர் !

மகா வீ :- நாட்டு மக்களை ஆட்டுக்குட்டிகளாக நினைத்து, நரி வேலை நடத்தி யிருக்கிறீர்கள், நாசகாரர்கள் !

விபீஷ :- நரி வேலை ! கனவில் கூட நினைத்ததில்லை மகாராஜா. மக்களின் வாழ்வும் மன்னரின் நலமும்தான் என் இதயக் கனவு. அன்புக்குரிய பிரஜைகளை நான் அதட்டிக்கூட பேசியதில்லை ! எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று மதித்தேன்.

புத்த :- அதனால்தான் நீரும் மன்னராக நினைத்தீர்.

விபீஷ :- பழி, வீண்பழி !

புத்த :- எது பழி ? வரி கொடுக்காதவர்களை வாட்டிக் குவித் தீர்களே அது பழி. இஷ்டத்திற்கு இணங்காத இளம் பெண்களின் இருதயத்தில் ஈட்டி பாய்ச்சினீர்களே அது பழி. ஏன் என்று கேட்ட ஏழை மக்களின் வீடுகளை எரித்துச் சாம்பராக்கினீர்களே அது பழி. (இமயாவைப் பார்க்க)

இமயா :- ஆம் ! நான் அப்பொழுதே நினைத்தேன்.

மகா :- பேசாதீர். ராஜப் பிரதிநிதியாக உம்மை நியமித் தால் உமக்கு ஒரு பிரதிநிதி ! உம்......இமயா! நீர் இந்தச் சிம்மா சனத்திற்கு ஆசைப்பட்டது உண்மைதானே ?

இமயா :- எனக்கு ஆசையில்லை. இவர் ஆசைப்படச்சொன் னார். நான் பட்டேன்.

விபீஷ :- மகாராஜா ! தயவு செய்து என் வார்த்தைகளைக் கேளுங்கள். இமயா இன்பபுரிச் சக்கரவர்த்தி யாகத் திட்டம் போட்டது உண்மை. மக்களைக் கஷ்டப் படுத்தியது உண்

மை. நான் எவ்வளவோ தடுத்தது உண்மை. நீதி நெறி களை எடுத்து நீட்டினேன், சாஸ்திர சம்பிரதாயங்களைச் சமர்ப் பித்துக் கெஞ்சினேன். சட்டத்தைக் காட்டி பயமுறுத்தினேன். இமயா என் வார்த்தைகளுக்குக் காது கொடுக்க வில்லை. என் உபதேசங்களை அலட்சியப்படுத்தினர். கடவுளாணையாக நான் எந்தக் குற்றமும் செய்ய வில்லை. இந்நாடு, மக்கள் நல் வாழ்வு இவை என் மூச்சு மகாராஜா!

மகா வீ :- சரி. சதி வேலைகள் நடத்தியது?

விபீஷ :- அதில் நான் சம்மந்த மில்லை. இமயா சதி செய் தது உண்மை. அதைத் தடுத்துப் பார்த்தேன். கேட்க வில்லை.

புத்த :- துரோகி!

சபை :- துரோகி! துரோகி!

விபீஷ :- துரோகி! ஆலோசித்துப் பேசுங்கள். யார் துரோகி? நிரபராதியான என்னைக் கூண்டில் நிறுத்தி விட்டு அநீதி பேசு கிற நீங்கள் துரோகிகள்! அரசே! இந்நாட்டுச் சட்டப்படி கேட் கிறேன். நான் துரோகி என்பதற்கு என்ன ஆதாரம்?

புத்த :- (சிரித்து) ஆதாரம்! மாணிக்கக் கோட்டையின் காவலன் மாதவனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம். சிங்க நகன் உமக்கு எழுதிய உறுதி மொழிப் பத்திரம். எல்லப்பன் தீட்டிக் கொடுத்த கோட்டையின் ரகசிய வழிகள். போதுமா ஆதாரம்?

விபீஷ :- சபாஷ்! சரியான ஜோடனை! சக்கரவர்த்தி அவர் களே! இளவரசர் இந்த ஆதாரங்களைக் காட்டி விட்டு, அதே கையால் என் தலையை வெட்டி எறியட்டும்.

புத்த :- விபீஷணரே! வீணே குதிக்காதீர். உம்...... குமரி! (குமரி பெட்டியைத் தருதல்) இனி இந்த ஆதாரங்களோடு பேசும்.

(பெட்டியைத் திறக்கவே, விபீஷணனின் பெருஞ் சிரிப்பு.)

விபீஷ :- பூச்சாண்டி காட்டுகிறார்! ஹ ஹ ஹா! இளவரசே!

இரண்டு பொய்க் கடிதங்களாவது தயாரித்து வைத்திருக்கக் கூடாதா?

**மகாவீ :-** இளவரசனா?...... (**இளவரசன் திகைப்பு**)

**புத்த :-** மகாராஜா! கடிதங்கள் கைதவறி விட்டன.

**விபீஷ :-** ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்!

**இமயா :-** சரியான வார்த்தை! இவர் சொல்வது சரியான வார்த்தை.

**மகாவீ :-** போதும் இமயா! இன்று முதல் நீர் ஆயுள் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

**இம :-** ஆயுள் தண்டனையா?

**மகாவீ :-** ஆம். ஆட்சி நடத்த அருகதை யில்லாமல், மக்களை மிருகங்களாக நடத்தி யிருக்கிறீர். உமது பொறுப்பை உணராமல் உல்லாச கேளிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறீர். எனக்கெதிராகச் சதியும் நடத்தி யிருக்கிறீர்.

**இம :-** இல்லவே இல்லை. சாட்சி வேண்டுமானல் விபீஷணரையே கேளுங்கள்.

**விபீஷ :-** நான் அப்பொழுதே தடுத்தேனே, கேட்டீரா? மன்னரைக் கொல்லவே திட்டம் போட்டீரே. நான் இல்லா விட்டால் கருணையே வடிவான கண்ணிய மிகுந்த எங்கள் மகாவீர மகாராஜாவை மாளச் செய்திருப்பீரே!

**மகாவீ :-** மகா பாதகன்!

**இமயா :-** நானா?

**விபீஷ :-** ஆமாம். நீரேதான். உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்த நீரேதான். மகாராஜாவின் உப்பைத் தின்று அவருக்கே துரோகம் நினைத்த நீரேதான்.

மகாவீ :- இமயாவுக்கு விலங்கிடுங்கள். விபீஷணர் குற்ற மற்றவர். இமயாவுக்கு பதில் அவர் இன்று முதல் முல்லைக் காட்டின் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

விபீஷ :- வாழ்க மகாராஜா ! வாழ்க நீதி ! சபையோர்களே ! வேம்போடு சேர்ந்த கரும்பும் கசக்கும் என்பது போல், இமயாவோடு சேர்ந்த எனக்கும் இழிவான பெயர் கிடைத்து விட்டது. ஆனால் கடவுளறிய நான் நிரபராதி. என் உடலில் ஓடும் ஒவ்வொரு துளி ரத்தமும் இந்நாட்டுக்காகப் பயன்படும். என் கடைசி மூச்சு உள்ளவரையில் இத்தேசத்திற்காக உழைப்பேன். வாழ்க இந்நாடு பொன்னுடாக ! வாழ்க மன்னர் ! வாழ்க இளவரசர் !

(சபை கலைகிறது)

## காட்சி 17. விசாரணை மண்டபத்துக்கு வெளியே

விபீஷ :- இளவரசே ! உங்கள் முயற்சியால் எனக்கு ஒரு நல்ல பதவி கிடைத்தது. நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

புத்த :- பறக்காதீர் ! அக்ரமம் அழியாத வரம் பெற்றதல்ல. இது அழிவின் முதல் அத்தியாயம்.

(புத்தன் போய் விடுதல்)

விபீஷ :- பிள்ளைப் பூச்சி. இதன் தலையை முதலில் கிள்ளி எறிய வேண்டும்.

(அதே காட்சியில், புத்தன்-குமரி-வீரர்கள்.)

புத்த :- தீயில் விழுந்த புழு தப்பித்துக் கொண்டது. ஆச்சரியம் ! ஆதாரக் கடிதங்களை அபகரித்தது, அந்த சித்ராவாகத்தான் இருக்க முடியும்.

குமரி :- தவறான கருத்து. வழியில் கண்ட சித்ராவை வலு

வில் அழைத்து வந்தது நான். களவாடும் நோக்கம் அவளுக்கு இருந்திருந்தால், தூங்கும் போது குடிசைக்குத் தீ வைத்திருப்பாள்.

**1-வது வீரன் :-** எப்படியோ ஒரு துரோகி பிழைத்து விட்டான். இளவரசர் வார்த்தைக்குக்கூட மகாராஜா மதிப்பு வைக்கவில்லை.

**புத்த :-** சாம்ராஜ்ய சட்டப்படி மன்னர் நடந்தார். ஆதாரமில்லாமல் அவனை என்ன செய்ய முடியும்? இமயா முட்டாள். சதி செய்ததை ஒப்புக் கொண்டான். விபீஷணனும் காட்டிக் கொடுத்தான். துரோகம் வெற்றி யடைந்தது.

**குமரி :-** தெரிந்திருந்தும் விபீஷணனை மேல் பதவிக்கு உயர்த்துவது கூடவே கூடாது. அது மாமா செய்த மாபெரும் தவறு.

**புத்த :-** அப்பா போக்கே அலாதி! வெளுத்த தெல்லாம் அவருக்குப் பால்! விபீஷணன் விஷப் பேச்சில் விழுந்து விட்டார். அதையே நீதி என நம்பியும் விட்டார்.

**குமரி :-** விபீஷணனை விட்டு வைத்தால்.........

**புத்த :-** விட்டு வைத்தால், முல்லைக் காட்டையே எரிக்க விட்டு வைத்ததாக அர்த்தம்! கோழிப் பண்ணைக்குக் குள்ளநரியைக் காவலுக்கு விட்டு வைத்ததாக அர்த்தம். இன்பபுரிச்சிம்மாசனத்தில் அவனை ஏற்ற விட்டு வைத்ததாக அர்த்தம்.

**குமரி :-** மீண்டும் அவனைப் பிடிப்பதென்றால்.........?

**புத்த :-** அந்தக் கடிதங்களில் இருக்கிறது அவன் வாழ்வு. அவைகளை நாம் கைப்பற்று விட்டால், இன்பபுரியின் அழிவை அனுமதித்தவர்களாவோம்.

**1-வது வீரன் :-** அப்படியானால்?

**புத்த :-** நாளை பயணம். அதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

(வீரர்கள் செல்லல்)

குமரி :- நாம் இருவர் சென்ருல் போது மல்லவா ?

புத்த :- நீ வேண்டியதில்லை. நான் மட்டும் போகிறேன்.

கும :- நான் வருவதால் உங்களுக்கு இடையூறு இல்லையே ?

புத் :- இருக்கிறது.

கும :- விபீஷணன் விஷய மாகத்தானே பயணம்......?

புத் :- இன்னும் ஏதாவது இருக்கும்.

கும :- ரகசியமாக்கும்.

புத் :- தேவை யில்லாத கேள்வி.

கும :- வலுவில் வருகிற துணையை வேண்டா மென்று தடுப்பது.........?

புத் :- தடுப்பது சுய நலம். தடுத்தும் கேளாதது ?

கும :- என் சுய நலம். இளவரசே ! நீங்கள் தனியாகச் சென்ருல் எனக்கு நிம்மதி இருக்காது.

புத் :- நல்ல கதை.

கும :- கதையல்ல, வாழ்வெல்லாம் உங்களுக்குத் தொண்டாற்ற நான் காணும் கனவு.

புத் :- கனவு கனவாகவே இருக்கட்டும்.

கும :- என்னைப் புறக்கணிக் கிறீர்கள்.

புத் :- உன்னை யல்ல, உன் எண்ணத்தை.

கும :- என் எண்ணம் ! அது ஆலகாலமா ?

புத் :- அமிர்தமா யிருக்கலாம். ஆனல் என் கருத்தோடு கலக்க வழி யில்லை.

குமு :- அநியாயமாக ஒரு பெண்ணின் மனக் கோட்டைகளை மண்ணாக்குகிறீர்கள்.

புத் :- அநியாயமாக ஒரு பெண்ணின் மனக் கோட்டைகளை மண்ணாக்க மாட்டேன்.

குமு :- அப்படியானால்?

புத் :- நினைப்பை அகற்றிவிடு.

குமு :- ஏமாற்றந்தான் எனக்கு வெகுமானமா ?

புத் :- புத்தன் ஒரு பெண்ணை ஏமாற்ற மாட்டான்.

குமு :- ஒரு வேலைக்காரியைப் போல உங்களோடு வரக்கூட உரிமை யில்லையா ?

புத் :- வருவது அவசிய மில்லை.

குமு :- இளவரசே ! விபீஷணனிட மிருந்து நான் கடிதங்களை அபகரித்து வரும்போது சொன்னீர்களே.

புத் :- என்ன சொன்னேன்?

குமு :- குமரிக்குத் தகுந்த பரிசு தர வேண்டு மென்று !

புத் :- ஆமாம்.

குமு :- அந்தப் பரிசு இப்போது வேண்டும்.

புத் :- அப்படி யென்றால் என்ன பரிசு ?

குமு :- நான் உங்களோடு வர அனுமதி.

புத் :- நல்ல சங்கடம். உம்...... ஆகட்டும் புறப்படு.

குமு :- (புன்னகையோடு) மிக்க நன்றி.

(பிரிகின்றனர்)

## காட்சி 18. வசந்த மண்டபம்.

(விபிஷணனும் சித்ராவும் மகிழ்ச்சி யோடிருத்தல்)

**விபிஷ :-** கடல் மடை திறந்தது மாதிரி கர்ஜித்து விட்டுக் கடி தங்களை எடுக்கப் பெட்டியைத் திறந்தான். அடடா! என்ன கம்பீரம்! என்ன களிப்பு! அத்தனையும் ஒரே நொடியில் இடி விழுந்தது போல் அழிந்து விட்டன. சித்ரா! இனி முல்லைக் காட்டில் இவர்தான் முடி சூடா மன்னர். என் ஆட்சி ஆரம்பம்.

**சித்ரா :-** இதுவரை நடந்ததும் உங்களாட்சிதானே?

**விபி :-** இமயா ஒருவன் குறுக்கே இருந்தான். புத்தன் உதவியால் அவனைப் புதைத்து விட்டேன். இனி விபிஷணன் விரும்பியபடியே இன்பபுரியின் ரத்ன சிம்மாசனம். பக்கத்தில் நீ!

**சித்ரா :-** இன்னும் கெட்ட எண்ணம் உங்களை விட்டபாடில்லை.

**விபி :-** அதிர்ஷ்டம், தானே வருகிறது சித்ரா!

(ஒரு தோழி வந்து)

**தோழி :-** ஒற்றர் வந்திருக்கிறார்.

**விபிஷ :-** வரச் சொல்.

(1-வது காலி வருகிறான்)

**விபீஷ :-** என்ன விசேஷம் முடிந்ததா?

(1-வது காலி விபீஷணன் காதில் ரகசியமாகச் சொல்லுகிறான் ஏதோ. அதைச் சித்ரா அருகே வந்து கவனிக்கவே அதைக் கண்ட விபீஷணன் ஜாடையாகப் பேசுகிறான்)

**வி :-** பெயர் என்ன? பொன்னியா?

**1-வது கா :-** ஆமாம் மலையன் மகள்.

வி :- திணடப் படாதவள், தாசித் தொழில் செய்கிருள். பெரிய இடத்தின் பெயர்களைப் பாழ் படுத்துகிருள். நீ எப்படிக் கண்டு பிடித்தாய்?

1-வது கா :- முதலில் வதந்திங்க. பிறகு விசாரித்தேன். இப்ப நான் சொல்றது உண்மைங்க. நான் அவளை நேராகவே பார்த்திருக்கேன். ஊரெல்லாம் சிரிக்குதுங்க.

(சித்ராவிற்காக ஆத்திர மடைவது போல் பசாங்கு செய்து, விஷயத்தை கிரகிக்கிருன்.)

வி :- ஊர் சிரிக்கும். விபீஷணன் ஆட்சியில் இந்த விபசாரம் நடப்பதா என்று கை கொட்டிச்சிரிக்கும்! உம்...... அந்த வேசி விபசாரம் செய்வதற் கேற்ற அழகியோ?

1-வது கா :- அழகிலே மாம்பழந்தாங்க. அதிலே தான் அந்தப் பயல் மயங்கிட்டாங்க.

வி :- மயங்குவான் மடையன்! அவன் மயங்கியது ஒரு குற்றம். அவளை மயக்கியது பெருங் குற்றம். மயக்கும் அளவுக்கு அவள் இளம் பெண்ணோ?

1-வது கா :- பருவமடைந்த பத்தரை மாற்றுப் பொன்னுங்க.

வி :- பொன்! அழகை வியாபாரம் செய்யும் அரக்கிக்குப் பெயர் பொன்! - பொன் என்கிருயே, அந்த தடிச் செருக்கி தங்க நிறமோ?

1-வது கா :- தங்கமே தாங்க! சுருக்கமாச் சொன்ன, ஒன்பது ரதியை ஒண்ணுச் சேத்தா எப்படி இருக்குமோ, அவ்வளவு ஒய்யாரமுங்க.

வி :- ஆடவர்களை வசியப்படுத்தும் விபசாரி. அவள் அழகைப்பற்றி வர்ணனை. ஆமாம். அந்த ஆண் மூடனை இழுக்கும் அளவுக்கு அழகாகப் பேசுகிருளோ?

1-வது கா :- பேச்சிலே கிளிங்க! அடடா! பேச்சா அது!

வி :- அந்தப் பாசாங்குக்காரி பாடவும் கற்றிருப்பாள்...?

1-வது கா :- குயில் மாதிரி பாடுவாள்.

வி :- பெயர் என்ன சொன்னாய்?

1-வது கா :- பொன்னிங்க! மலையன் மகள் பொன்னி!

வி :- உம். அவளையும் அவள் அப்பனையும் உடனே அழைத்து வாருங்கள். விபசாரம்! விபீஷணன் ராஜ்யத்தில் விபசாரம்! வரட்டும் பார்க்கிறேன் ஒரு கை.

(1-வது காலி சென்றுவிடவே.)

வி :- பார்த்தாயா சித்ரா! இளவரசன் புத்தன் இன்ப வேட்டையாடுகிறானம். பொன்னியாம். ஒரு விபசாரி அவளோடு பொழுது போக்குகிறானம். யார் தெரியுமா அந்தப்பொன்னி? பறையர் கிராமத்தலைவன் மலையன் மகள். தீண்டப்படாத வம் சத்துத்தேள்! அதன் விபசாரக் கொடுக்கை கறுக்க ஆள் அனுப் பியிருக்கிறேன்.

சித்ரா :- இந்தச் செய்தி சுத்தப்பொய்!

விபீஷ :- நீ சொல்லுவாய் என்று எனக்குத் தெரியும். எப் படிப் பொய்?

சித்ரா:- இளவரசர் இம்மாதிரி காரியங்களில் உங்களைப் போலத் தலையிடமாட்டார்.

விபீஷ :- தலையிடமாட்டார்... காலையிடுவார்! போ, போ, பைத்யம்!

சித்ரா :- அப்படியே இருந்தாலும் பொன்னி ஒரு வேசியாக இருக்க முடியாது. புத்தரின் காதலியாக இருக்கலாம்.

விபீஷ :- எந்த எலியாக இருந்தாலும் சரி. இன்பபுரி சாம் ராஜ்ய சட்டப்படி, ஒரு இழிகுலப் பெண்ணை மேல் ஜாதி ஆடவர்

கள் நேசிப்பது குற்றம். அதிலும் இளவரசன் நேசிப்பது மாபெருங்குற்றம். சித்ரா! நடக்கப்போவதைப் பார், பொறுத்திருந்து பார்.

(போய் விடுதல். சித்ரா பெருமூச்சு விடுகிருள்.)

## காட்சி 19. மலேயன் வீடு.

(பொன்னி மோதிரத்தைப் பார்த்துப் பாடிக் கொண்டே புத்தனை நினைந்து உருகுகிருள். ஏதோ சுவடியைப் படித்துக் கொண்டிருந்த மலேயன், அதைப் பார்த்து விட்டு)

**மலேயன் :-** அம்மா! இந்த மோதிரம் ஏது?

**பொன்னி :-** அவர் கொடுத்தார் அப்பா.

**ம :-** எவர் கொடுத்தார்? என்ன உளர்றே?

**பொ :-** அன்று என்னைக் காப்பாற்றினரே அவர்.

**ம :-** அளவுக்கு மீறி விட்டாய் பொன்னி. ஆபத்தை வரவழைத்துக் கொள்ளாதே!

**பொ :-** என்னப்பா சொல்கிறீர்கள்?

**ம :-** சொல்வது! கிளிப் பிள்ளைக்குச் சொல்வது போலச் சொல்லியும் நீ கெட்டுப் போகவே துணிந்து விட்டாய்.

**பொ :-** என் வாழ்வு கெடும்படி அவர் விடமாட்டாரப்பா!

**ம :-** உம். உன் தலையெழுத்தை யார் மாற்ற முடியும்? எங்கேயோ வழியிலே வந்தவன். அவராம், இவராம், விடமாட்டாராம்!

**பொ :-** வழியில் வந்தவரல்ல. அவர் யார் தெரியுமா?

ம :- யாராயிருந்தால் என்ன? உன் ஜாதியும் அவன் ஜாதியும் ஒத்துக்குமா?

பொ :- எங்கள் உள்ளங்கள் ஒத்து விட்டன.

ம :- அப்படித்தான் முதல்லே அளப்பான்! அப்புறம் ஆள் போன இடந்தெரியாது போய் விடுவான்.

பொ :- அவர் வாக்குத் தவற மாட்டார்.

ம :- அரிச்சந்திரனுக்கும்!

பொ :- அரசகுமாரர் அப்பா!

ம :- அரச குமாரனா? ஆ! பொன்னி! கெட்டாய்! அசத்தியம் அரச குடும்பத்தோடே பிறந்தது.

பொ :- அப்படிச் சொல்லாதீர்கள். அரசாட்சியின் மேல் சத்தியம் செய்திருக்கிறார்.

ம :- அரசாட்சியாவது, சத்தியமாவது. அத்தனையும் நடிப்பம்மா நடிப்பு! அரசாட்சின் மீது ஆணையிட இவர் யார்? அரசாங்கம், சாஸ்திர சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டது. சாஸ்திரத்திலே ஜாதி கெட்டவளைக் கல்யாணம் செய்யக் கூடாதென்றால்? உம்...... என்ன நடக்கப் போகிறதோ.

(விபீஷணன் சிப்பாய் இருவர் வருதல்)

சிப்பாய் :- மலையன் நீர்தானே?

மலையன் :- ஆமாம்.

சிப் :- இந்த கிராம அதிகாரிதானே?

ம :- ஆமாம் ஏன்?

சிப் :- நீரும் உமது மகள் பொன்னியும் உடனே விபீஷணர் மாளிகைக்கு வரவேண்டும்.

ம :- ஏன் ?

சிப் :- விபீஷணர் உத்தரவு.

(சிப்பாய்கள் நகர)

ம :- ஒண்ணும் புரியலியே.........உம். புறப்படு பொன்னி !

(திரையில் ஒரு இருள். மீண்டும் ஒளி. அதே காட்சியில், குமரியும் புத்தனும் வருகிறார்கள். புத்தன் சுற்று முற்றும் பார்க்கிறான். அதைக் கண்டு சந்தேக முற்ற)

குமரி :- யாரைத் தேடுகிறீர்கள் ?

புத்த :- யரையுமில்லே. இளைப்பாரலாம்.

(குமரியும் புத்தனும் வேறு உடைகளில் இருத்தல். குமரி சாதாரணப் பெண்ணாகவும் புத்தன் சாதாரண மனிதனாகவும் காட்சியளித்தல்)

குமரி :- கரடு முரடான பாதை ! இளவரசே! கவிஞர்கள் காட்டும் பாதைக்கு ஏதோ உவமானம் சொல்வார்களே !

புத்த :- ஆமாம். வாழ்க்கைப்பாதை !

குமரி :- அது வைதீகக் கவிஞர் சொல்வது. நான் கேட்பது லௌகிகக் கவிஞரின் உவமானம்.

புத்த :- காட்டுப் பாதைக்கு உவமானம் ! உம்......... காதல் பாதையைச் சொல்வார்கள்.

குமரி :- அதுவும் இவ்வளவு கஷ்டமாக்கும்.

புத்த :- இதைவிடக் கஷ்டம்.

குமரி :- உறுதி என்னும் குதிரையில் சென்றால் ?

புத்த :- உடைப்பெடுத்த காட்டாறுகள் கரை புரண்டோடும்.

குமரி :- கடமை என்னும் கட்டுமரத்தில் ஏறிக் கொண்டால்?

புத்த :- பேத மென்னும் பெருங் காற்று வீசும்.

குமரி :- பிராணத்தியாகம் செய்யவும் தயாராகி விட்டால்?

புத்த :- காதலில் தோல்வியும், வாழ்வில் நாசமும் வந்து சேரும்.

குமரி :- அந்தக் காதலர்களின் புகழ் அணையாத ஜோதியல்லவா?

புத்த :- காதலர்கள் என்றால் சரி? தனியே ஒரு ஜீவன் காதலுக்காக வாழ்வைக் கருக்கிக் கொள்வது பைத்யக்காரத்தனம்.

குமரி :- அந்த ஜீவனைத் தனியே தவிக்க விடுவது?

புத்த :- தவிப்பு அவர்களாகத் தேடிக் கொள்வது? அதற்கு யார் பொறுப்பாளி?

குமரி :- மனதிற்குக் கடிவாளம் போடுவது சாமான்ய மில்லை;

புத்த :- மற்றவர் மனதை மாற்ற நினைப்பதும் அப்படித்தான்.

குமரி :- காதல், காந்தம் என்கிறார்கள். உள்ளங்களை ஒன்றாக இணைக்கும் கயிறு என்கிறார்கள். எல்லாம் பொய்யா?

புத்த :- எல்லாம் உண்மை. ஆனால் காதலன் காதலியைக் கைவிட்டு விட்டால் அவளுக்கு இதெல்லாம் பொய்யாகி விடும்.

குமரி :- அப்படியானால் நீங்கள் காதலியைக் கைவிட மாட்டீர்களே? (சந்தோஷமாய்)

புத்த :- அதெப்படி முடியும்? கடல் பாலைவன மானாலும், கதிரவன் பனிக்கட்டி யானாலும், என் காதலியைக் கைவிட மாட்டேன்.

குமரி :- (குமரி ஆவலாக) அத்தான்! (தழுவச் செல்கள்)

புத்த :- தூ! விடு என்னை. நீ பெண்ணா, அல்லது பிரம்ம ராக்ஷசி என்பார்களே அதுவா? காம வெறி தலைக்கேறி ஒரு ஆடவனை வலுவில் அணைக்கும் நீ ஆண்கள் இருக்கும் உலகத்திலே இருக்க அருகதையற்றவள்!

குமரி :- மன்னித்து விடுங்கள். கேவலம். ஒரு விபசாரியைப் பேசுவது போலப் பேசாதீர்கள். என் காதல்! பிரம்மராக்ஷசப் பேயாட்ட மல்ல, இதயத் துடிப்பு! அதை எடுத்துச் சொன்னது குற்றமா? அணை போட்டுத் தடுக்க முடியாத ஆசை வெள்ளம். அதில் தத்தளித்த இந்த அபலையின் மன அலைகள், காதல்! காதல்! என்று ஒலிக்கின்றன. காதலைக் காட்டியதற்கு இவ்வளவு கர்ண கடூரமான சொற்களா? இன்பபுரியின் இளவரசரா இப்படிப் பேசுவது? என் நெஞ்சாரக் காதலித்தவரா என்னை நெருப்பில் தள்ளுவது? வேண்டாம். இந்த அனாதையைக் காப்பாற்றுங்கள்.

புத்த :- பேசாதே!

(திரையில் இருள். அடுத்த காட்சித் தோற்றம்)

## காட்சி 20. விபீஷணன் மாளிகை.

விபீஷ :- தீண்டத் தகாதவர்கள் உயர்ஜாதிக் காரனுடன் உட்கார்ந்தால், சாம்ராஜ்ய சட்டப்படி என்ன தண்டனை?

மலைய :- சிறையில் தள்ளுவார்கள்.

வி :- உறவாடினால்?

ம :- சிரச்சேதம்.

வி :- விபசாரத் தொழிலில் ஈடுபட்டால்?

மலை :- சித்ரவதை!

வி :- இத்தனை குற்றங்களும் நீங்கள் செய்திருக்கிறீர்கள்.

(மலையன் பொன்னி திகைப்பு)

வி :- மகளின் அழகை முதலாக வைத்து, மதிப்புள்ள குடும்பங்களின் வாலிபர்களை மயக்கி, மான மற்ற விபசாரத் தொழில் செய் திருக்கிருய்.

மலைய :- விபசாரமா?

விபீஷ :- வேறென்ன, வியாபாரமா?

மலைய :- கடவுளே! இதென்ன காலம்? என் மகள் விபசாரியா?

விபீஷ :- இல்லை, பதிவிரதை! சாஸ்திரப்படி இந்தக் குற்றத்திற்கு நரகலோக தண்டனை. சாம்ராஜ்ய சட்டப்படி மரண தண்டனை.

பொன்னி :- எங்களைக் கொல்லும் ஆசை யிருந்தால், அக்னி குண்டத்தில் போட்டாவது பொசுக்கி விடுங்கள். இந்த அபாண்ட வார்த்தைகளால் கொல்லாதீர்கள்.

விபீஷ :- வேசி! வீரம் பேசுகிருள். பொன்னி! நீ பேசுவது அரசப் பிரதிநிதியிடம். அதை மறந்து விடாதே.

மலைய :- அரசராகவே இருக்கட்டும். அக்ரம வார்த்தைகளை ஒரு ஆண்டியும் கேட்டுக் கொண்டிருக்க மாட்டான்.

விபீஷ :- உம்...... கேட்க வேண்டாம்! இந்த ஜந்துக்களிடம் பேசுவது என் கௌரவத்திற்கே குறைவு. இவனைக் கொண்டு போங்கள்!

(சிப்பாய்கள் இழுத்துச் செல்லல்)

பொன் :- அப்பா! அப்பா!............

விபீஷ :- அப்பா?...... மாமா!... என்று அழை. (பொன்னி பொங்குதல்) பரந்த சாம்ராஜ்யத்தில் உங்கள் சாண் வயிறு நிரம்ப வேறு வழி இல்லையா? வாலிபத்தை வாடகைக்கு விடுவதைக் காட்டிலும் வீட்டுக்கு வீடு பிச்சை எடுத்து வாழலாமே. (பொன்னி

ஆத்திரம் உச்சம்) அழகு இளமை இவைகளை ஆண்டவன் வியாபாரம் செய்யவா படைத்தான்? பொன்னி! உனக்கு மானம் என்று ஒன்று இருக்கிறதா?

**பொன்னி :-** இல்லை! இருந்தால்.........இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டாள்.

**(விபீஷணன் சிரிப்பு)**

**பொன்னி :-** **(சிரித்து)** என்னைச் சித்ரவதை செய்யவேண்டாம்.

**விபீஷ :-** சித்ரவதை! நீயல்லவா என் இருதயத்தைச் செதில் செதில்களாகப் பிளந்து சித்ரவதை செய்கிறாய். பொன்னி! உன் பரிதாபத்தைக் காணும்போது எனக்கே பரிவு உண்டாகிறது. நீ செய்த குற்றம், பயங்கரமானது. நீ அனுபவிக்க வேண்டிய தண்டனை அதைவிட பயங்கரமானது!

**பொன்னி :-** இந்த வார்த்தைகளை விடவா?

**விபீஷ :-** உன் வனப்பை வெட்டித் தள்ள நான் விரும்பவில்லை. பாவம் வறுமையின் கஷ்டம், உன் வாழ்வைக்கெடுத்துக் கொண்டாய். நீ என்ன செய்வாய்? தந்தையே தரகனாக இருக்கும் போது.

**பொன்னி :-** போதும், என் தந்தை தங்கக் குன்று. அவரைத் தகாத வார்த்தைகளால் தாழ்த்த வேண்டாம்.

**விபீஷ :-** இல்லை. உங்கள் இருவரையுமே உயர்த்துவதாக உத்தேசம்.

**பொன்னி :-** உயர்த்துங்கள்! இந்த துன்மார்க்க மொழிகளை விட நீங்கள் உயர்த்தும் தூக்கு மரம் எவ்வளவோ மேல்.!

**விபீஷ :-** தும்பை மலர் போன்ற உன் மேனியை தூக்கு மரத்திலா தொங்க விடுவேன்? என் உப்பரிக்கையிலே உல்லாசமாயிருக்கலாம்.

**பொன்னி :-** கிண்டல் வேண்டாம். தண்டனை நடைபெறட்டும்.

**விபீஷ :-** நீ தங்கக் கொடி! தண்டனையால் வாட விடமாட்டேன்.

**பொன்னி :-** ஆ!............

**விபீஷ :-** பெண்ணே! உன்னை மன்னித்து விட்டேன். ஒரு வார்த்தை சொல். எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன்.

**பொன்னி :-** முதலில் இந்த எண்ணத்தை மறந்து விடும்.

**விபீஷ :-** நீ வேசியல்ல! வைரச்சிலை! போதுமா? பொன்னி, "நாதா!" என்று ஒரு அன்புச் சொல்லை உன் பொன்னதரங்களால் சிந்தினால் போதும், பூரித்துப் போவேன். புளகாங்கிதமடைவேன். பிறகு உன்னைக்குடிசையில் வாழ விடமாட்டேன். கூட கோபுரங்களில் வாழலாம். அந்த மண் வீட்டை இடித்தெறிவேன். மாட மாளிகைகளில் உலாவலாம். ஏன்? உன்னை மகாராணி யாக்கி விடுவேன்!

**பொன்னி:-** கனவு காணுகிறீர். காம வெள்ளத்தில் கருத்திழந்து உளறுகிறீர். கையில் சிக்கி விட்டேன் என்பதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு பேசாதீர்.

**வி :-** பொன்னி! உன் உயிர் என் கையில்!

**பொ :-** மானம் பெரிது, உயிரல்ல! நான் தமிழச்சி!

**வி :-** நானும் தமிழன்தான்.

**பொ :-** நீ......... தமிழனத்தில் .........விபீஷணன்!

**வி :-** மரியாதை கெட்டுப் பேசுகிறாய். மட நாயே! மானம் பெரிதாம், மானம்! எது பெரிது என்பதை இப்போது காட்டுகிறேன்.

**(உள்ளே சென்று மலையனை இழுத்து வருகிறான். வரும்போதே)**

மலை :- பூச்சாண்டி காட்டாதீர். பொன்னியை யமன் வாயில் ஒப்படைப்பேன். உமக்கு மனைவியாக்க மாட்டேன்.

வி :- வலிய வரும் அதிர்ஷ்டத்தை வேண்டாமென்று தள்ளுகிறாய் மலையா ! யோசித்துப் பார்.

மலை :- யோசிப்ப தென்ன! இதுதான் முடிவு.

வி :- என்னுடைய முடிவு கடுமையாக இருக்கும்.

மலை :- எந்த முடிவையும் வரவேற்கச் சித்தமாக இருக்கிறோம்.

விபீஷ :- உன்கண் முன்னேயே பொன்னியைக்கண்ட துண்டமாக்க எனக்கு அதிகார மிருக்கிறது.

மலை :- அவளைக்கண்ட துண்ட மாக்கலாம். அவள் கற்பைக் களங்கப் படுத்தக் கடவுளுக்குக் கூட அதிகாரமில்லை.

வி :- அதிகாரம்! அது யாருக்கு இருகிறதென்பதைப் பார்

(விபீஷணன் ஜாடை காட்ட, சிப்பாய்கள் மலையனை அடிக்கிறார்கள். பொன்னி அலறுகிறாள்.)

வி :- அப்பாவுக்கும் விடுதலை. உனக்கும் விடுதலை. பொன்னி ! ஒரு வார்த்தை மட்டும் சொல்லிவிடு-

பொ :- நாங்கள் இருவருமே சம்மதிக்கிறோம்.

வி :- அப்படியா ? (மகிழ்வுடன்)

பொ :- உலக விடுதலைக்கு நாங்கள் தயார். உன் கொடுவாளால் எங்களைக் கொன்று குவித்துவிடு. எங்கள் உடல்களைத்தசை தசைகளாகக் கழித்துத் தணலில் போட்டுவிடு. உன் அதிகார வெறியில் என்னென்ன அக்ரமம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்துவிடு.

வி :- அதைத்தான் செய்கிறேன். உம்......! நடக்கட்டும்.

(மலையன் தாக்கப்படவே பொன்னி மூர்ச்சித்தல்)

வி :- இவளைப்பாதாளச் சிறையில் தள்ளுங்கள். (மலையனை நோக்கி) இது நடந்து கொண்டே இருக்கட்டும். (மீண்டும் அடிகள்)

(மண்டைபிளந்து விடுகிறது. வைபத்யம் போல் ஆகிறுன்.)

வி :- அடித்துத் துரத்துங்கள். எங்கேயாவது ஓடிச்சாகட்டும் நாய்!

(மலையன் ஓடுகிறுன் அடி தாங்காமல்)

## காட்சி 21. பொன்னியின் குடிசை.

(புத்தன் ஆத்திரமாக அமர்ந்திருக்கிறுன். குமரி சோகமாக இருக்கிறுள்)

மலைய :- (ஓடிவந்து கொண்டே) பொன்னீ! பொன்னீ!

புத்த :- ஆ! பொன்னிக்கு என்ன ஆபத்து?

மலைய :- பொன்னி போய் விட்டாள்! பொன்னி போய் விட்டாள்!

புத் :- எங்கே போய் விட்டடாள்?

ம :- விபீஷணன் சிறையில், நீங்கதான் முன்னே அவளைக் காப்பாத்தினீங்க, இப்ப காப்பாத்துங்க. கடவுளே! என் குல விளக்கு அணைஞ்சு போகாமல் காப்பாத்துங்க! (சாய்கிறுன்)

புத் :: பொன்னி இருக்கு மிடம்?

ம :- புலியின் வாயில்! அந்தப் பொல்லாத விபீஷணன் கையில், என் பொன்னி அகப்பட்டுக் கொண்டாள்.

புத் :- (திகைக்கும் குமரியிடம்) குமரீ! இவரைப் பார்த்துக் கொள். நான் வருகிறேன்.

(புத்தன் செல்லல். குமரி மலையனைத் தூக்கிப் படுக்க வைத்தல்)

மலைய :- பொன்னீ! பொன்னீ!

குமரி :- அய்யா! பொன்னி உங்கள் மகள்தானே?

ம :- என் மாணிக்கம் அம்மா, என் மாணிக்கம்.

கும :- பாவம். கவலைப்படாதீர். பொன்னிக்கு எந்த ஆபத்தும் வராது. பெரியவரே! இவரை உமக்கு முன்னமேயே தெரியுமா?

ம :- இவரால் வந்த வினைதானம்மா இது. இவர்தான் என் மகளை மயக்கி, கடைசியிலே விபசாரப் பட்டம் வாங்கிக் கொடுத்தாரு. விபசாரி! விபசாரி! பொன்னி! நம்ம வம்சத்திலேயே இல்லாத பட்டம். என் கண்ணே! நீ விபசாரியா? உலகமே! நீ சொல்! பார பக்ஷமற்ற ஏ சூரியனே! நீ சொல். காற்றே! நீ சொல். என் மகள் விபசாரியா? ஏழையென்று பெயருண்டு, அடிமை என்று பெயருண்டு, முட்டாள் என்று பெயருண்டு, இந்தப் பரம்பரையில் விபசாரி என்ற பெயர் கிடையாதே! அய்யோ! அடி வயிறு எரிகிறதே! அய்யோ!.........

கும :- அழாதீர்.! அக்ரமத்துக்கு முடிவு உண்டு. அந்த முடிவைக் காண்பதற்காகத்தான் நாங்கள் புறப்பட்டிருக்கிறோம். அய்யா! பொன்னியை இவர் மணந்து கொள்வதாகச்சொல்லி விட்டாரா?

ம :- அம்மா! நாங்களோ தாழ்ந்த சாதி. இவரோ ராஜ குடும்பம். இரண்டும் ஒத்து வராதுன்னு பொன்னிக்கு எவ்வளவோ உதாரணம் சொன்னேன்; அவள் ஊஃகும்...... கேட்கவே யில்லே. கடைசியில்...........

கும :- இளவரசர் பொன்னியைக் கைவிட மாட்டார். பயப்படாதீர்.

ம :- நான் செத்தாலும் கவலே யில்லே. என் மகள் மனசைச் சாக அடிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கம்மா.

கும :- உம், படுத்துக் கொள்ளுங்கள்.

(படுக்க வைத்து சிகிச்சை செய்யல்)

ம :- இளவரசருக்கு நீங்க?............

கும :- தங்கை !

(குமரி பெருமூச்சு விடுகிருள்)

## காட்சி 22. விபீஷணன் மாளிகை.

(விபீஷணன் புத்தனை வரவேற்கிருன்)

விபீஷ :- இளவரசே! உங்களை இப்படியா வரவேற்பது? தாங்கள் வருவதாக இருந்தால்......... தங்கத்தட்டில் வைரக்கற்களால் வரவேற்புப் பத்திரம் எழுதி, இரத கஜ துரக பதாதிகள் அணி வகுத்து நிற்க, ஆலவட்டங்கள் சுழல, அதிர் வெடிகள் முழங்க எவ்வளவு ஆடம்பரமாக வரவேற்பேன்!

புத்த :- ஆடம்பரம் எனக்கு அடியோடு பிடிப்பதில்லை.

விபீஷ :- ஆடம்பரத்தில்தானே உலகம் ஆடுகிறது.

புத்த :- ஆடுகிறது என்று சொல்லாதீர். ஆட்டங் கொடுத்திருக்கிறது என்று சொல்லும்.

விபீஷ :- அதென்னமோ! அரசகுமாரரை ஆடம்பரமாக வரவேற்கா விட்டால், என் அதிகாரத்திற்கே பெருமை யில்லை.

புத்த :- உமது அதிகாரத்தில் பெண்கள்கூடச் சிறை செல்கிருர்களாமே?

விபீஷ :- ஆம். சட்டத்தைச் சரியானபடி பிரயோகிக்கிறேன். குற்றவாளி களுக்குச் சண்டமாருத வேகத்தில் நீதி வழங்குகிறேன். ஆண் என்றும் பெண் என்றும் பார்ப்பதில்லை.

புத்த :- போகிறது. ஆண் பெண் சமத்துவத்தை இப்படியாவது நிலைநாட்டுகிறீரே! சரியான ஆட்சி! நீதி முறை தெரிந்த சமதர்ம ஆட்சி!

**விபீஷ :-** நாட்டில் கொலை களவு பொய் சூழ்ச்சி எந்தப் பிசாசும் தலையெடுப்பதில்லை. ஒரே அமைதி நிலவுகிறது.

**புத்த :-** சரிதான்.

**விபீஷ :-** இன்றுகூட ஒரு விபசாரியைப் பாதாளச் சிறையில் போட்டிருக்கிறேன்.

**புத்த :-** விபசாரியா?

**விபீஷ :-** ஆம், வேசி. உயர்ந்த குடும்பத்து ஊதாரிப் பையன்களோடு விபசாரம் நடத்தியவள்.

**புத்த :-** விபசாரம். விஷத்தை விடக் கொடியது. ஆமாம், அவள் விபசாரி என்பது நன்றாகத் தெரியுமா?

**விபீஷ :-** சந்தேகம் வேறு?

**புத்த :-** ஆலோசித்து எதையும் செய்வதுதான் ஆட்சி முறை! அவள் விபசாரி என்பதற்கு என்ன ஆதாரம்?

**விபீஷ :-** அவள் முகமே சொல்லுகிறதே!

**(விபீஷணன் சிப்பாய்களுக்கு ஜாடை காட்டவே—அவர்கள் புத்தனுக்குப் பின் மறைந்து நெருங்குதல்)**

**புத்த :-** முகக் குறிப்பில் குற்றவாளியைக் கண்டு பிடிக்கிறீர். ரேகை சாஸ்திரம் படித்திருக்கிறீரோ?

**விபீஷ :-** ஆமாம். முகத்தில் காணப்படும் சுருக்கங்கள் அவள் வாழ்வின் அமைப்பைக் காட்டும் ரேகைகள். உதாரணமாக முகத்தைப் பார்த்ததுமே இது கிழம், இது வாலிபம், என்று சொல்லுகிறோம் அல்லவா? இளவரசர் இளைஞர். உலகப் படிப்பு போதாது.

**(மறைந்து வருபவரில் ஒருவன் இளவரசனின் வாளை விபீஷணனுக்குச் சுட்டிக் காட்டுதல்)**

**விபீஷ :-** இதைப் பாருங்கள். **(புத்தன் உரையிலிருந்த வாளை எடுத்து)** பார்க்கும்போதே இந்த வாளின் பள பளப்பிலிருந்து இதன் கூர்மை தெரிகிறது.

**(புத்தன் நிராயுதபாணியாக கைது செய்யப்படுதல்)**

**விபீஷ :-** எப்படி ரேகை சாஸ்திர விளக்கம்?

**புத்த :-** விபீஷணா?

**விபீஷ :-** ஏண்டா கும்பகர்ணா! எலியே! என் பொறியிலிருக்கிறாய். கத்தாதே! உம். இளவரசர் அவர்களே! வேண்டுமென்று ஒரு வழக்கை சிருஷ்டித்து, என்னை மேல் பதவிக்கு உயர்த்தினீர்களே. அந்த நன்றியை இந்த நாய் மறக்குமா?

**புத்த :-** விபீஷணா? எரிமலையின் மேல் விளையாடுகிறாய்?

**விபீஷ :-** விளையாட்டா? இது விளையாட்டா? அஹ்ஹ்ஹ்ஹா! விலங்கு இளவரசே, விலங்கு!

**(ஒருவன் விலங்கு மாட்டப் போகிறான்)**

**விபீஷ :-** விலங்கை மாட்டாதே! இன்னும் வேலை இருக்கிறது. அந்த வேசியை இழுத்து வாருங்கள். **(ஒருவன் போகிறான்)** இவனை இந்தத் தூணில் கட்டுங்கள். **(இளவரசன் கட்டப் படுதல்)**

**விபீஷ :-** என்னடா புலி போலப் பார்க்கிறாய்! புயல் போல மூச்சு விடுகிறாய்!

**புத்த :-** எரிமலையின் குமுறல்!

**வி :-** எரிமலையைக்கூட வேரோடு பிடுங்கி எறியும் பூகம்பம் நான்!

**பு :-** நீ தத்திக் குதிக்கும் தவளை. சிங்க நடைபோடாதே!

**வி :-** தூணோடுசேர்த்துக் கடலில் மிதக்கவிடுவேன். நெருப்புக் குண்டத்தில் தூக்கி எறிவேன். சதை சதைகளாகக் கிழித்து

எடுப்பேன். புத்தா! உன் உயிர் என் கைவிரலில் இருக்கிறது. அளந்து பேசு.

பு :- அளந்து பேசுகிறேன். இன்பபுரியின் இளவரசனைத் தூணில் கட்டிவிட்டோ மென்ற இறுமாப்பில் வெறியாட்டம் போடு கிருய்...... விபீஷண! இதன் விளைவு விபரீதமா யிருக்கும்.

வி :- ஜோஸ்யரே! உமது ஜாதகத்தை முதலில் பார்த்துக் கொள்ளும். விளைவாவது, அறுவடையாவது. விபீஷணன் பாதையில் வெற்றியைத் தவிர வேறு எதுவும் கிடையாது. புத்தா! நீ சிறுவன். அரசாங்கம் என்ருல் என்னவென்றே அறியாதவன். இந்த அவலட்சணத்தில் நீ துப்பறியக் கிளம்பினுய் பார்! துப்பு கெட்டவனே!

பு :- துரோகி! நாக்கை மடக்கு.

வி :- மடக்காமல் பேச முடியுமா? மடக்கித்தான் பேசுகிறேன். மடமையின் சிகரமே! மதி கேட்ட மன்னனுக்கு பிறந்த மண்டுகமே!

பு :- விபீஷண! நீ ஓணன் குஞ்சு! ஒதிய மிளார். என்னுடைய உணர்ச்சி அலைகளையும் தூணில் கட்டிவிட்டதாக எண்ணி உளறுகிருய். என் உணர்ச்சி வெள்ளத்தின் முன் இந்தத்தூண் ஒரு துரும்பு!

வி :- ஓஃகோ! விசுவரூபம் எடுப்பீர்களோ? சற்றுப் பொறுங்கள் குட்டி மகாராஜாவே! நீங்கள் எடுக்கிற விஸ்வரூபத்திற்குத் தகுந்தாற் போல், இந்த மாளிகையை இடித்துக் கட்டுகிறேன். ஒரு வார்த்தை. உங்கள் விஸ்வரூபத்தின் நீள அகலங்களின் அளவை இப்பொழுதே கூறி விடுங்கள்,

பு :- (ஆவேசத்தோடு) அளவு! உன்னுடைய ரத்தத்தைக் கொட்டிக் கொட்டி வைக்கும் தொட்டிக்கு அளவெடுத்துக்கொள்! உன் பிணத்திற்குக் கட்டப்படும் பாடைக்கு அளவெடுத்துக்கொள்!

(ஆவேசத்தில் கயிறு தெரிக்கும்படி துள்ளி இளவரசன் வெளிப்

படுகிறான். அதற்குள் பல வீரர்கள் அவனைப் பிடித்து மீண்டும் சங்கிலி முதலியவைகளால் கட்டித் தூணோடு இறுகப் பிணித்து விடுகிறார்கள்.)

வி :- அஃஃஃகா! கன்றுக் குட்டி துள்ளி ஓடும், கட்டிப் போட்டால் சும்மா கிடக்கும்.

(பொன்னி விலங்கோடு இழுத்து வரப்படல்)

வி :- வாடி......... வா!

பு :- (பொன்னியைக் கண்டு வியப்பன்போடு) பொன்னி!

பொன்னி :- ஆ!......... (பொன்னி புத்தனிடம் ஓடி வர எத்தனிக்கிறாள். அதற்குள்)

வி :- நில்லடி கள்ளி! (தடுக்கிறான் வாளை உருவி)

பொன் :- உன் வாள்!......... கோழைகளைத் தடுக்கும். நீ வெட்டிப் போடுகிற என் தலையாவது அவர் காலடியில் உருளட்டும். உம். உறையில் போடாதே! நடக்கட்டும்.

வி :- முதலில்...... இந்த வாயாடியின் வாயைக் கட்டுங்கள்.

(பொன்னியின் வாய் கட்டப்படுதல்)

வி :- இவளுக்காக இந்தத் தூண் காத்திருக்கிறது.

பு :- விபீஷணா! சாவோடு விளையாடுகிறாய்.

வி :- விளையாட்டு அநேகமாக முடிந்து விட்டது. இனி வேலை ஆரம்பம். புத்தா! பூந்தோட்டத்தின் ராஜப்பிரதிநிதியாளித்தர் இங்கு வரப் போகிறார்.

பு :- ஏதாவது உளறு.

வி :- உளறலாகத்தான் தெரியும். ஊர்ஜிதமற்ற செய்தியை விபீஷணன் சொல்லவே மாட்டான். அதை இப்போது நீயே

தெரிந்து கொள்வாய். அதுவும் உன்னைக் காண்பதற்காகவே யாளிதத்தர் வரப்போகிறார்.

பு :- வரட்டும்.

வி :- அப்படியானால் இதை எழுது. (**மடல் ஒன்றைக் காட்டி எழுதச் சொல்கிறன். புத்தன் அதைத் தள்ளி விடுகிறன்.**) அழிவை ஆலிங்கனம் செய்யாதே. நான் சொல்வதை எழுது. பாவம்! பருவத்தோடு கூடிய உன் அழகை நான் பாழ்படுத்த விரும்ப வில்லை.

பு :- என்ன பரிவு! பாம்புக்குக் கீரியின்மேல் பிறக்கிற பரிவு! விபீஷண! ஒரு அடிமையிடம் பேசுகிற வார்த்தைகளை என்னிடம் பேசுகிறாய். ஒரு கோழையிடம் வீசும் பயமுறுத்தல் களை என்னிடம் கொட்டுகிறாய். நன்றாக நினைவு படுத்திக்கொள்! இருதயத்தின் கடைசி துடிப்புள்ள வரையில்...... உன் அதிகாரத் திற்கு புத்தன் அடி பணிய மாட்டான்.

வி :- அதையும் பார்க்கிறேன். (**விபீஷணன் வாளை உருவிப் பொன்னியின் மேல் வீசுந் தோரணையில் நின்று கொண்டு**) இப்பொழுது சொல், பொன்னியின் உயிரைப் பந்தயமாகக் காட்டிச் சொல்! என் அதிகாரமா? உன் பிடிவாதமா?

பு :- வேண்டாம்! வேண்டாம்!

வி :- உம்...... எழுது. (**எழுதும் மடலை புத்தன் வாங்குகிறன்**)

**அன்புள்ள யாளிதத்தருக்கு . . .**

உம். சீக்கிரம் எழுது. (**புத்தன் எழுதுகிறன்.**)

> **புத்தன் எழுதிய அவசர அழைப்பு. இம்மடல் கண்டதும் இமை கொட்டும் நேரம்கூடத் தாமதியா மல், வரும் விரனேடு வந்து சேரவும். சில முக்யமான ஏற்பாடுகள் உடன் செய்யப்பட வேண்டியிருக் கிறது.**

உம்........ கையெழுத்துப் போடு.

பு:- இந்த ஓலை எதற்காக?

வி:- உன் நன்மைக்குத்தான்.

பு:- என் நன்மைக்கா?

வி:- பேசாதே, வாள் முனை கட்டளை இடுகிறது- அதற்கு வணங்கு.

பு:- வணங்கா விட்டால்?

வி:- பொன்னி வானுலகம் செல்வாள்.

**(வாளை உருவி அவள் பக்கம் நீட்டவே.)**

பு:- நிறுத்து! நிறுத்து!

வி:- உம். வா வழிக்கு! போடு கையெழுத்தை.

**(புத்தன் கையொப்ப மிடல். அதை ஒரு சிப்பாயிடம் கொடுத்து)**

ஏ. முருங்கை! மூன்று நாழிகை நேரத்தில் பூந்தோட்டத் தலைநகர் சென்று, அடுத்த மூன்று நாழிகையில் யாளிதத்தரோடு திரும்பி வரவேண்டும். **(சிப்பாய் செல்லவே)** இவர்கள் அது வரையில் தூணோடு இருக்கட்டும். இளவரசர் பேசிப் பேசி வாய் வலிக்கிறதாம். அவர் வாயையும் கட்டி வையுங்கள்.

**(புத்தன் வாயும் கட்டப்படுகிறது. விபிஷணன் கேலியாக இருவரையும் பார்க்கிருன். ஒரு சிப்பாய் வந்து வணங்கி)**

சிப்:- வரி கொடுக்க மாட்டேன் என்று புரட்சி செய்தவர்கள் சிலர் வந்திருக்கிறார்கள்.

வி:- அந்த வம்பர்களுக்கு வைகுந்தப் பிரயாணச் சீட்டு வேண்டுமாக்கும்.

சிப்:- நம் வசூல் அதிகாரியின் வயிற்றைக் கிழித்தவனைக் கூட இழுத்து வந்திருக்கிறோம்.

வி :- அந்த நாய்களின் நாக்கைக் கிழிக்கவேண்டும். நானே வருகிறேன்.

(வேகமாகப் போகிறுன்.)

## காட்சி 23. தெருவில்.

(ஒரு கைகாட்டிமரம். ஒரு புறத்தில் "இன்பபுரிக்கு!" என்ற எழுத்துக்கள். மறு புறத்தில் "விபீஷணர் மாளிகைக்கு" என்ற எழுத்துக்கள். குமரி இதைப் பார்த்து யோசித்தபடி நிற்கிறுள். பிறகு விபிஷணர் மாளிகைக்கு என்ற வழியில் நடக்கிறுள். திகைத்து நின்று.)

கும :- (தனக்குள்.) இளவரசரை விடுவிப்பது என் கடமை. பொன்னியைப்பற்றி எனக்கு எதற்காகக்கவலே? பொன்னி என் ஆசையில் விழுந்த இடி! என் இன்ப வாழ்வுக்கு முட்டுக்கட்டை. அவளே விடுவிக்காவிட்டால் இளவரசரின் நெஞ்சம் எனக்குச் சொந்தம். இளவரசரை விடுவிக்கும்போது, அவளும் விடுதலே யாறுல்? சரி, இன்பபுரிக்கே செல்கிறேன். இளவரசரை மகா ராஜாவே காப்பாற்றட்டும்.

(திரும்பி இன்பபுரி வழியில் நடக்கிறுள்.)

கும :- பாவம், பொன்னி அந்தப்பழிகாரன் கையில் அகப் பட்டால்? என்ன இருந்தாலும், என்னேப்போல ஒரு பெண். என்னேப்போலவே அவரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்த பெண். பாவம் ஒரே ஒரு கிழத் தகப்பன். அவரும் இறந்தார். அந்த அறைதையையுந்தான் காப்பாற்ற வேண்டும். (திரும்பல்.) என் பச்சாதாபம், என் காதலேக் கொல்லும் பலிபீடமாகிவிட்டால்...? பொன்னியைக் காப்பாற்றுகிறேன். அவர்கள் இருவரும் காதல் வெள்ளத்தில் நீந்துகிறுர்கள். அதை நான் காணுகிறேன். காணு வதா? முடியுமா? முடியாது! (திரும்பல்.) முடியாது! நான் அவரை அடையவும் முடியாது. வீண் கனவில், ஒரு ஜீவனே விஷப் பாம்பின் வாயில் தள்ளுவதா? வேண்டாம். அவர்கள் காதல் வாழட்டும். அவர்களுக்காக என் காதலே தியாகம் செய்

கிறேன். (திரும்பல்.) காதல், தியாகம் செய்யக்கூடிய பொருளா? உடல்-பொருள்-ஆவி மூன்றையும் தியாகமாகப் பெறக்கூடிய விலை உயர்ந்த வைரமல்லவா காதல்? காதலுக்காக தியாகம் செய்தவர்களின் கதைகளைக் கேட்டிருக்கிறேன். காதலையே தியாகம் செய்வது? (திரும்பல்,) அந்தத் துணிச்சல்காரி குமரியாகவே இருக்கட்டும். குமரி! குமுறுகின்ற உன் உள்ளம் அமைதி பெறட்டும். இளவரசரைக் காப்பாற்றினால் இன்பபுரியைக் காப்பாற்றிய பெருமை! பொன்னியைக் காப்பாற்றினால், காதலைக் காப்பாற்றிய பெருமை! இந்தப் பெருமையை வாங்க, உன் காதலை விலையாகக் கொடு. இனிக் குழப்பமில்லை. அவர்கள் காதல் வாழட்டும். என் காதல் சாகட்டும் ......உம். சித்ராவைப் பிடித்தால் தான் நடக்கும்.

(குமரி, விபீஷணர் மாளிகை வழியில் செல்கிருள்.)

## காட்சி 24. விபீஷணன் மாளிகை.

(பொன்னி, புத்தன் கட்டப்பட்டிருக்கிருர்கள். விபீஷணன் நின்று கொண்டிருக்கிருன். சிப்பாய்கள் சிலரால் யாளிதத்தர் அழைத்து வரப்படுகிருர்.)

வி:- யாளிதத்தரே! வருக, வருக.

யாளி:- (புத்தனைக் கண்டதும்.) ஆ! இளவரசே! யார் செய்த அநியாயம் இது? விபீஷணரே! என்ன விபரீதம்?

வி:- பொறும். பொறுத்தார் பூமி ஆள்வார். நான்கூடப் பொறுத்திருந்தேன். இப்பொழுது பூமி ஆளப்போகிறேன்.

யாளி:- பேச்சைக் கேட்க நேரமில்லை. (வாளை உருவுதல். சிப்பாய்கள் யாளிதத்தரை வளைத்துப் பிடித்தல்.)

வி:- எனக்கும் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. உம். சீக்கிரம். (யாளிதத்தர் தூணில் கட்டப்படல். விபீஷணன் ஒரு மடலை எடுத்து யாளிதத்தரிடம் நீட்டி), யாளிதத்தரே! நான் சொல்லிக்

கொண்டே யிருப்பேன். நீர் எழுதிக் கொண்டே யிருக்க வேண்டும்.

**யாளி :-** எலி புலிக்கு ஆணை யிடுகிறது. ராஜத் துரோகி! உன் வார்த்தையைக் கேட்டு என் விரல்கூட அசையாது.

**வி :-** உன் ஆத்மாவையே அசைக்கிறேன் பார். **(சிப்பாய்களிடம்)** ஏய்! ஆளுக்கொரு வாள் எடுங்கள். உம், என்றதும் புத்தன் தலை உருள வேண்டும். **(வாளை உருவியபடி புத்தன் தலைக்கு நேராக நீட்டிக்கொண்டு சிப்பாய்கள் நிற்கின்றனர்.)** என்ன யாளிதத்தரே! இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? இளவரசரின் உயிர் என் உதடுகளின் அசைவில் இருக்கிறது. சொல்லப்போனால் உன்னுடைய பிடிவாதம் இவனுடைய உயிரைப்பறக்கடித்துவிடும். சீக்கிரம் எழுது. அல்லது புத்தன் உயிரைப் போக்க சம்மதம் கூறு!

**யாளி :-** **(திகைத்து.)** விபீஷணா! நீதியின் பெயரால் கேட்கிறேன். இது நேர்மையா?

**வி :-** எதன் பெயரால் கேட்டாலும் சரி! என் மனதுக்குப் பட்டதை நான் செய்கிறேன்.

**யாளி :-** மனம்போன போக்கெல்லாம், போக வேண்டாம்.

**வி :-** அறிவுரை கேட்க உத்தேசமில்லை. இது அவசரமான நேரம். என் ஆணையை நிறைவேற்று. உம். எழுது!

**யாளி :-** என்ன எழுத?

**வி :-** சொல்கிறேன்.

> **இன்பபுரி சாம்ராஜ்ய இளவரசர் அவர்களுக்கு, நிறை வாழ்த்து . . .**

எழுது. **(எழுதுகிறார்.)**

> **தங்கள் மடல் கிடைத்தது. மகிழ்ந்தேன். மகாராஜா மகாவீரரைக் கவிழ்ப்பதென்றால் அவரைக் கொன்றுதான் ஆகவேண்டும்.**

(யாளிதத்தர் எழுதாமல் திகைக்கிருர்.)

வி :- உம். (சிப்பாய்கள் புத்தனுக்கு மேல் வாளை ஓங்கவே, யாளிதத்தர் எழுதல்.)

அது பயங்கரமான வேலை. ஆனாலும் பக்குவமாகச் செய்து விடலாம். பதார்த்தங்களில் விஷத்தைக் கலந்து காரியத்தை முடித்துவிட்டால். . . .

யாளி :- ஆ!

வி :- உம். வாயைத் திறக்காதே!

இன்பபுரியின் மகாராஜா நீங்கள். பொன்னியின் நிபந்தனையும் நிறைவேறும். பகிரங்கமாக எதுவும் செய்யக்கூடாது. அது நமக்கே ஆபத்து. நம் சூழ்ச்சியில் தலையிடும் விபீஷணனையும் வேலை முடிக்கவேண்டும். தாங்கள் நேரில் வாக்களித்தபடி, இன்பபுரியின் மந்திரி வேலை எனக்கு என்பதை மறந்து விடாதீர்கள்.

வணக்கம்,

யாளிதத்தர்.

உம். தயங்காதே! அங்கே தலை போய்விடும்.

யாளி :- ஏ! மனசாட்சியே! நீ மறைந்து விட்டாய். ஏ! நெஞ்சத் துடிப்புகளே! நீங்கள் தயவு செய்து நின்று விடக்கூடாதா?

(இளவரசன் கையிலளித்து.)

வி :- புத்தா! நீ எழுது! பொன்னியின் உயிரில் உனக்கு ஆசையிருந்தால் எழுது.

(பொன்னியின் தலைக்கு நேர் வாள் நிறுத்தப்படல் புத்தன் எழுத ஆரம்பித்தல்.)

பூந்தோட்டத்தின் ராஜப் பிரதிநிதி யாளிதத்தருக்கு எழுதுவது.

மகாராஜாவின் மரணம் சமீபத்தில் நடக்காது எனத் தெரிகிறது. எனக்கோ வயது ஏறுகிறது. எந்தக் காலத்தில் மகாராஜா ஆகிறது? நாம் முன்பு போட்ட திட்டப்படி சதி செய்து படையெடுப்பது இப்பொழுது சாத்யமில்லை. காரணம், நம்மை விபீஷணன் கவனித்துக் கொண்டிருக்கிறான். விபீஷணனை விழ்த்த நாம் செய்த முயற்சியும் தோற்றது. ஆனாலும் இன்னும் அதற்காக முயன்று கொண்டுதான் இருக்கிறேன். நான் முன்பு குறிப்பிட்ட என் காதலி பொன்னி, நான் அரசன் ஆனால் தான் என்னை மணப்பாளாம். அவள் மகாராணியாக வேண்டுமாம். இதற்கு ஒரு வழி உடன் எழுதுங்கள். மகாராஜாவும் ஒழிய வேண்டும். மக்களிடம் நல்ல பெயரும் நமக்கு இருக்க வேண்டும். இது ஞாபகத்திலிருக்கட்டும்.

தங்கள் அன்புள்ள

புத்தன்.

(தகராறுகளுக் கிடையே இக்கடிதம் எழுதி முடிக்கப் படுகிறது)

விபீ :- வேலை முடிந்தது. வெற்றி எனதே. விபீஷண மகாராஜாவுக்கு!

சிப்பாய்கள் :- ஜே! ஜே!

(மீசை மேல் கைபோட்டு, கட்டுண்டவர்கள் மீது பரிகாசப் பார்வையை வீசுகிறான் விபீஷணன்)

## காட்சி 25. மகாவீரர் தர்பார்.

(ஒரு தமிழ்ப் புலவர் பாடுகிறார். அவருக்குப் பரிசு அளிக்கப் படுகிறது)

மகாவீ :- வாழ்க தமிழ். புலவரே! உணர்ச்சி பொங்கும்

உமது கவிதையில் தமிழின் வீரம் தெரிகிறது. தேன் நடை ததும்பும் உமது கவிதையில் தமிழின் இனிமை தெரிகிறது. இந்தக் கவிதை தமிழன்னேக்குப் புது மாலே! இந்த மரகத மாலே தமிழ் வளர்க்கும் தங்கள் தடந்தோள்களே அலங்கரிக்கட்டும். தமிழர்க்குப் புது வாழ்வு தரத் தங்கள் கவிதைகள் பேராறு களாகப் பெருகட்டும். வாழ்க தமிழ்!

ஒருவன் :- தமிழ்.

மற்றவன் :- வாழ்க!

ஒரு :- உலகத்தோடு பிறந்த தமிழ்.

மற் :- வாழ்க!

ஒரு :- இமயங் கொண்ட இளந் தமிழ்.

மற் :- வாழ்க!

**(முழக்கம் முடிவதற்குள், மூன்று கருப்பு முக்காடு போட்டவர்களே இழுத்துக் கொண்டு விபீஷணன் பிரவேசிக்கிருன்)**

விபீ :- வாழ்க மகாராஜா! இன்பபுரி சாம்ராஜ்ய மகாராஜாவுக்கு வணக்கம். வாழ்க! வாழ்க!

மகா வீ :- விபீஷணர்! வருக! வருக! விபீஷணரே! இவர்கள் யார்?

விபீ :- இவர்கள் ராஜத் துரோகிகள். சாம்ராஜ்யத்தைச் சிதைக்கச் சதி செய்தவர்கள். மகாராஜாவின் மண்டையை உருட்டத் திட்டம் தயாரித்தவர்கள்.

மகா வீ :- என்ன? என்னேயே கொல்லச்சதி செய்தார்களா?

விபீ :- ஆம். இந்த முக்காட்டில் இருப்பது விபசாரமே உருவெடுத்த ஒரு விஷ அருவி. இவள் வலேயில் இந்த மீன் சிக்கியது. **(ஒரு முக்காட்டைக் காட்டி)** மோகஞஸ்திரத்தில் மயங்கிய இவர், இவளே இன்பபுரியின் மகாராணியாக ஆக்குகிறேன் என்று

உறுதி கூறினர். இவள் மகாராணியாக—இவர் மகாராஜாவாக வேண்டுமல்லவா? இவர் மகாராஜா ஆக, மகாராஜா மடிய வேண்டுமல்லவா? அதற்குத் திட்டம் தயாரித்துக் கொடுத்தது, இந்த ராஜவிஸ்வாசி தான் அரசே. இந்த முக்கூட்டு ஒப்பந்தம் தங்கள் முடியைக் கவிழ்க்க முனைந்தது.

**மகா:-** துரோகிகள். இவர்களைத் தூக்கில் ஏற்றவேண்டும். விபீஷணரே! ஆதாரமிருக்கிறதா?

**வி :-** மகா ராஜா! ஒரு விண்ணப்பம்.

**மகா :-** கேளும்.

**வி :-** அரசாங்கச் சட்டம் அனைவருக்கும் பொது தானே?

**மகா :-** அதில் தடை என்ன?

**வி :-** நானே இந்தக் குற்றங்களைச் செய்திருந்தால் கூட, சட்டப்படி நான் சாகத்தானே வேண்டும்?

**மகா :-** சந்தேகமேயில்லை. நீரென்ன? நானே நாட்டையும் நாட்டு மக்களையும் காட்டிக்கொடுத்தால், மக்கள் மன்றத்தில் எனக்கு மரண தண்டனை தான் தீர்ப்பு.

**வி :-** மகாராஜா! இவர்கள் குற்றவாளிகள் என்பதற்கு இதோ ஆதாரங்கள். **(கடிதங்களை மகா வீரரிடம் கொடுத்துவிட்டு)** தங்கள் உயிரைக் குடிக்க நடந்த ஏற்பாட்டில், இருவருக்குமிடையில் பறந்து கொண்டிருந்த சதிக் கடிதங்கள். இவைகளை என் ஒற்றர்கள் கண்டு பிடித்தார்கள்.

**(மகா வீரர்—படித்து—நடுவில் திகைத்து.)**

**மகா :-** யார்?

**வி :-** யாருமில்லை, இதோ பாருங்கள்!

**(முக்காடுகளை அகற்ற, வாய்க் கட்டுகளோடு பொன்னி, புத்தன்,**

யாளிதத்தர் மூவரும் இருத்தல். கட்டுகளையெல்லாம் விபி ஷணன் அவிழ்க்கிறான்.)

**மகா வி :-** துரோகிகள்! என் ரத்தம் எனக்குத்துரோகி! நான் வளர்த்த சதை எனக்குத் துரோகி! என் உப்பைத் தின்று வாழ்ந்த இந்தப்பேடி (**யாளிதத்தரிடம்**) எனக்குத் துரோகி!

**யாளி :-** நாங்கள் யாரும் துரோகியல்ல மகாராஜா! யோசித்துப் பார்க்கக் கொஞ்சம் ஓய் வெடுங்கள்.

**மகா வி :-** யோசிப்பது. இந்தக் கடிதங்கள் கூறுகிற சாட்சிகள் போதும்.

**யாளி :-** கடிதங்கள் கற்பனை மகாராஜா!

**வி :-** மகாராஜா! கேளுங்கள். மதிப்பிற் குரிய சபையோரே! கேளுங்கள். எங்கும் நிறைந்துள்ள ஆண்டவனே! கேள்- நீதி தேவா! நீ கேள். தர்ம நெறி தவறாத மகாராஜாவைத் தள்ளி விட்டு, தான் முடிசூட வேண்டு மென்று இளவரசர் எண்ணினார். அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் நான் குறுக்கே நின்றேன். என்னை ஒழிப்பதற்காக என் மேல் துவேஷப் பிரசாரத்தைக் கிளப்பி விட்டு என்னையும் கைது செய்து, என்னை ராஜத் துரோகி என்ற குற்றத்துக்கு ஆளாக்கி, என்னைக் கொல்லப் பார்த்தார். நீதி என் பக்கம் நின்று என்னைக் காப்பாற்றியது. மீண்டும் மகாராஜாவை விரட்ட யாளிதத்தரோடு திட்டம் போட்டு ரகசிய வேலைகள் பல நடந்ததை, நம் ஒற்றர்கள் மூலம் நான் அறிந்து, என் கவனத்தை இளவரசர் பக்கம் திருப்பினேன். அப்போதுதான் இந்த சதிக் கடிதங்கள் கைப்பற்றப் பட்டன. அடுத்த படி, யாளிதத்தரும் இளவரசரும் இந்த விபசாரி வீட்டில் தங்கி ஏதோ பயங்கரமான சதியில் ஈடு பட்டிருப்பதாகத் தகவல் பறந்தது. நான் இவள் வீட்டை முற்றுகையிட்டேன். கையுங் களவு மாக இவர்கள் பிடிபட்டார்கள். சட்டம் இவர்களைத் துரோகிகள் என்கிறது, ஏன்? இவர்கள் மனச்சாட்சியே இவர்களைத் துரோகி என்கிறது. என் ராஜ விஸ்வாசத்தின் மேல் ஆணையாக, நெஞ் சாரச் சொல்கிறேன். மகாராஜா! வேண்டுமானால் இந்த முறை

இளவரசரை மன்னித்து விடுங்கள். ஆனால் துரோகத்திற்குத் துணையாக இருந்த யாளிதத்தரும், துரோகத்தைத் தூண்டி விட்ட விபசாரி பொன்னியும் தூக்கில் தொங்கியாக வேண்டும்.

**மகா வீ :-** நீதியில் பேத மில்லை. மகனுக்கு ஒரு நீதி, மக்களுக்கு ஒரு நீதி வழங்கும் மரபில் நான் பிறக்க வில்லை. இவர்கள் மூவரும் ராஜத் துரோகிகள். மூவரும் தூக்கு மேடை ஏறித் தான் ஆக வேண்டும்.

**புத் :-** மகாராஜா !..........

**மகா வீ :-** பேசாதே ! துரோகி.

**யாளி :-** அரசர் பெருமானே ! அவசரப் படுகிறீர்கள்.

**மகா வீ :-** அநியாயக்காரா ! அரைக் கணங்கூட உங்களுடைய **அ**க்ரம உடல்கள் இந்த உலகத்தில் இருக்கக் கூடாது. சுட்டுச் சாம்பராக்க வேண்டும்-

**வி :-** அந்தச் சாம்பலைக் கூடக் கடலில் கரைத்து விட வேண்டும் மகாராஜா !

**யாளி :-** மகாராஜா !

**மகா வீ :-** மந்திரியாரே ! மூவருக்கும் தூக்கு. இதுவே தீர்ப்பு.

**(அரசர் சென்று விடுதல்.)**

**யாளி :-** **(ஆவலோடு இளவரசரைக் கட்டிப்பிடித்து)** இளவரசே!.

**வி :-** என்ன எழுவரசே !......... உம். இழுத்து வாருங்கள்.

**(மிடுக்காகச் செல்கிறான். சபை கலைகிறது.)**

## காட்சி 26. இன்பபுரி அரண்மனைத் தெரு.

**(மகாராஜா மாடியில். மக்கள் தெருவில்)**

ஒருவன் :- தீர்ப்பு தெரியுமா?

மற்றவன் :- என்ன? என்ன?

ஒரு :- இளவரசருக்குத் தூக்குத் தண்டனை.

(இருவரும் ஓடுகிறார்கள்.)

மற்றவன் :- ஆ!............

(இரு பெண்கள்.)

ஒரு :- இளைய ராஜாவுக்குத் தூக்கா? அட அநியாயமே!

மற் :- அநியாயமா? அனர்த்த காலம் வந்துட்டுது.........

(ஓடுகிறார்கள்.)

(வயலிலிருந்து கலப்பை சுமந்து கொண்டு வருபவன் "இளவரசருக்குத்தூக்கு" என்ற ஒலி கேட்டு, கலப்பையைப் போட்டு விட்டு ஓடுகிறான். பெரிய மக்கள் கூட்டம் பரபரப்போடு ஓடுகிறது. மகாவீரரும், விபீஷணரும் இதைக் காணுகிறார்கள்)

வி :- எல்லோரும் கொலைக்களத்திற்குத்தான் போகிறார்ள்.

மகா வீ :- காரணம்?

வி :- ஏதாவது புரட்சி ஏற்படலாம்.

மகா வீ :- புரட்சியா?

வி :- அவர்களை பலாத்காரமாக விடுவிப்பார்கள்.

மகா :- ஆ!

வி :- அடுத்தபடி அரண்மனையிலும் நுழையலாம். மகாராஜா! இந்தச் சிறு புரட்சிலேயே நம் சிம்மாசனத்தைக் கைப்பற்றி விடுவார்கள்.

மகா வி :- இதை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். விபீஷணரே! வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள்.

வி :- ஏற்பாடென்ன? ஈட்டி முனையைக் காட்டினால் இந்தப் புரட்சி யெல்லாம் பொசுங்கி விடும். முதலில் பட்டாளத்தை அனுப்புகிறேன்.

மகா வி :- உம். அனுப்புங்கள்.

வி :- அதைத் தொடர்ந்து நாமும் செல்ல வேண்டும்.

மகா வி :- ஆகட்டும் புறப்படுங்கள்.

(வேகமாகப் போகிறான் விபீஷணன்.)

## காட்சி 27. தூக்குமேடை.

(மக்களை சிப்பாய்கள் தடுத்து ஆவலை அதிகப்படுத்துகிறார்கள். ஒரே பரபரப்பு. கூச்சல். தூக்கு மேடையில் மூவரும்)

புத் :- அமைதியா யிருங்கள். நான் சாகும்போது உங்கள் அமைதியையாவது காண்கிறேன். (கூட்டத்தில் ஒருவன்) இளைய மகாராஜா! இந்த அநியாயத்தை நாங்கள் காணவேண்டுமா?

புத் :- காணவேண்டாம். போய் விடுங்கள். இன்னும் சிறிது நேரத்தில் சாகப்போகும் நாங்கள், இந்தக் குழப்பத்தால், இப்பொழுதே செத்து விடுவோம். உங்கள் ஆத்திரத்தால் எங்கள் உயிரைக் காப்பாற்ற முடியாது. உங்கள் அனுதாபத்தால் எங்கள் லட்சியத்தைப் பூர்த்தி செய்யுங்கள். பேதமற்ற பெரு வாழ்வு. சீமான் ஏழை என்ற நிலை ஒழிந்த சிங்கார வாழ்வு. சமத்துவ வாழ்வு. சமாதான வாழ்வு. இதற்காக அடிகோலினோம். அழியப்போகிறோம். இதோ ஒரு தீண்டத்தகாதவள். சாதி கெட்டவள் அவளும் நானும் ஒன்றாக உயிர் விடுகிறோம். எங்கள் பிணங்களைக் கண்ட பிறகாவது சாதி உணர்ச்சி ஒழியட்டும். எதிர் காலத்தில் எங்கள் கல்லறைகளின் மீது சாதியை விரட்டிய சமரசக் காதலர்கள் சாந்தி கீதம் பாடட்டும்.

(ஒரே அமைதி)

சேனதி :- இளவரசே! கடைசியாக சொல்ல வேண்டியது?

புத் :- எதை......... யாருக்குச் சொல்லப் போகிறேன்.! எந்நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். ஏ! தூக்கு மேடையே! நீதியின் முன்னே நிறுத்தப்பட்டு மரண தண்டனை பெற்ற எத்தனையோ துரோகிகளின் பிணங்களை முத்த மிட்டிருக்கிறாய். இன்றைக்கு இந்த நிரபராதிகளின் பிணங்களுக்கும் பஞ்சணையாகப்போகிறாய்! சதி செய்தவர்கள்—கொலை புரிந்தவர்கள்—ராஜத் துரோகிகள். இத்தனை பேரையும் கழுத்தை நெறித் திருக்கிறாய். இன்றைக்கு எங்களையும் கட்டித் தழுவப் போகிறாய். கோரமான குற்றவாளிகளை உன் கோரப் பசிக்கு இரையாக்கிக் கொண்டிருக்கிறாய். இந்நாட்டில் கொந்தளிப்பை ஒழிக்கப் புறப்பட்ட எங்களையும் சுவை பார்க்கப் போகிறாய். சுவைத்துப் பார்! எங்கள் ரத்தத்தில் துரோக உணர்ச்சி இருக்கிறதா என்று சுவைத்துப் பார்! எங்கள் இருதயத்தில் சதியாலோசனை தேங்கி யிருக்கிறதா என்று சுவைத்துப் பார்! எங்கள் எலும்புக் கூட்டில் சூழ்ச்சி எண்ணம் ஒட்டிக் கொண்டிருக்கிறதா என்று சுவைத்துப் பார்!

சேனதி :- (யாளிதத்தரிடம்) நீங்கள் ஏதாவது?

யாளி :- இளவரசரோடு சாகிறேனே என்ற பெருமை. மகாராஜாவின் தீர்ப்புக் கேற்ப மடிகிறேனே என்ற திருப்தி. என் நாட்டு தமிழர் முன்னிலையில் என் உயிர் விடை பெறுகிறதே என்ற ஆறுதல். சேனதிபதியாரே! சாவதற்கு முன் ஒருவேண்டுகோள். இளவரசருக்கு முன் நான் சாகவேண்டும். அந்த உத்தமரின் உயிர் தூக்குமரத்தில் துடிப்பதை நான் காணமாட்டேன். வாகை மாலை சூட வேண்டிய அவர் கழுத்தில் சாவுக் கயிறு இறுக்கப்படுவதை நான் கான மாட்டேன். சிம்மாசனத்தில் அமர வேண்டிய இவர் பொன்மேனி சவமாக இந்த மண்ணில் சாயும் கோரத்தை நான் காண மாட்டேன். நானே முதலில் சாகிறேன்.

பொன்னி :- நானே முதலில் சாகிறேன். இளவரசரைத்

தூக்கு மேடையில் நிறுத்தியது நான்! நானில்லா விட்டால் இந்த நாட்டுக்கே இந்த நாசம் வந்திருக்காது. என்னுடைய காதல் இளவரசரின் பலிபீடம். நான் ஒருத்தி நாட்டில் பிறந்தேன். ஆம்! இந்த நாட்டையே அழிக்கப் பிறந்தேன். நானே முதலில் சாகிறேன்.

"யாரும் சாக வேண்டியதில்லை"

(என்ற குரல் கேட்டு எல்லோரும் திரும்புதல் குமரி பிரவேசித்தல். எதிர்ப்புறத்தில் மகாவீரர் விபீஷணர் பிரவேசித்தல்)

குமரி :- நிறுத்துங்கள். அவர்களைத் தொடாதீர்கள்.

மகாவீ :- ஏன் நிறுத்த வேண்டும்? குமரி! நீயும் வீணாய் சாகாதே!

விபீ :- புரட்சியின் தலைவி, மகாராஜா! இதுவும் ஒரு வகையில் ராஜத் துரோகம்.

குமரி :- ராஜத் துரோகம்! மகாராஜாவுக்குத் தன் மகனிடத்திலிருந்த மாறாத அன்பு உள்ளத்தை அறுத்தெரிந்து விட்டு, ஆளப் பிறந்தவர்க்கு துரோகி என்ற பட்டம் சூட்டி, தூக்கு மேடையில் நிறுத்தி விட்டு, இன்பபுரியின் நீதியையே கொலை செய்யத் துணிந்தீரே! அது கலப்பில்லாத ராஜ பக்தி!— நான் செய்வது ராஜத் துரோகம். அப்படித்தானே?

விபீ :- குமரி! கொலைக்களத்தில் கூக்குரலிட உன்னை யாரும் கூப்பிட வில்லை. அரசர் பெருமானுக்குத் தெரியாத நீதியை எடுத்துரைக்க உன்னை யாரும் அழைக்க வில்லை.

கும :- யாரும் என்னை அழைக்க வேண்டியதில்லை. இது நான் ராஜ குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமை! நாட்டுக்கு செய்ய வேண்டிய வேலை! இளவரசருக்காக செய்ய வேண்டிய தியாகம்.

விபீ :- காமவெறிக்காகச் செய்ய வேண்டிய சாகஸம்,

என்று கூறு, பொருத்தமா யிருக்கும். (அரசரிடம்) மகாராஜா! நாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் பயங்கரமானது. குமரி ஏதோ முன்னேற் பாடோடு வந்திருக்கிருள். தாமதித்தால் புரட்சி நடக்கும். உடனே மாளிகைக்கு புறப்படுங்கள்.

**மகா :-** (**கொலையாளிகளிடம்.**) உம். நடக்கட்டும். (**மாளி கையை நோக்கி திரும்பல்.**)

**கும :-** அரசே! கொஞ்சம் பொறுங்கள். இளவரசர் நிர பராதி என்பதை நிரூபிக்கிறேன்.

**மகா :-** அவன் ஒரு நீசன் என்பதைப் பொன்னியின் காத லும், ஒரு துரோகி என்பதை விபீஷணரிடமிருந்த கடிதங்களும், நிரூபித்துவிட்டன.

**கும :-** மகன் என்ற வாஞ்சைகூட இவ்வளவு சீக்கிரத்தில் மறைந்து விட்டதே.

**மகா :-** நான் நீதி தவருதவன்.

**கும :-** ஆனல் அவசரக்காரர்.

**விபீ :-** உம். நடக்கட்டும்.

(**"நிறுத்துங்கள்"** என்ற ஒலியுடன் **சித்ராவின் பிரவேசம்.**)

**விபீ :-** சித்ரா எங்கே வந்தாய்?

**சித் :-** கணவனுக்கு துரோகம் செய்ய, நாட்டுக்கு நன்மை செய்ய!

**விபீ :-** சித்ரா!

**சித் :-** அன்பாக அழைக்க வேண்டாம். நான் உங்கள் எதிரி. இந்தச் சதி வேலைகள் உங்கள் சுய நலத்தின் அளவோடு இருந்தால் —சித்ரா உங்களுக்குப் பகையாக வந்திருக்கமாட்டாள். உங்கள் பயங்கர எண்ணத்திற்குப் பட்டத்து இளவரசர் பலியா

வது, அதை நான் அனுமதிப்பது, நாட்டுக்குச் செய்யும் பாபமல்லவா ?

**மகா :-** என்ன ? என்ன ?

**விபீ :-** ஒன்றுமில்லை மகாராஜா! ஏதோ மாயாஜாலம். என் மனைவியையும் மயக்கிவிட்டார்கள்.

**சித் :-** என்னை யாரும் மயக்கவில்லை. நிதானத்தோடுதான் பேசுகிறேன். இளவரசர் நிரபராதி!

**மகா :-** எப்படி ?

**சித் :-** இன்பபுரியைக் கைப்பற்ற என் கணவர் எழுதிய சதிக் கடிதங்கள். **(அவரிடம் நீட்டி)** இவைகளை முன்பு ஒரு முறை இளவரசர் கைப்பற்றி, மீண்டும் இழந்தார். அவைகளே இந்தக் கடிதங்கள்.

**(மகாவீரர் வாங்கிப் படித்தல்)**

**விபீ :-** அரசே! என்னவோ மாயம் நடக்கிறது. நீங்கள் நம்பாதீர்கள்.

**மகா வீ :-** **(படித்து முடித்து)** நான் நம்புவதா? விபீஷணரே! பயப்படாதீர். நீதி தவறி நடக்க மாட்டேன். நீர் செய்த உதவிக்குத்தகுந்த பரிசு அளிக்கப் போகிறேன்.

**வி :-** **(மகிழ்ந்து)** பரிசு எனக்குப்பெரிதல்ல. நாடுதான் பெரிது.

**மகா :-** அப்படிச்சொல்லாதீர். இது நான் தரும் பரிசல்ல. இந்நாட்டுச் சட்டம் தரும் பரிசு.

**வி :-** சட்டமா ?

**மகா :-** இளவரசன் ஸ்தானத்தை உமக்கு அளிக்கப்போகிறேன்.

**வி :-** **(இளித்தபடி)** இளவரசர் ஸ்தானமா ?

மகா :- ஆம். இந்த ஸ்தானம். (தூக்கு மேடையைக் காட்ட, விபிஷணன் திகைக்கிருன்)

மகா :- திகைக்காதீர்! மாணிக்கக் கோட்டை காவலன் மாதவன் எழுதிய கடிதம் பாரும். "மன்னனைச்சாய்த்து மணிமுடியை விபீஷணர் தலையில் வைக்காத வரையில், மாதவன் தூங்கமாட்டான்." இதோ படையெடுக்கத் தயாரித்த படம். விபீஷணரே! நல்ல முயற்சிகள்.

வி :- இவை பொய்க் கடிதங்கள் மகாராஜா!

சித் :- இல்லை. இளவரசர், யாளிதத்தர், பொன்னி, மூவரையும் சூழ்ச்சியாக வர வழைத்துத் தூணில் கட்டி, ஒருவரைக் கொல்வதாக ஒருவருக்கு பயங்காட்டி தயாரித்த உங்கள் கடிதங்கள்தான் பொய்!

வி :- இதெல்லாம் என்ன மாயை?

மகா :- துரோகி! பாம்பைப் போல் நெளிந்து என் பரம்பரையைப் பாழாக்கப் பார்த்தாய். நாளை உனக்கும், உன் கூட்டாளிகள் மாதவன், எல்லப்பன், மற்றவர்களுக்கும் விசாரணை. புத்தா! என்னை மன்னித்து விடு.

(தழுவிக் கொள்கிருர்)

புத் :- மக்கள் உங்களை மன்னிப்பார்கள்.

மக்கள் :- இளவரசர் வாழ்க! மகாராஜா வாழ்க!!

மகா :- சித்ரா! நாட்டுக்காக நீ செய்த தியாகத்தை இன்பபுரி உள்ளளவும் மறக்காது.

வி :- தியாகம்! இல்லை, இளவரசன்மேல் உள்ள மோகம். சண்டாளி செய்த சதிக்குப் பெயர் தியாகம். ஆசை நாயகனுக்காகச் சொந்த நாயகனைக் காட்டிக் கொடுத்த சூன்யக் காரியின் சூழ்ச்சிக்குப் பெயர் தியாகம்!

(சித்ராவின் கண்களில் நீர்)

மகா :- உம். இந்த விபீஷணனுக்கு விலங்கிடுங்கள்!

(விலங்கிட வந்த காவலாளிகளின் கட்டாரியை இழுத்து வீசுகிறான். அது இளவரசன் மேல் பாய்வதற்குள் குமரி குறுக்கிட்டுத்தன் மார்பில் தாங்குகிறாள். காவலர் அவனை இழுத்து நிறுத்துகின்றனர்.)

மகா :- இந்தப் பழிகாரனை இப்பொழுதே பலியிடுங்கள்.

(விபீஷணன் தூக்கு மேடையில் நிறுத்தப்படல். குமரியைப் பொன்னியும், சித்ராவும், வாரியெடுக்கிறார்கள்.)

மகா :- எங்கே அரண்மனை வைத்தியர்?

(கூட்டத்திற்குள் இருந்து வைத்தியர் வெளிப்பட்டு)

வைத் :- இதோ. இருக்கேனுங்க.

மகா :- வைத்தியரே! குமரி பிழைக்க வேண்டும். அவசர சிகிச்சை தேவை. கொண்டு செல்லுங்கள் அரண்மனைக்கு.

(குமரி எடுத்துச் செல்லப்படுகிறாள். கூட்டம் கலைகிறது)

## காட்சி 28. அரண்மனை வெளிப்புற நந்தவனம்.

(பாடிக்கொண்டே, பௌத்த பிக்ஷுணியாகச் சித்ரா போகிறாள். இளவரசரும் பொன்னியும் வருதல். குறுக்கிட்ட புத்தன்)

புத் :- சித்ராதேவி! இதென்ன கோலம்.?

சித் :- ஆசைக் காதலனைக் காட்டிக் கொடுத்தவளின் அலங்கோலம். தாய் நாட்டுக்காக பதிபக்தியை தியாகம் செய்தவளின் தவக்கோலம்.

புத் :- நீங்கள் எங்கும் போக வேண்டாம். அரண்மனையிலேயே சுகமா யிருக்கலாம்.

**சித் :-** சுகம்! என் சுகத்திற்காக் கவலைப் பட்டவரின் சுகத்தையே அழித்தேன். இனிமேலா எனக்குச் சுகம்? இனி இந்த வாழ்க்கையில்தான் சுகம்.

**புத் :-** கவலைப்படாதீர்கள். கணவனைக் காட்டிக் கொடுத்த நேரத்தில், இந்த நாட்டைக் காப்பாற்றினீர்கள். ஒரு விபீஷணன் உங்களைச் சபிப்பான். இன்பபுரியின் எதிர்காலச் சந்ததிகள் உங்களை வாழ்த்தும்.

**சித் :-** இளவரசே! பெண்கள் சமுதாயம் "புருஷனைக் காட்டிக் கொடுத்தவள், காட்டிக் கொடுத்தவள்" என்று தலைமுறை தலைமுறையாக என்னைத் தூற்றும். அதற்கு இதுதான் பிராயச் சித்தம்.

**புத் :-** அப்படியானால் தலைநகரிலேயே நீங்கள் தங்குவதற்கு, ஒரு இடம் அமைத்துத் தருகிறேன்.

**சித் :-** சந்நியாசி வேஷத்தில் ஊரை ஏய்ப்பவர்களுக்கல்லவா உட்கார்ந்து கொள்ள ஒரு இடம் வேண்டும்! என் மன அலைகள் குமுறிக் கொண்டிருக்கும் வரையில், இப்படி அலைந்து கொண்டிருக்கிறேன். இளவரசே! ஒரு வேண்டுதல். உங்கள் இருவரையும் ஒன்று சேர்க்க ஓயாது கஷ்டப் பட்டவள் குமரி. அவள் மரணப் படுக்கையில் கிடக்கிறாள். அவளை மறந்து விடாதீர்கள்.

**(பாடிக்கொண்டே செல்லல்)**

**பொன் :-** அன்பா! மன்னருக்கு நம் காதல் பிடிக்கவேயில்லை. என்ன இருந்தாலும் நான் பறைச்சியல்லவா?

**புத் :-** சிப்பியில் முத்து. அதை மகுடத்தில் வைப்பார். சேற்றில் செந்தாமரை, அதன் அழகை ரசிப்பார். ஆனால் மனித குலத்திலேயே பிறந்த உன்னை வெறுக்கிறார். பொன்னி! உலகமே எதிர்த்தாலும் நம்மைப் பிரிக்க முடியாது.

**பொன் :-** நம்மை ஒன்று சேர்க்க, சித்ரா கணவனை இழந்தாள். குமரி.........காதலை இழந்தாள்.

[மகாவீர மன்னர் வருதல்]

புத் :- [தனக்குள் சோகமாக] உயிரையும் இழந்து விடுவாள் போலிருக்கிறது......குமரி......கொய்யாக்கனி! சாவு அவளைக் கொய்து விடுப்போலிருக்கிறது.

மகா :- (பிரவேசித்து) புத்தா! இந்நாட்டு மன்னன் என்ற முறையில் உன்னிடம் ஒன்று கூற வேண்டும்.

(பொன்னி மறைந்து விடல்.)

புத் :- அரசே!

மகா :- நீ.........அரச குடும்பத்தில் பிறந்தவன். வேற்று நாட்டு வேந்தர்களின் போற்றுதலுக்கு ஆளாக வேண்டியவன். இந்த நிலையில் நீ.........பொன்னியைக் காதலிப்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

புத் :- பாதாளத்தைக் குடைந்து படாத பாடு பட்டு பசும் பொன்னெடுத்தவனைப் பார்த்து, அதை வீசி எறிந்து விடு அப்பனே என்பது போல் இருக்கிறது, உங்கள் பேச்சு.

மகா :- உன் தந்தை என்ற முறையில் நான் இதை ஆமோதிக்கிறேன். மன்னன் என்ற முறையில் சட்டரீதியாக உங்கள் காதல் செல்லாது என்கிறேன்.

புத் :- ஒரே பிரச்சினை. அதற்கு இரண்டு முறை. தந்தையே சட்டம் நியாயம் இரண்டுக்கும் தொடர்பு இருப்பதுதானே ஆட்சி!

மகா :- உனக்காகச் சட்டத்தை மாற்றி அமைப்பது, சுயநலம்! என்று உலகம் சொல்லும்.

புத் :- இல்லை. என் காதல், சமத்துவ பாதைக்கு ஒரு கைகாட்டி யாக அமையும். உளுத்துப் போன பழக்க வழக்கங்களைக் கட்டி அழும் உலகத்தினர்க்கு ஒரு உயர்ந்த வழி வகுக்கும்.

**மகா :-** நீ விரும்புகிற கலப்பு மணம் உன் மகுடத்திற்குத் தடையாக நிற்கும். நாட்டை ஆள வேண்டியவன் நீ! கேவலம் ஒரு பெண்ணுக்காக முடி இழப்பதா?

**புத் :-** முடி! காதல் சுதந்திரம், பெறமுடியாத எனக்கு ஏன் முடி? அரசே! இதை என் தன்னலம் என்பீர்கள். இல்லை! ஒரு பெண்ணைத் தவிக்க விட்டு விட்டு இந்தப் பேரரசுக்கு முடி சூட்டிக் கொள்வதுதான் தன்னலம். சிம்மாசனத்திற்காக என் சிந்தையில் குடியேறியவளை விலக்கினால் இந்த உலகம் உள்ளளவும் தூற்றும்.

**மகா :-** அப்படியானால்.........?

**புத் :-** காதலுக்காக...மகுடத்தை தியாகம் செய்கிறேன்.

**மகா :-** யோசித்துப் பார். மக்களுக்காக உழைக்கிறேன், என்ற உன் கொள்கை, ஒரு மங்கைக்காகத் தவிடு பொடியாகிறது.

**புத் :-** மன்னனாக இருந்துதான் மக்கள் தொண்டு ஆற்ற வேண்டுமென்று சட்டமில்லை. ஒரு கூலிக்காரனாக இருந்து கூட அந்த வேலை செய்ய முடியும்.

**மகா :-** அப்படியானால் மகுடமிழக்க மனந்துணிந்து விட்டாயா?

**புத் :-** ஆம்.

**மகா :-** புத்தா! (கெஞ்சி) உன்னை நம்பி வாழ்ந்தேன். நீ ஏமாற்றி விட்டால், இந்நாட்டாட்சியை யாரிடம் கொடுப்பேன்?

**புத் :-** மக்களிடத்தில் கொடுங்களப்பா! உங்கள் அவசரத்தீர்ப்பின்படி அன்று நான் அழிந்திருந்தால்?

**மகா :-** நீயே ஒரு வழி சொல். பிற நாட்டு வேந்தர் நம்மை வெறுக்காத வழி சொல்!

**புத் :-** தந்தையே! இந்த ஆட்சியை என்னிடம் கொடுத்தால்

கூட நான் அரசனாக இருந்து ஆள மாட்டேன். மக்களாட்சியாக மாற்றுவேன். மக்களின் பிரதிநிதியாக இருந்து பணி செய்வேன். மன்னராட்சியை ஒழிப்பேன்.

**மகா :-** மக்களாட்சியிலும், மண்டை கர்வம் பிடித்தவர்கள் மமதைக் காரர்கள் அதிகாரங்களை அள்ளி வீசுவார்கள். மன்னராட்சியே போதும் என்று மக்கள் நினைக்குமளவுக்குக் கொடுமைகளைக் கொட்டும் கோர ஆட்சியாக மக்களாட்சி அமைந்தால்...?

**புத் :-** மாற்றி அமைக்கும் அதிகாரம் மக்கள் கையில். அக்கிரமம் செய்பவர் ஆணிவேரோடு பிடுங்கி எறியப்படுவார்கள்.

**மகா :-** என்ன இருந்தாலும்............

**புத் :-** கிரீடப் பைத்தியம் உங்களை விட்டவில்லை. அப்பா! சாகும் வரை நீங்களே மன்னராக இருங்கள்.

**மகா :-** அதன் பிறகு நீ............?

**புத் :-** நான் மக்களோடு கலந்து வாழப் போகிறேன். மக்களுக்காகத் தொண்டு செய்யப் போகிறேன். மக்களின் மன மயக்கத்தை ஒழிக்கும் வரையில் எனக்கு ஓய்வு கிடையாது.

**மகா :-** என் காலத்திற்குப் பிறகு நாடு ?

**புத் :-** நாசமாகி விடாது. கவலைப் படாதீர்கள். நல்லதொரு மக்களாட்சி மலரும். அந்த மலர்ச்சி கருகிவிடாமலிருக்க......... நான் மக்கள் இயக்கத்தை வலுப் படுத்துகிறேன்.

**மகா :-** மைந்தா ! உன் தியாக புத்தி இந்த உலகிற்கே ஒரு உதாரணம்.

(காவலாளி வந்து)

**காவ :-** மன்னர் மன்ன ! குமரி தேவிக்கு ரொம்ப ஆபத்தாயிருக்கிறது, கூப்பிடுராங்க.

**புத் :-** ஆ !............

(பரபரப்போடு புறப்படுகிருர்கள்)

காட்சி 29. குமரியின் படுக்கை.

(மகாவீரர்—வைத்தியர் நிற்கின்றனர். குமரி மார்பில் பெரிய கட்டோடு திணறிக்கொண்டு படுத்திருக்கிருள். பக்கத்தில் தோழி ரமேலாவும் பொன்னியும் இருக்கிருர்கள். புத்தன் வரு கிருன். ஆதரவோடு அவளை எடுத்து மடியில் கிடத்தி).

புத் :- குமரீ! குமரி!

(கண் விழித்து)

குமரி :- அத்தான்! உங்கள் நெஞ்சில் எனக்கு இடமில்லா விட்டாலும் மடியிலாவது கிடைத்ததே;

புத் :- இந்நாட்டுத் தமிழர் இதய மெல்லாம் இடம் பெற்று விட்டாய். குமரி! நீ சாகாதவள். என்னை மன்னித்துவிடு. உன் காதலைக் கொலை செய்த குற்றம் என்னை விடாது.

கும :- இதோ...நான் அனுபவிக்கும் இன்பம், உங்கள் குற் றத்தையெல்லாம் பொசுக்கி விடும்.. அணையப் போகும் விளக் கின் பெருஞ்சோதி யல்லவா இந்த இன்பம்!

புத் :- குமரீ!..........

கும :- அத்தான்! எங்கே...உங்கள் உள்ளத்தில் நான் இடம் பெற்றேன் என்பதற்கு அடையாளம்.........? ஆசை முத்தம்....... ஆம். ஒரு முத்தம்! ஒரே முத்தம்! நான் பிணமாவதற்குள்......

புத் :- குமரீ! இன்பபுரியின் வரலாற்றில் அழிக்க முடியாத இடம் பெற்ருய். மக்கள் மனதில் மறைக்க முடியாத இடம் பெற் ருய். என் கல் நெஞ்சைக் கரைத்து என் வாழ்வுக்கே ஒளி தந்த காதல் விளக்காகி, என் ரத்த ஓட்டத்தோடு கலந்து என் இருதய பீடத்தில் இடம் பெற்ருய். இதோ அதன் அடையாளம்...........

(முத்த மிடக் குனிவதற்குள், நிழல் காட்சி)

ஒலி :- "ஒரே முத்தம்"

(அதை பொட்டி மெதுவாக எழுகிறது "சமாதி". அதைச் சுற்றி வருகிறார்கள். நிழல் மாறுகிறது. குமரியின் சமாதிக்கு இளவரசனும் பொன்னியும் மாலையிடுதல். இசை பாடல்)



# நகைச் சுவைப்பகுதி.

காட்சி 1. சந்தேகம் வீடு.

(பெரியகுதிர். கோழி, விரட்டி, அடுக்கு, ஏர்க்கலப்பை, மண் வெட்டி, இருக்கின்றன. பாஞ்சாலியம்மன் சிலைக்குமுன் சம யோசிதம் பாடிக்கொண்டிருக்க, சந்தேகம் வருகிறன்.)

**சந்தேகம் :-** சமயோசிதம்! சமயோசிதம்! என்ன சமயோசிதம்! எப்பப் பார்த்தாலும் பூஜையிலேயே இருக்கிறே? புருஷனோடு பேசரத்துக்கு உனக்கு புடிக்கலியா? நம்ம எளந்தம்பதிகள் சந்தோஷமா இருக்கவேண்டிய நேரத்திலே, சதா பாஞ்சாலியம்மனும் பாட்டுமா இருந்தா நான் என்னதான் பண்றது?

**சமயோசிதம் :-** உங்களோடே பேசிகிட்டே இருந்தா சரியா போச்சாக்கும்? என் மாங்கல்யத்துக்கு ஒரு கெடுதியும் வராமல் பாதுகாக்கத்தான் பாஞ்சாலி அம்மங்கிட்டே தவங்கிடக்கிறேன்.

**சந் :-** என்னடி! மாங்கலியம்............கொஞ்சம் அழுத்தமான கயிறுபோட்டா ஒரு கெடுதியும் வராமெ பத்திரமா இருக்கு! இதுக்கா பயப்படுறே?

**சம :-** என்னமோ உங்களுக்குப் பரிகாசமா இருக்கு. திடீர்னு உங்களுக்கு ஏதாச்சும் ஆயிட்டா, நான் மஞ்சளிழந்து பூவிழந்து, மாங்கல்யமிழந்து தவிக்கவேண்டாமா?

**சந் :-** சரிதான். சரிதான்! மஞ்சளும் பூவும் போய்விடுமேன்னுதான் சஞ்சலப்படுறே. நான் சாவுறதைப்பத்தி கவலே இல்லே.

**சம :-** ஐயோ! என் காதிலே ஈயத்தை காச்சி ஊத்துறீங்களே! உங்க உயிருக்கு ஆபத்துன்னு என் உயிரு இந்த உடலிலே தங்குமா?

**சந் :-** வேறே உடலிலே பாஞ்சுடுமாக்கும்?

**சம :-** (அம்மனிடம்) பாஞ்சாலியம்மா! என் மாங்கலியத்தை

காப்பாத்தடி அம்மா! திரௌபதியாத்தா! என் புருஷன்தான் எனக்குச் சொத்து. நீ அஞ்சு பேருக்கு ஒரு மாங்கல்யம் போட்டிருந்தே. அழியாத பத்தினி. நான் ஒருத்தருக்கு ஒரு மாங்கல்யம் போட்டிருக்கேன். என் மாங்கல்யத்துக்கு ஒரு கொறவும் வராமல் காப்பாத்துடி.

சந் :- மாங்கல்யம் மாங்கல்யம்னு உயிரை விடு. என் மனசுக்குச் சந்தோஷமா ஒரு வார்த்தை பேசுறியா? காலையிலே எழுந்திருக்கிறேன். கஞ்சியை குடிக்கிறேன்......... வயலுக்குப் போயி வெய்யிலிலே காயறேன். அந்தி சாஞ்சி வர்றேன். அகப்பட்டதைத் திங்கிறேன். நீ பூசை பண்ண ஆரம்புச்சுடறே......... உன் பாட்டைக் கேட்டுகிட்டே தூங்குறேன். அப்புறம் பொழுது விடியறதுதான் தெரியுது. ஒரு நாளைக்கு என்னோடு சிரிச்சு பேசி சிங்காரமா விளையாடி சந்தோஷப் படுத்துறியா? ஊம்! மழையில்லாம வெடிச்சுபோய்க் கிடக்கிற வயலும் சரி......என் வாழ்க்கையும் சரி! உனக்குக் கட்டின தாலியை ஒரு மரத்துக் கிளையிலே மாட்டி வைக்கலாம்.

சம :- இந்த பாருங்க, இதெல்லாம் பேசாதிங்க! நான் சாவித்திரி ஆகப்போகிறேன்.

சந் :- என்ன! சாவித்திரி ஆகப்போறியா? இதென்னடி வம்பு!

சம :- ஆமாம். சத்தியவான் உயிரை சாவித்திரி யமன் கையிலிருந்து வாங்கினது மாதிரி, நீங்க செத்துப்போனலும் உங்க உயிரை யமங்கிட்டேருந்து வாங்கப்போறேன்.

சந் :- ஆ!...... (சந்தோஷம்)

சம :- அதுக்காகத்தான் அம்பாளுக்கிட்டே தவம்பண்ணி வரம் கேக்கிறேன்.

சந் :- ஏய் சமயோசிதம்! நீ உயிர் வாங்கிற வரத்தைப்பரிசோதிச்சு பாக்கிறேன்னு என்னை சாகஅடிச்சு பாத்துடாதே!

சம :- நான் சாவித்திரி மாதிரி சக்தி அடையற வரைக்கும், இப்படிப் பூசை பண்ணிகிட்டுதான் இருப்பேன்.

சந் :- வேணும்னு, நானுவது உன்னை இனிமேல் சாவித்திரின்னு கூப்பிடுறேன். இந்தப் பூசையை விட்டுடு!

சம :- சரி ஆகட்டும். நீங்க வயலுக்குப் போங்க நேரமாவுது!

சந் :- எங்கே............... என்கிட்டே ஒருதரம் கொஞ்சு! உம், கொஞ்சுடி!

சம :- போங்க........... என் பிராணநாதா!

சந் :- ஆருயிரே! ஆலம்பழமே! ஆக! ஆக!! இந்த ஆசை வார்த்தை, என்னை இந்திரலோகத்துக்கே இட்டு கிட்டு போகுதே!

சம :- உம், போதும்! வயலுக்குப் புறப்படுங்க.

**(ஏர் கலப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டவன், திரும்பி கோழியைக் கையில் எடுத்து)**

சந் :- சமயோசிதம்! இன்னைக்கு கோழிக்கறி சமையல்! தெரியுமா? சிக்கிரம் சமையலை முடிச்சு வயலுக்கு சாப்பாட்டை எடுத்துகிட்டு வா!

சம :- பாவம்! ஒரு கோழிதானே மிச்சமிருக்கு!

சந் :- இருந்தா என்ன? வேறே வாங்கிக்கலாம். சீக்கிரம் வேலையைப்பாரு! **(கோழியிடம்)** ஏ கோழியே! இன்னைக்கு நீ சாகப்போகிறுய். இந்த இளந்தம்பதிகள் வயிற்றுக்குள் போகப் போகிறுய்! என் பிராண நாயகியே! வரட்டுமா?

**(நிற்கிருன். அவள் பாஞ்சாலியம்மனிடம் பூசை செய்வதுபோல் பாட ஆரம்பிக்கிருள்)**

சந் :- **(தனக்குள்)** ஆஃகா! என்ன கற்பு, என்ன கற்பு! பெரிய பெரிய ரிஷிபத்தினியெல்லாம், கற்பு விஷயத்திலே இவளுகிட்டே பிச்சை வாங்கணும்!

(போகிருன்)

சம :- அப்பாடா! தொலேஞ்சுது பீடை! இது அழகுக்கு நான் இதோட கொஞ்சிகிட்டே இருக்கணுமாம். நல்ல வேளே, இந்த பாஞ்சாலியம்மனும், இந்தக் குதிரும் இல்லேன்னு..........

"நம்ப தப்பிக்கவே முடியாது"

(என்று சொல்லிக்கொண்டே குதிருக்குள்ளிருந்து புறப்படுகிருன் அதிர்ஷ்டம்)

சம :- பாவம்! ராத்திரி யெல்லாம் ரொம்பக் கஷ்டமா இருந்திருக்குமே?

அதிர்ஷ்டம் :- இல்லே. இல்லே. குளிர்காலம் பாரு. ரொம்ப அடக்கமா யிருந்தது. ஆமாம். உன் புருஷன் ஊருக்குப் போயிருக்கான்னே, அர்த்த ராத்திரியிலே வந்துட்டானே. ஏன் வந்தான்?

சம :- என்னே விட்டுதான் அவருக்கு பிரிஞ்சு இருக்க முடியாதே. அதான் உடனே ஓடியாந்துட்டாரு!

அதி :- குதிருக்குள்ளே ஒரு பெருச்சாளி, அது என்கிட்டே காதல் பண்ண வந்துட்டது......... பாரேன். பாதி தலேமயிரைக் கத்திரிச்சுகிட்டு போயிட்டுது!

சம :- உங்களாலே எனக்கு எவ்வளவு கஷ்டம் பார்த்திங்களா?

அதி :- காதல் பாதை கஷ்டமாத்தான் இருக்கும். இந்த சிங்காரிக்காக, நான் இந்தச் சிறையிலே கிடந்தேனே, இதைவிட ஒரு கஷ்டம் இருக்கா?

சம :- ஆனு, உங்களேப் பார்த்தோடனே என் கஷ்டமெல்லாம் ஓடிப்போவுது.

அதி :- உன்கஷ்டம் ஓடுது. உன்னேப் பார்த்ததும் என் கஷ்

டம் பறக்குது.

**சம :-** நம்ப ரெண்டுபேரும்...............

**அதி :-** கரும்பும் எறும்பும் போல—இரும்பும் துரும்பும் போல வாழுவோம்.

**சம :-** விஷயம் வெளிச்ச மாயிட்டா?

**அதி :-** வேற ஊருக்கு ஓடுவோம்.

**சம :-** அதான் முடியாது. என் புருஷன் பொல்லாதவன். வந்து கொலேயே பண்ணிடுவான்.

**அதி :-** கொலே!......... நம்மைக் கொல்லும். நம்முடைய பரிசுத்தமான காதலேக் கொல்லுமா? பிறகு சொர்க்கலோகத் திலே சென்று, நாம் சுகமாக வாழலாம். பயப்படாதே!

**சம :-** அவரும் தற்கொலே பண்ணிகிட்டு சொர்க்கலோகம் வந்தா?

**அதி :-** வரமுடியாது கொலேபாதகம் செய்தவன் நரகத் திற்குத்தான் போவான். கள்ளமற்ற காதலராகிய நாம் சொர்க் கத்தில் சொக்கிக் கிடக்கலாம்.

**சம :-** உங்களே ஆசை நாயகராக அடைஞ்ச என் அதிர்ஷ் டமே அதிர்ஷ்டம்!

**அதி :-** என் பேரே அதிர்ஷ்டந்தானே!

**(இருவரும் பாட்டு, மெய் மறந்த நிலே)**

**சம :- (திடுக்கிட்டெழுந்து)** அய்யோ! சமைக்கறதுக்கு மறந் துட்டேன். சூரியன்கூட மேற்கே சாஞ்சுட்டுதே!

**அதி :-** இந்த லோகத்திலே பசிவேறயா தெரியுது!

**சம :-** நமக்கு தெரியிலே! வயலில் கிடக்கிற என் புருஷன்... இந்நேரம் துடிச்சுடுவானே!.

**அதி :-** புருஷன் மேலே அவ்வளவு கவலே இருக்கா ?

**சம :-** கவலே ஒன்னுமில்லே ! பயந்தான் ! பசி வந்தா அவன் ராக்ஷசன்மாதிரிதான் ! இதுலே வேறே கோழிக்கறி ஆக்கிகிட்டு வரச்சொன்னன்.

**அதி :-** சரி ! இனிமே என்னெ செய்யப்போறே ? ஒரு திரியா ராத்திரிக்கு வந்து சாப்பிடுருன்.

**சம :-** அய்யோ ! கொலே பண்ணிடுவான் ! **(யோசித்து)** உம். ஒரு வேலே செய்றேன்.

**அதி :-** நீ இப்ப சமைச்சுக்கிட்டு போனலும் நாழி ஆயிட்டு துன்னு நாலு போடத்தான் போருன்.

**சம :-** பேசாமே இருங்க சொல்றேன்.

**(ஒரு கலேயத்தில் அரிசியை எடுத்துக் கொட்டிக்கொண்டு, ஒரு சட்டியில் கோழியை வைத்து மற்ருெரு சட்டியால் மூடிக் கொள்கிருள்)**

**அதி :-** இது என்ன வெறும் அரிசியை கொட்டுறே ?...உயிர்க் கோழியைக் கவுக்கறே ?

**சம :-** அப்புறம் சொல்றேன். **(புறப்படுதல்)**

**அதி :-** அப்ப நான் போகட்டுமா ? விபீஷணருக்குப் பெண் தேடப் புறப்படணும்.

**சம :-** நாளைக்கு...............?

**அதி :-** வருகிறேன். எலும்புத்துண்டை நாய் மறக்குமா ?

**(திரும்பிப் பார்த்தவண்ணம் போகிருன்)**

## காட்சி 2. வயல் வெளி.

**(குடியானவர் சாப்பிடுதல், சந்தேகம் பசியோடு களைத்து உட்**

கார்ந்திருக்கிருன்)

**கருப்பன் :-** ஏண்ணே சந்தேகம்! இன்னும் சாப்பிடாம உட்கார்ந்திருக்கிறே?

**சந் :-** சாப்பாடு வந்தாவுல்ல சாப்பிட.

(கருப்பன் முதலியோர் எழுந்து போதல்)

**சந் :-** (தனக்குள்) என்ன இன்னும் காணும்? ஒருவேளை குழம்பு வைக்க நேரமாயிட்டதோ? உம். பசி வயத்தைக் கிள்ளுதே! அட எழவு வயிரே! செத்த சும்மா இரேன். சமைக்கிருளா? இல்லே பாஞ்சாலி அம்மனுகிட்டே உக்காந்து பாடுருளா?

**கரு :-** (வந்து) எண்ணே இன்னும் சாப்பாடு வல்லியா?

**சந் :-** சாப்பாடு வல்லே, சாக்காடுதான் வரப்போவுது.

**கரு :-** உன் சம்சாரம் யாரோடவாவது பேசிகிட்டு இருக்குதோ?

**சந் :-** பக்கத்திலேகூட வீடு இல்லே. எந்த பொம்பளேயோட பேசப்போரு?

**கரு :-** பொம்பளேயோடதான் பேசணுமா?

**சந் :-** என்ன சொன்னே?

**கரு :-** உன் சம்சாரம் ஆம்பளே யோடவும் பேசுதுன்னு சொன்னேன்.

**சந் :-** என் சம்சாரமா? பதிவிரதையைப் பார்த்து அப்படிச் சொல்லாதேடா பாவி! நாக்கு அழுகிப்போயிடும்.

**கரு :-** பதிவிரதை! (சிரித்து) ஏய் சந்தேகம்! நீ என் கூட்டாளி ஆச்சேன்னு சொல்றேன். சொல்லக்கூடாது. இருந்தாலும் சொல்றேன். உன் பொஞ்சாதிக்கும் இன்னொருத்தனுக்கும் சிநேகம்.

சந் :- ஆ! நிஜமாவா?

கரு :- ஆமாம்.

சந் :- அப்படிச் சொல்லாதேடா! அவளை பாஞ்சாலியம்மன் மாதிரி நினைச்சு இருக்கேன். எப்பப் பார்த்தாலும் அம்மனு கிட்டேயே தவங்கிடக்கிருளேடா!

கரு :- எல்லாம் வேஷம்! நீ இளிச்சவாயன். நம்பி மோசம் போகிருய்.

சந் :- ஏய்! உண்மையைச் சொல்லுடா. என்னலே நம்ப முடியலியேடா!

கரு :- நம்பவேண்டாம். நீயே அவளை சோதிச்சுப்பார்த்து தெரிஞ்சுக்க. உன் பேருமாத்திரம் சந்தேகம்! உன்கிட்டே சந்தேகப்படுகிற குணமே இல்லியே.

சந் :- இன்னிக்கு வரட்டும், சந்தேகப்பட்டுப் பார்க்கிறேன்.

கரு :- பாரு! பாரு!

(போகிருன்)

சந் :- (தனக்குள்) பதிவிரதை மாதிரி பாசாங்கு பண்ணி, என்னை ஏமாத்திட்டாளே பாவி செருக்கி! வரட்டும் பார்க்கிறேன்.

(உட்காருகிருன். சமயோசிதம் கலயம் மூடிய சட்டியுடன் வருதல். சந்தேகம் அவளை ஏற இறங்க உற்றுப்பார்க்கிருன்.)

சம :- என்ன பார்க்கிறீங்க?

சந் :- சந்தேகப்படுறேன், சர்யா நில்லு. சண்டாளி! என்னை ஏமாற்றிவிட்டாயே.

சம :- என்ன சொல்றீங்க?

சந் :- என்ன சொல்ருங்க? ஏன் சாப்பாடு கொண்டுவர இவ்வளவு நாழி? பதில் சொல்லு. சந்தேகப்பட்டு கேக்கிறேன்.

சம :- அரிசி வேகமாட்டேன்னுட்டுது !

சந் :- ஏன் ? அரிசிக்கு என்ன கோபம் ? சந்தேகப்பட்டு கேக்கிறேன் சொல்லடி.

சம :- சங்கடமான சந்தேகமாயிருக்கே.

சந் :- நீ ஒரு ஆம்பளேயோட பேசிகிட்டு இருந்தியா ? சந்தேகப்பட்டு கேக்கிறேன் சொல் !

சம :- இருந்தேன்.

சந் :- உம்.........அதானே கேட்டேன் ! எப்ப பேசிகிட்டு இருந்தே ?

சம :- காலேயிலே பேசிகிட்டு இருந்தேன்.

சந் :- உம். அவன் பேரு ?

சம :. சொல்லக் கூடாது.

சந் :- சொல்லடி கள்ளி !

சம :- உங்கபேரை நான் சொல்லலாமோ ?

சந் :- அதைக் கேட்கலேடி அரட்டை ! வேறு ஒரு ஆம்பளே உனக்கு ஆசைநாயகன் உண்டா ? இல்லேயா ?

சம :- ஆம்பளேயா ? அன்னிய ஆம்பளே முகத்தை நான் பார்த்ததே கிடையாதே.........

சந் :- பசப்பாதே !...... சந்தேகப்பட்டு கேக்கிறேன். பட் பட் என்று பதில் சொல் !

சம :- உங்களுக்காகவே அல்லும் பகலும் அம்பாளுகிட்டே தவங்கிடக்கிறேன். அதிர்ஷ்டம் வரணும் வரணும்னு வேண்டிக் கிறேன். பாஞ்சாலியம்மா ! பாவமான வார்த்தையெல்லாம் என் காதில் விழுதே !

சந் :- வேஷக்கார நாயே! விபசாரி!

சம :- இரண்டுபேர் முகத்தைத் தவிர நான் வேறமுகத்தைப் பார்த்த தில்லியே! அய்யோ தெய்வமே!

சந் :- இரண்டுபேரு முகமா? ஆ! அய்யோ! என் கொலப் பெருமையே போச்சு!

சம :- உங்கள் முகம் ஒண்ணு. அம்பாள் முகம் ஒண்ணு.

சந் :- வேடிக்கையா பேசுறே! இதபாரு! உன் சங்கதியெல் லாம் தெரிஞ்சு போச்சு. உண்மையைச் சொன்னு பிழைச்சுக் குவே. இல்லே, இந்த மம்புட்டியாலேயே உன் மண்டையைப் பொளந்துடுவேன். (ஓங்குதல்.)

சம :- ஏ! பாஞ்சாலியம்மா! என் புருஷன் உண்மையை சொல்லச் சொல்ருரு! நான் பதிவிரதை என்பது உண்மையானுல் நான் சமைச்சி வந்த சோறு அரிசியாகவும், குழம்பு வச்சகோழி உயிராகவும் போகக்கடவது!

(தூக்கி வீசுகிருள், அரிசி கொட்டுகிறது. கோழி பறக்கிறது)

சந் :- ஆக! ஆக! என் பத்தினித் தங்கமே! என்னே மன் னிச்சுக்கோ! உன் கற்பே, கற்பு! பெரிய பெரிய ரிஷிபத்தினி எல்லாம் உங்கிட்டே பிச்சை வாங்கணும்!

(சுற்றி வந்து காலில் விழுகிருன்.)

## காட்சி 3. சந்தேகம் வீடு.

[பெரிய குதிர், கோழி, ஏர், கலப்பை, விரட்டி அடுக்கு. கோழியை வைத்துக்கொண்டு "புருப்பாட்டு" மெட்டில் கோழியால் தப்பித்ததை சமயோசிதமும் அதிர்ஷ்டமும் பாடிக்கொண்டு இருக்கிருர்கள். சமயோசிதம் பாடிக்கொண் டிருக்கையில், சந்தேகம் கதவைத் தட்டிக் கூப்பிடுகிருன். அதிர்ஷ்டத்தைக் குதிரில் ஒளியவைத்துக் கதவைத்திறக்கிருள்]

சந் :- சாவித்ரீ !

சம :- ஏன், சத்யவானே ?

சந் :- இந்தக் குதிரை வித்துட்டுப் பெரிய குதிர் வாங்க ணும்னு சொன்னில்ல !

சம :- ஆமாம் !

சந் :- இதை விலேபேசி முடிச்சுட்டேன். வாங்கிறவன் வெளியே நிக்கிருன். இப்ப இதைத் தூக்கியாகணும்.

சம :- உங்களுக்கு முன்னேயே நான் வேற ஆளுகிட்டே வித்துட்டேன். ஓட்டை கீட்டை இருக்கான்னு உள்ளே இறங்கி பார்த்துகிட்டு இருக்காரு ! (குதிரிடம்) என்னங்க இன்னுமா பாக்கிறீங்க ?

அதி :- இல்லே...... பார்த்தாச்சு. (வெளியே வந்து) குதிரு நல்ல வசதியான குதிரு. இது இல்லேன்ஞ உங்களுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குமே ?

சம :- ஆமாம் ! (அவனிடம் கேட்கிருன்) வசதி ரொம்பதான் ! ஆஞ ரொம்பச் சின்னது. இதைவிடப் பெரிசா இருந்தாதான் ஒரு ஆளு கஷ்டமில்லாம உள்ளே இறங்கலாம்.

சந் :- இறங்கக் கஷ்டமே இல்லியே. நான் எத்தனேயோ தடவை எறங்கி நெல்லு தள்ளியிருக்கேனே.

அதி :- நெல்லு தள்ள இறங்கலாம்...............

சந் :- இந்தா பாருங்க ! எவ்வளவு தாராளமா இறங்க முடியுதுன்னு !

(இறங்குகிருன். அவன் குதிரில் இறங்கியதும் அதிர்ஷ்டம் சம யோசிதத்தை அணைத்துக்கொள்ளுதல்)

சந் :- (உள்ளிருந்து.) எப்படியிருக்கு பாத்திங்களா குதிரு, வழ வழன்னு ?

அதி :- (சமயோசிதத்தின் கன்னத்தைத் தடவி) ஆமாம். கண்ணாடி மாதிரி இருக்கு!

சந் :- (உள்ளிருந்து) இதுக்கு ஒரு குற்றம் சொல்ல முடியாதுங்க.

அதி :- (அவனை அணைத்தபடி) முடியாது, முடியாது. குற்றம் சொல்றவன் முட்டாள்.

சந் :- அதிர்ஷ்டமான சாமான். நீங்க எவ்வளவு பணம் கொடுத்தாலும் தகும். மதிப்பில்லாதது. எவ்வளவு சுத்தடக்கமா எவ்வளவு லக்ஷணமா இருக்கு பாத்தீங்களா?

அதி :- ஆமாம். இந்த லக்ஷணந்தானே என் மனசைக் கவருது.

சந் :- இந்தக்குதிரிலே நெல் எடுக்க எடுக்கக் குறையாதுங்க. இது உங்களைப்போல கூட்டாளிகளுக்குக் கட்டாயம் இருக்கணும்.

அதி :- அதுக்குத்தானே வந்தேன். இது நம்ப வீட்டிலே இருந்தா அப்புறம் கவலையே இல்லை.

(அவனை நோக்கிச் சொல்கிறுன்)

சந் :- அப்ப நீங்களே எடுத்துக்கிறீங்கள்ளே?

அதி :- ஆக! ஆக! நீங்களே கொடுக்கும்போது.

சந் :- குதிரு விலையிலேமட்டும் குறைக்காதீங்க.

அதி :- விலை கிடக்குதுங்க, விலை! விரும்புன சாமான் கிடைச்சா சரி!

சந் :- அப்ப தூக்கிக்கொள்ளுங்க!

(அதிர்ஷ்டம் சமயோசிதத்தை தூக்கிக்கொண்டு மெய்மறந்து ஆடுகிறுன். இருவரும் ஆனந்தத்தில் இருக்கின்றனர். சந்தேகம் குதிருக்கு வெளியே தலையை நீட்டுகிறுன்.)

32309

[முடிவில் சமயோசிதம் குஷ்டரோகி ஆகிறாள். தன்கேவல நடத்தையை நினைத்து வருந்துகிறாள்.......... துறவியான சித்ராவைச் சந்தித்து........அவள் வழி பின்பற்றுகிறாள்.]

தென்றல் வெளியீடு.

# திருக்குறள் இசைப்பாடல்கள்.

## (அறத்துப்பால்.)

∴

(பாவலர் தொ. ப. வேலாயுதசாமி.)

"செவிக்கின்பம் பயப்பது மாத்திரமே இசை எனச் சிலர் கருதுகின்றனர். உண்மையான இசை அஃதன்று. செவிக்கின்பம் விளைவிக்கும் அதே நேரத்தில், இதயத்திற்கும் இன்பம்தந்து, மனித அறிவைப்பண்படுத்தும் ஆற்றல்வாய்ந்த இசையே இசையெனப்படும். செவிக்கின்பம் பயப்பதொன்றே இசையின் பயன் எனக்கொண்டால்; இசைக்கருவிகள் மூலம் இசைக்கப்படும் இசையே போதும். ஆனல் நாம் அத்துடன் மன நிறைவு கொள்கின்ருேமா? தமிழிசை வேண்டுகிருேம். அதிலும பொருள் நயம், சொல் நயம் தேடுகின்ருேம்.

எனவே இசையெனப் படுவது சுவை மட்டுமின்றி பயனுடையதாகவும் அமைதல் வேண்டும். அத்தகைய பண்பும் பயனும் ஒருசேர பாடப்பட்ட பாடல்கள்தாம் இந்தத் **திருக்குறள் இசைப்பாடல்கள்**. ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு குறள் பொதிந்துள்ளது! இதில் அறத்துப்பால் கருத்துக்கள் அனைத்தும் அடங்கியுள்ளன. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற முறைப்படி பாடல்கள் அமைந்துள்ளன. ஏற்ற பண்ணில் இசைத்துப் பாடலாம். குறள் கருத்துக்கள் நாட்டில் பரவிப் பலன் தர **திருக்குறள் இசைப்பாடல்கள்** நன்கு வழிகாட்டும்."

— மாலைமணி.

**42 பக்கங்கள்.]** **[விலை 0-7-0.**

புதல் வெளியீடு.

# மின்னொளி.

(ப. கண்ணன்.)

"சீர்திருத்தச் சிறு நாடகம், வானொலி நிலையத்தில் நடைபெற்ற கிராமிய வாழ்க்கைச் சித்திரம்."

* * *

"அறியாமை இருளில் அவதிப்படும் நம் நாட்டுப் பெரும்பாலான கிராமங்களுக்கு **மின்னொளி** ஒரு அறிவு விளக் கென்றே கூறலாம். நம் நாட்டில் சமுதாயத் துறையிலே செய்ய வேண்டியவற்றுள், கல்வியின்மை, அறியாமை, மூட நம்பிக்கை, இன்ன பிற பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை விரட்டியடிக்கும் தொண்டே இன்றியமையாததும், அவசர மானதுமாகும். அந்தப் பணியையே செய்கிறார் **மின்னொளி** யில் வரும் பள்ளி ஆசிரியர் செல்லத்துரை. எவ்வளவோ இடையூறுகளைக் கடக்க எதிர் நீச்சலடிக்கிறார். இறுதியில் செல்லத்துரையின் குறிக்கோள் நிறைவேறுகிறது. சேற்றில் முளைத்த செந்தாமரை, மணியக்காரரின் மகள் **மின்னொளியும்** செல்லத்துரையுமே இதன் கதா நாயகர்கள். இருவரும் இறுதியில் மணங்கொள்கின்றனர். இவர்களின் பகுத்தறி வுத்தொண்டு கிராம மக்களிடையே விழிப்பைத் தருகிறது.

இந்நாடக நூல் சிற்றூர்களிலும், நகரங்களிலும் உள்ள பள்ளிகள் அனைத்திலும், மாணவர்களைக் கொண்டு நடிக்கப் பெறும் நாடகங்களுக்குப் பெரிதும் பயன்படும்."

— மாலைமணி.

**40 பக்கங்கள்.]** **[விலை: 0-6-0.**